இலவச வெளியீடு: யேர்மனி - இங்கிலாந்து-கனடா ஆனி. Juni. 2013
Free Circulation

# வெற்றிமணி
Vettimaniy

மணி 63 பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A. ஓசை 202

Orientalische Textilien & Schmuck
23 ஆண்டுகளாக நம்பிக்கை! நாணயத்தின்!! இருப்பிடம்.
சிறப்பு மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகைமாளிகை
Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

## நாம் கிள்ளிக் கொடுத்தோம்! ஆனால் அவர்கள் அள்ளிக் கொண்டார்களே!

### கேரளா மாநிலத்தில் மூனார் நகரத்து தொழிலாளர் கவலை!

## எல்லோருக்கும் முன்பு A9 தெரியும். இப்போ தமிழ் மாணவர்களின் 9A புரியும்!

### பறிபோகும் கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிரதேசம்

### மாதகலில் பாடல் காட்சி ஒளிப்பதிவு!



T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52 44137 DORTMUND Tel:0231 819288 விபரம் பக்கம் 12

புதியதோர் தொழில் நுட்பம்! புதியதோர் வாய்ப்பு!!
கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 21

Gopara Gnanam
Tel: 0231/5450028- Mob: 01713306542 மேலதிக விபரம் 8ம் பக்கம்
Rheinische Str.81-- 44137 Dortmund

உலகத் தமிழர்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும்
ஐங்கரன்
கலைஞர் JAYA TV
தொலைபேசி இல. 0044 208 543 43 22
Ayngaran foods
30 High Street Colliers Wood, Colliers Wood London, SW19 2JE- U.K
ayngaran.com
AYNGARAN

மொத்த வியாபார நிலையம்!
StaR - Impex
Kipper str.Tor.3- 44147 Dortmund
Tel.: 0231/8602696

S.K.Silks & Gold Paraadise
டோட்முண்ட் நகரில்
மாபெரும் ராஜமுத்திரை
எப்போதும் உங்கள் மனம் கவர்ந்த ஆடைகளுக்கும், ஆபரணங்களுக்கும் உன்னதமான உங்கள் ஸ்தாபனம்
S.K.Silks & Gold Paraadise
அன்பான உபசரிப்பும், அழகான ஆடைகளின் வனப்பும்! மீண்டும்! மீண்டும்!! எம்மை நாடவைக்கும்
என்றும் புதியது அழகின் இரகசியம் அது.
11th ANNIVERSARY
Mr.P.Sritharan, Proprietor
Adler str 33 - 44137 Dortmund Tel:0231 9501 647

Jewellers & Silk House
London's Largest Selections
எப்பொழுதும் நியாயமான விலை புத்தம் புது டிசைன்கள்
Rathy ரதி
28 Ealing Rd Wembley HA0 4TL London Tel: 02089033063
209 upper tooting Road tooting sw19 7gt 0208682 2233

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்




Tel.: 0201/236925
Fax: 0201/236928

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மங்கல வைபவகங்களுக்கு ஏற்ற மணவறைகள் மற்றும் சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்...

Ria MONEY TRANSFER

இதோ!!!
துரித பண மாற்றுச் சேவை!

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்

T.R.S Traders




இலங்கை, இந்திய உபஉணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

T.R.S Traders
Königswall-16 (Am Hbf)
44137 Dortmund
உரிமையாளர்: P. இராஜேந்திரவரதன்

Tel.: 0231/160 494
Fax: 0231/165 6524







# நமக்கு ஊறுகாய் போட உதவிய ஆதவன் அவர்களுக்கு எப்படி எல்லாம் உதவுகிறான்!

கையில் வீட்டுத் திறப்பு இல்லை என்றால் படபடக்கும் மனிதன் இன்று கையில் கைதொலைபேசி இல்லை என்றால் தொலைந்தே போகிறான்.

அந்த அளவிற்கு கைத்தொலைபேசி இளயவர் முதல் முதியவர்வரை ஆக்கிரமித்துவிட்டது.

மனிதன் உடல் வலிமைகுறைந்தாலும் ஊசலாடுவான் ஆனால் தொலைபேசிக்கு சாச் (வலிமை) குறைந்தால் துவண்டுபோவான்.

நாம் சூரிய ஒளியை பாவித்து ஊறுகாய் காயவைத் ததும்,பனங்கிளங்கில் ஒடியல் செய்தும் ஏன் உடுப்புக்கள் காயவைத்ததும்,காகம் குருவி கலைக்க கண்ணாடியில் சூரிய ஒளியைப்பிடித்து அந்த ஒளித்தெறிப்பை பறவையின் கண்ணுக்குபாச்சி பறவையை விரட்டியதும் எமது விஞ்ஞான உச்சமாக அன்று இருந்தது. அதன் பின் வளரவே இல்லை விஞ்ஞானம்.




அதே சூரியன் இன்றும் மாற்றம் இன்றி கிழக்கில் உதித்து மேற்கில் மறைகிறது. ஆனால் அதே சூரியனை இன்று மற்ற நாடுகள் எவ்வாறு எல்லாம் பாவிக்கின்றது. பகலில் சூரியனைனப்பிடித்து (அதன் சக்தியை) கட்டிப் போட்டு இரவில் தமக்கு வேண்டியவாறு பாவிக்கின்றார்கள்.

கைத்தொலைபேசியுடன் நடுக்கடலிலும், நடுக்காட்டிலும நடமாடும் மனிதன் அங்கு மின்சக்திபெற எங்கும் உதிக்கும் சூரியனைச் சாச்சராக (மின்னேற்றியாக)ப் பயன்படுத்து கின்றான்.கண்ணில் அணியும் கண்ணாடி (sun glass) இப்போது சூரிய ஒளியைப்பெற்று கைத்தொலைபேசியை சாச்செய்ய முடியும்.

அது மட்டுமா சூரினை தனது தேவைக்கு எப்படி எல்லாம் வளைத்துபோட்டுள்ளான் என்று பாருங்கள்.

எங்கேயும் எப்போது இனிக்கொண்டாட்டம்தான்.

**இது சோலார் வீடு**: இது கடலில் மிதக்கும், சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி நடக்கும் கடலை கூட விட்டுவைக் கவில்லை.



**சோலார் சார்ஜர்ஸ்.** சோலார் மின்சாரத்தில் இயங்கக் கூடிய வானொலி.

சோலார் சார்ஜர்ஸ். சோலார மின்சாரத்தில் எரியும் சமிக்கைவிளக்குகள் (சிக்னல் லைட்ஸ்)

**சோலார் சார்ஜர்ஸ்.** இந்த பெல்ட் மூலம் கேமரா சார்ஜ் போடலாம்

**சோலார் சார்ஜர்ஸ்.** சோலார் கூலிங் கிளாஸ் மூலம் மொபைல் சார்ஜ் போடலாம்.

பிரான்ஸ் லூட்ஸ் மாதா கோவில் புனிதப் பயணம்
March April june july மாதங்களில்

எம் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க யேர்மனி Dortmund நகரில் இருந்தும்.Frankfurt நகரில் இருந்தும்,பல தடவைகள் லூட்ஸ் மாதா கோவிலுக்கு பஸ் மூலம் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தொடர்புகள்: K.முருகா : 02972 7754 Handy: 0175 850 14 89

உணவு,தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 190 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய விரும்புவோர் முன்கூட்டியே உங்கள் ஆசனங்களைப் பதிவு செய்யவும். நன்றி:





Bielefeld நகரில்.... 3 in one

Lakshmi Jewellery &Silks

தங்கள் மனங்கவர் டிசைன்களில் தங்க ஆபரணத் தெரிவுகளுக்கும், வண்ண வண்ண நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கும் நினைவில் நிற்க வேண்டிய ஸ்தாபனம்
Lakshmi Jewellery &Silk

பழைய பவுனுக்கு புதிய பவுண் மாற்றிக் கொடுக்கப்படும்!

Asia super markt

திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரை காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

பலசரக்குப் பொருட்களையும் எம்மிடம் மலிவாகப்பெற்று பயன் பெறுங்கள்

Wilhelm Str.09
33602 Bielefeld

தொலைபேசி: Ruban 0179 72 35 729
http://www.lakshmi-jewellerysilks.de

Tel:0521 4283 510


தொலைபேசி: Ruban 0179 72 35 729
http://www.lakshmi-jewellerysilks.de



Dortmund நகரில் வெற்றிமணி விழா 14.09.2013

## வெற்றிமணி

**தமிழ் எங்கள் உயிருக்கு மேல்**
————————கவிஞர்.வி.க



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் **மு.க.சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
**கலாநிதி**
**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

**Brinker Höhe.13**
**58507 Lüdenscheid**
**Germany**
**Tel: 02351/45 88 62**
**0157 88 77 31 56**

e-mail: vettimaniy@hotmail.com

QB 830

**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது
**அரவிந்தர்**

பத்திரிகை வடிவம்
**சிவகுமாரன் சஞ்ஜீவன்.**B .Eng (Hons)



# நாம் கிள்ளிக் கொடுத்தோம் ஆனால் அவர்கள் அள்ளிக் கொண்டார்களே!





கேரளா மாநிலத்தில் மூனார் நகரத்தில் 90 வீதமானவர்கள் தமிழர்கள். இவர்கள் ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்ய அமர்தப் படவர்கள். பலரும் தமிழகத்தில் இருந்து வந்தவர்களே!

எங்கிருந்து எங்கு வந்து வாழ்ந்தாலும் அவர்கள் நிறம்மாறாத பூக்களே! தமிழில் அவர்களுடன் பேசும்போது அவர்கள் முகத்தில் அந்த மலர்களின் விரிவைக் காணலாம்.

நீங்கள் தமிழா? இலங்கையில் இருந்து வந்துள்ளீர்கா? ஆம் என்று சொல்வதற்குள்ளேயே அங்கு எப்படி இப்போ! எங்கள் மக்கள் இன்னும் மடிகிறார்களா? விடியுமா? இலங்கை அரசுக்கு அப்படி என்ன கோவம் தமிழர்கள் மீது! ஒரு நாடு ஒரு இனம் என்கிறார்கள் பின்பு ஏன் ஒரு இனத்தை மட்டும் வதைக்கிறார்கள்.

ஐ.நா சபையில் கேள்வி கேட்கும் அளவிற்கு ஒரு சாதராண தோட்டத் தொழிலாளி ஈழத்தமிழர் பற்றிய விபரமும் அறிவும் உள்ளவர்களாகத் திகழ்கின்றார்கள். அடுத்த கேள்வி பிரபாகரன் இருக்கின்றாரா? இறந்துவிட்டதாக அரசு சொல்கிறதே! இந்தக் கேள்விக்கு பதில் என்னிடம் வரும் முன்னரே அவர்கள் எண்ணம் ஏக்கம் என்ன என்பதை புரியமுடிந்தது. நானும் அவர் உங்களுடனேயே இருக்கிறார் என்றேன்.



எமக்கு இருக்கும் உணர்வு வேறு! இங்கு அரசியல் செய்பவர்களது மனதில் வேறு. அவர்கள் எமக்காகக் குரல் கொடுப்பதாக எண்ணி ஏமார வேண்டாம். (ஒரு சிலர் விதிவிலக்கு) காங்கிரஸ் ஒரு போதும் தமிழர்களுக்கு துணைபோகாது. ஆனால் பலிக்கடவாகக் பின் நிற்காது. இது ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல எமக்கும் பொருந்தும். இலங்கையில் 2009 கடும் யுத்தம் நடந்த வேளை நாம் இங்கு ஒரு நாள் சம்பளைத்தைக் கொடுத்தோம். ஒரு லட்சம் மக்களது சம்பளத்தில் அதுபிடிக்கப்பட்டது.அப்டிச் செய்தது எமக்கும் பிடித்திருந்து. ஆனால் அந்தப்பணம் யார் மூலம் யாருக்குபோனது என்றது இதுவரை தெரியாது. அள்ளிக் கொடுக்காவிட்டாலும் நாம் கிள்ளிக் கொடுத் தோம் ஆனால் அவர்கள் அள்ளிக் கொண்டார்களே! அள்ளிக் கொடுத்தார்களோ ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

கொடுத்தில் எமக்கு நிறைவு உண்டு.

அடுத்து தெருவில் நுங்கு விற்கும் தொழிலாளி. நீங்க தமிழா என்றார். ஆம் தமிழ்தான் என்றோம். உடன் தப்பகாக எண்ணாவேண்டாம் உங்களிடம் ஒன்று கேட்கலாமா? கேளுங்கள் என்றோம். எங்கள் தமிழர்கள் இப்போ மகிழ்வாகச் சுதந்திரமாக இருக்கிறார்களா? என்றார். நான் இரண்டும் இல்லை!ஆனால் இருக்கிறார்கள். என்றேன். உடனே அவர் ஆவேசத்துடன் எல்லாம் இந்திய அரசின் வேலை என்றார். நமக்கு இருக்கும் உணர்வில் கொஞ்சமும் அவர்களுக்கு இல்லை. தமிழ் தமிழ் கதைக்க எனக்கு ஆசையாக உள்ளது.

இடையில் நான் ஒரு கேள்வி அவரிடம் கேட்டேன். ஏன் எம்மை கேள்விகேட்பதற்கு முன்பாக தப்பகாக எண்ணாவேண்டாம் உங்களிடம் ஒன்று கேட்கலாமா? என்று கேட்டீர்கள் என்றேன். அவர் சொன்னபதில் எனக்கு கவலையளித்தது. நான் ஒரு ஈழத் தமிழனிடம் உங்களிடம் கேட்ட கேள்வியைக் கேட்டேன். அவர் சட்டென்று நாம் எம் பாட்டைப்பார்ப்போம் நீ என்னுடைய பாட்டைப்பாரு என்று சொல்லிவட்டார். என்றார். நுங்கு விற்பவரின் மனம் நொந்துபோச்சு. நான் அவர்கள் சார்பில் உங்களிடம் மன்னிப்பு கேட்கின்றேன். உங்களது நுங்கின் இனமை உங்கள் உள்ளத்திலும் உள்ளது என்று சொல்லக் கொண்டு அவரை விட்டு விலகினோம். தமிழ் மக்கள் எம்பக்கம்தான் உள்ளனர்.

முன்பு ஒரு நேரம் தமிழகத்தில் இருந்து ஒருவர் இலங்கை வந்தால் அட ரஜினி என்ன செய்கிறார். சிவாஜி என்ன செய்கிறார் என்று கேட்போம். ஆனால் இன்று அவர்கள் நமில் யாரவது ஒருவரைக்கண்டால் ஈழத்தமிழன் என்ன செய்கின்றான் என்றல்வா கேட்கின்றான்.

கொஞ்சம் வெட்கம் கலந்த உண்மை இது.

உலகை வலம்வர
உற்றதுணை நாங்கள்!
Tel: 0231 5896557,
Tel: 0231 5574319
Fax: 0231 5844665
Rhenische Strasse 29
44137 Dortmund.Germany
இந்தியாவுக்கான
விசா பெற்றுத்
தரப்படும்
website : www.centurytravels.de
Mayuran 01772330010
Century Travels & Tours
email : info@centurytravels.de
Last Minute Tickets:
குறைந்த விலையில்
பயணச்சீட்டுக்கள்
நேரடியாகத்
தொடர்பு கொள்ளுங்கள்!
நேரடித்தொர்பு:
0231 985 333 27
Number: 017621682149
Ram Nishanthan
Dip.T.T.Mgt-IATA/UFTAA Montreal
017621682149

## இந்த நொடியில் என் மனதில் (26.05.13)

**மனோ கணேசன்**



# எங்கே போனார்கள் நமது இளைஞர்கள்!

அநீதிக்கு எதிராக ஜனநாயகரீதியாக போராட வாருங்கள் தமிழ் இளைஞர்களே என்று உரக்க கூச்சல் எழுப்ப வேண்டும் போல் தோன்றுகிறது. அல்லது எங்கே போனார்கள் நமது இளைஞர்கள் என்று உரத்த குரலில் கேட்க தோன்று கிறது......................

வெறும் கை உதவிகள் கொடுக்கும் அல்லது சமூக நல பொருள் உதவிகளை பின் தங்கிய மக்களுக்கு செய்யும் தொண்டு நிறுவனங்கள் நாட்டில் ஆயிரம் உள்ளன. இவற்றுக்கு சர்வதேச அமைப்புகள் பல நிதி உதவி செய்கின்றன. இவை தவறு என நான் சொல்ல வரவில்லை. ஆனால் இந்த அமைப்புகளில் சென்று அடைக்கலம் தேடாதீர்கள். தேடிவிட்டு இதுதான் முழுமையான மக்கள் சேவை என்று நினைத்து அறிவிக்காதீர்கள்....................

அல்லது வெறும் தேர்தல் நோக்கில் பிரதேச சபையிலிருந்து மாகாணசபை கடந்து பாராளுமன்றம் வரை கிடைக்கும் பதவிகளுக்காக அரசியல் செய்யும் அமைப்புகள் பல நூறு நாட்டில் உள்ளன. இவற்றையும் தவறு என நான் சொல்ல வரவில்லை. பதவிகள் பெற்று கொள்ளுங்கள். ஆனால் இந்த அமைப்புகளில் சென்று அடைக்கலம் தேடாதீர்கள். தேடிவிட்டு இதுதான் முழுமையான மக்கள் சேவை என்று நினைத்து அறிவிக்காதீர்கள்...........

வீட்டில், காரியாலத்தில் அல்லது விருந்தக மேஜையில் அமர்ந்து மது அருந்திகொண்டு விமர்சனம் செய்தபடி, எல்லா அரசியல்வாதிகளும் (மனோ கணேசன் உட்பட) திருடர்கள் என்று தீர்ப்பு வழங்காதீர்கள். இப்படி தீர்ப்புகள் வழங்க உங்களுக்கு உள்ள உரிமைகளை தவறு என நான் சொல்ல வரவில்லை. ஆனால் இப்படி தீர்ப்பு வழங்குவதுதான் முழுமையான மக்கள் சேவை என்று நினைத்து அறிவிக்காதீர்கள்................

(மீண்டும்) அநீதிக்கு எதிராக ஜனநாயகரீதியாக போராட வாருங்கள் தமிழ் இளைஞர்களே என்று உரக்க கூச்சல் எழுப்ப வேண்டும் போல் தோன்றுகிறது. அல்லது எங்கே போனார்கள் நமது இளைஞர்கள் என்று உரத்த குரலில் கேட்க தோன்றுகிறது.................

**முகப்புத்தகத்தில் முகம்காட்டிய பதில்கள் கீழே!**

நீங்கள் ஜனநாயக ரீதியில் இளைஞர்களை போராட அழைப்பது சரி...அதற்கு எமது நாட்டு அரசியல் நிலைமைகள் பற்றி தாங்கள் அறியாதது ஒன்றுமில்லை.போராட்டம் எவ்வடிவமா இருப்பினும் அதை ஒடுக்கும் கைங்கரி யத்தை அரசாங்கம் தெரிந்து வைத்துள்ளது..போராட இளைஞர்கள் துணிவார்கள் ஆனால்........அவர்களை நீங்கள் தேட வேண்டி ஏற்படும் காணாமல்போனோர் பட்டியலில்...

**அவர்களை நீங்கள் தேட வேண்டி ஏற்படும் காணாமல்போனோர் பட்டியலில்...**

Selvam Suppiah மீதமுள்ள கொஞ்ச நெஞ்ச இளைஞர்களையும் ஒன்று திரட்டி...மீண்டும் அமிர்தலிங்கம் காலத்திலிருந்து ஆரம்பிக்க போகிறீர்களா ? சரி உங்கள் நிலையை எங்களால் உணர முடிகிறது... ஆனால் இப்போது நீங்கள் சொல்லவரும் விடயம் உண்மையான ஜனநாயக ஆட்சி நடக்கும் நாட்டிற்கு தான் பொருந்தும், இலங்கைக்கு அல்ல.




ஒரு பெரிய மடாலயத்தில் சீடர்கள் வட்டமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில் ஒரு வாக்குவாதம் எழுந்தது. அது என்னவென்றால், "திருடனாக இருப்பவனுக்கு எப்போதும் கெட்டது தான் நடக்கும்" என்று ஒரு பக்கமும், இன்னொரு பக்கம் "இல்லை, நல்லதும் நடக்கும்" என்றும் வாதாடிக் கொண்டிருந்தனர். அப்போது அவர்களது குரலைக் கேட்டு வந்த ஜென் மாஸ்டர், என்ன பிரச்சனை என்று கேட்டார். அதற்கு அவர்கள் அந்த வாக்குவாதத்தை கூறினர். ஆகவே அதில் உள்ள உண்மையை புரிய வைப்பதற்கு, அவர்களுக்கு ஒரு கதையைக் கூற ஆரம்பித்தார். அது என்னவென்றால், "ஜென்கை என்பவன் ஒரு சாமுராய் மகன். அவன் "எடோ" என்ற இடத்திற்கு பயணித்தார். அங்கு ஒரு உயர் அதிகாரியிடம் பணியாளாக சேர்ந்து, அவரின் மனைவியை காதலித்து, மேலும் தற்காப்பிற்காக, அந்த அதிகாரியின் பெருந்தொகையை எடுத்துக் கொண்டு, அவருடைய மனைவியுடன் ஓடிவிட்டான். பின்னர், இருவரும் நன்கு சந்தோஷமாக வாழ்வதற்கு திருடர்களாக மாறினர். ஆனால் அந்த பெண், ஜென்கையின் நடவடிக்கைகளை கண்டு வெறுப்படைந்தாள். அதனால் அவள் அவனை விட்டு சென்று விட்டாள். ஆகவே மனமுடைந்த அவன் "பூசன்" என்ற மாகாணத்தில் பிச்சைக்காரனாக இருந்தான். மேலும் அவனது கடந்த காலத்தில் செய்த பாவத்திற்கு பரிகாரமாக, ஜென்கை தனது வாழ்நாளில் சில நல்ல காரியங்களை சாதிக்க எண்ணினான். அப்போது ஒரு குன்றின் மீது ஓர் ஆபத்தான சாலை இருப்பதால், பல பேர் மரணம் மற்றும் காயம் அடைகின்றனர் என்பதை தெரிந்து கொண்டு, அங்கு அந்த மலை வழியாக ஒரு சுரங்கம் வெட்ட எண்ணினான். பகல் நேரங்களில் உணவுக்கு பிச்சை எடுப்பதும், இரவு வேளையில் சுரங்கம் தோண்டுவதை வேலையாகவும் செய்து வந்தான். முப்பது ஆண்டுகள் ஆயிற்று, சுரங்கப்பாதை 2.280 அடி நீளம், 20 அடி உயரம் மற்றும் 30 அடி அகலம் ஆனது. வேலை முடியும் இரண்டு ஆண்டுகளுக்கு முன், அவன் பணியாளாக ஒரு அதிகாரியின் கீழ் வேலை செய்தான் அல்லவா, அவருடைய மகன் ஒரு திறமைமிக்க வாள்வீரன். அவன் ஜென்கையை கண்டுபிடித்து பழிவாங்க வேண்டும் என்று தேடி அலைந்து வந்தான். அப்பொழுது அந்த ஜென்கையும் அவன் கண்ணில் தென்பட்டார். அதனால் ஆத்திரமடைந்த அவன் "நான் உன்னை என் கைகளால் கொல்ல வேண்டும்" என்று கூறினான். அப்போது அந்த ஜென்கை "நீ என்னை தாராளமாக கொள்ளலாம், ஆனால் எனக்கு ஒரு ஆசை உள்ளது, அது என்னவெனில் இந்த சுரங்கத்தை முடித்ததும் நீ என்னை கொல்," என்று கூறினார். எனவே அந்த மகனும் அந்த நாளுக்காக காத்திருந்தான். பல மாதங்கள் கடந்தது. ஜென்கை மட்டும் தோண்டி கொண்டிருந்தான். எதுவும் செய்யாமல் இருந்ததால், அந்த வாள்வீரன் மிகவும் சோர்வடைந்தான். அதனால் அவனும் ஜென்கைக்கு உதவியாக சுரங்கம் தோண்ட ஆரம்பித்தான். ஓர் ஆண்டு காலம் ஆனதும், அந்த மகன் ஜென்கையின் வலிமையும் தன்னம்பிக்கையையும் கண்டு வியந்தான். கடைசியாக சுரங்கப்பாதை முடிந்தது. மக்களும் பாதுக்காப்பாக அந்த சுரங்கத்தில் பயணித்தனர். "இப்போது என் தலையை துண்டி, என் வேலை முடிந்தது" என்று ஜென்கை கூறினார். "எப்படி நான் என் சொந்த ஆசிரியர் தலையை துண்டிக்க முடியும்?" என்று கண்களில் இருந்து கண்ணீர் வழியக் கேட்டான்" என்று சொன்னார். பின் இறுதியில் ஜென் குரு சீடர்களிடம் "திருடனாக இருந்து, திருந்தியப் பின் நல்லதை நினைத்தால், அவனுக்கு நல்லதே நடக்கும்" என்று சொல்லி, உள்ளே சென்று விட்டார்.




KIOSK & ASIAN MARKT
Lebensmittal
பசுமையான மரக்கறிகள்
கடல் உணவு வகைகள்
இன்னும் பலசரக்குப் பொருட்கள்
அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.
Tel:02332 50 97 568
Hagener Str.158
58285 Gevelsberg
உரிமையாளர்: த.மனோகரன்

Phone Center Dortmund
பணம் அனுப்ப
பாசல் அனுப்ப..
Ria ( Money Transfer ), DPD Paket Shop, O2
Partner, 1 & 1 Partner
Internetcafe
Surfen, Chatten, eMail, Ausdrucken
Callshop
உலகம் முழுவதும் மலிவாகப் பேச!
Telefonieren, Faxen, Fax-Empfang, Kopieren
Verträge
Handy, DSL
வாங்க விற்க
Handy, PC, Netbooks, Playstation, Spiele, Zubehör
திருத்த
Handy, PC, Netbooks
alle Arten
Sim Karten
alle Arten
Geschäftszeiten:
Mo Sa: 10:00 bis 19:30 Uhr
So. und Feiertage: Geschlossen

Wickeder Hellweg 106
44319 Dortmund, Germany
www.phonecenter-dortmund.de
Tel: 0231 / 97766378



# திருட்டு

## சேவியர்

ஐயோ... என் பையைக் காணோமே.... என் பையைக் காணோமே...
விடியற்காலை நாலு மணிக்கு இரயிலில் கேட்ட கதறல் குரலுக்கு எல்லோரும் எழுந்து விட்டார் கள். இரயில் விழுப்புரத்தைத் தாண்டி வந்து கொண்டிருந்தது.
கதறிக்கொண்டே அங்கும் இங்கும் ஓடி எல்லா இருக்கைகளின் அடியிலும் தவழ்ந்து தவழ்ந்து தேடிய அந்த அம்மாவுக்கு குறைந்த பட்சம் ஐம்பது வயதாவது இருக்கும். ஒட்டிய தேகம், கலைந்த தலை, சாயம்போய் ஆங்காங்கே கிழிவதற்குத் தயாராய் இருக்கும் சேலை. அதற்கு சற்றும் சம்பந்தமில்லாத வண்ணத்தில் ஜாக்கெட்.

என்னம்மா ... என்ன இருந்துது பைல ? எங்கே வெச்சிருந்தே ? நல்லா போய் தேடிப்பாரு. இப்படியா தூங்கறது ட்ரெயின்ல ? ஆளாளுக்கு ஏதோதோ சொல்ல அந்தம்மா அழுகை இன்னும் அதிகமாகியது.
ஊரில இருந்து சென்னைக்கு வரங்கய்யா... என் பொண்ணு கல்யாணத்துக்காக ஊர்ல இருந்த உழவு மாட்டையும் நிலத்தையும் வித்து நகையும் பணமும் கொண்டு வந்தேன். பத்தாயிரம் ரூபாயும், பத்து பவுன் நகையும் இருந்துது பைல. நேற்று முழுக்க அலைச்சலுங்க. அதான் கொஞ்சம் அசந்துட்டேன். அப்படியும் தலகாணி மாதிரி வெச்சி தான் தூங்கினேன். எந்த பாவி பய எப்போ எடுத்தான்னு தெரியலையே. ஐயா... தேடிப்பாருங் கையா.... புண்ணியமா போவும். யாராச்சும் எடுத்திருந்தா குடுங்கையா... கால்ல விழறேன்... அந்த அம்மாவின் புலம்பலும் அழுகையும் இரயில் பெட்டியை நிறைத்தது.

சிலர் மீண்டும் போர்வைக்குள் நுழைந்து தூங்க, சில நல்லெண்ணம் கொண்டோர் பெட்டியில் தேடவும், யாராவது வந்தாங்களா என்று விசாரிக்கவும் துவங்கினர். அதற்குள் டி.டி.ஆருக்கு தகவல் போக, டி.டி.ஆர் வந்து சேர்ந்தார்.
யாருக்கும்மா பொட்டி காணோம் ?
“ஐயா எனக்குதான்யா... பொட்டி எல்லாம் இல்லை. பைதான்யா.. அதுக்குள்ள பத்தாயிரமும், பத்துபவுன் நகையும் இருந்துதுய்யா... எப்படி யாவது தேடிப்புடிச்சு குடுங்கையா ...“ நேரம் செல்லச் செல்ல கிடைக்காமல் போய்விடுமோ என்னும் நினைப்பிலேயே அந்த அம்மாவின் அழுகை அதிகமானது.

பேரென்னம்மா ?
“பொன்னம்மா“
இவ்ளோ நகை பணம் எல்லாம் எடுத்துட்டு வரே... ஒரு சங்கிலி கொண்டு வந்து கட்டி வைக்க வேணாம் ? கூட யாரும் வரலயா ?
“ஐயா யாரும் வரலீங்க... நான் மட்டும் தான். இந்த பணம் இல்லேன்னா என் பொண்ணு வாழ்க்கை போயிடுங்க...“
பொன்னம்மா நிறுத்தாமல் அழுதாள்.


களவு போன பொருள் கிடைக்கிறது குதிரைக் கொம்பும்மா.... முணுமுணுத்துக் கொண்டே ஒவ்வோர் இருக்கை இருக்கையாய் நடந்து கொண்டிருந்த டி.டி.யாரிடம் ஒருவர் கிசுகிசுத்தார்.
“சார்... பையைத் திருடினவனை நான் பார்த்தேன். பார்க்க ஸ்டுடண்ட் மாதிரி இருக்கானே ஐம்பத்து ஒன்பதாம் எண் இருக்கைல... அவன் தான் சார் எடுத்தவன் நான் பார்த்தேன்...நான் சொன்னதா சொல்லிடாதீங்க....“ கிசுகிசுத்துவிட்டு திரும்பிக் கொண்டார் அவர்.
டி.டி.ஆர்... ஏதும் தெரியாதவர் போல எல்லோரிடமும் கேட்டுக்கொண்டே அவனிடமும் விசாரித்தார். அவன் ஏதும் தெரியாதது போல பேச... டி.டி.ஆர் அகன்றார்.
அதன்பின் விஷயங்கள் ரகசியமாக நடந்தன. பொன்னம்மா அழுதுகொண்டு அங்குமிங்கும் அலைய, டி.டி.ஆர் செங்கல்பட்டு இரயில்வே காவல் நிலையத்துக்கு ரகசிய தகவல் அனுப்பி, இரயில் வண்டி செங்கல்பட்டு வந்ததும் சாதாரண உடையில் வந்த காவலர்கள அவனை அமுக்கி வெளியே போட்டதில் உண்மையை ஒத்துக் கொண்டான் அவன். பொன்னம்மாவுக்கு போன உயிர் வந்ததுபோல் இருந்தது.

வாயில மண்ணுவிழுந்த பயலே நீ நல்லா இருப்பியா... உன்னை கள்ளி வெட்டிச் சாரி போக.... என்று அவளுடைய பாஷையில் சபித்துக் கொண்டே கிடைத்த பையை பரபரப்பாய் பிரித்துப் பார்த்து எல்லாம் சரியாய் இருக்கிறது என்றதும் எல்லா தெய்வங்களயும் மனசுக்குள் நினைத்து நன்றி சொல்லி இருக்கையில் வந்து அமர்ந்தாள்.

அப்போது ... இன்ஸ்பெக்டர் கூப்பிட்டார்.
“வாம்மா... ஸ்டேசன் வா... கம்ப்ளெயிண்ட் எழுதி குடு“
“ஐயா... கம்ப்ளெயிண்ட் எல்லாம் வேண்டாங் கய்யா.... ஏதோ பாவி மவன் தெரியாம எடுத் துட்டான். அதான் கிடச்சுடுச்சுல்லீங்களா ? போகட்டும் நாசமாப் போறவன்... நம்ம கம்ளெயிண்ட் குடுத்தா படிச்ச முடியாம போயிடும் இல்லையா ?“ பொன்னம்மாவுக்குள்ளிருந்த கிராமத்து இதயம் பேச, திருடியவன் கூட ஏகத்துக்கு குற்ற உணர்வை முகத்தில் வாங்கி தலை கவிழ்ந்தான்.
“ஏம்மா.... உன்னோட லெக்சரை எல்லாம் ஸ்டேசன்ல வெச்சுக்கோ... வா... சீக்கிரம்... டிரையின் கிளம்பப் போவுது“ இன்ஸ்பெக்டர் கத்தினார்.
“ஐயா... என்கிட்டே இருக்கிற டிக்கெட்டை வெச்சு வேற ட் ரெயினில போவ முடியுமுங்களா ?“ அப்பாவியாய்க் கேட்டுக் கொண்டே இறங்கிய பொன்னம்மாவைப் பார்த்து சக பயணிகள் பரிதாபப் பட்டனர்.
“அவ்வளவுதான் அந்த போலீஸ்காரங்க இருக்கிற பத்துல ஒண்ணையாவது புடுங்காம விடுவானுகளா ?“
“ஆதாயம் இல்லாம எவன் ஆத்தோட போவான் ?“
“ பாவம் கிழவி...“
“சரி பரவாயில்லை... தொலைஞ்ச பணம் கிடச்சுதே..“
ஆளாளுக்கு ஏதேதோ பேசிக் கொண்டார்கள். வண்டி நகர்ந்தது.

பொன்னம்மா ஸ்டேசன் வாசலில் காத்திருக்கத் துவங்கி இரண்டு மணி நேரமாகிவிட்டது. அதற்குள் பையைத் திருடிய பையனை ஜட்டியோடு நிற்க வைத்து போட்டோ எடுக்கவும், கைரேகைகளை எடுக்கவும் ஆரம்பித்திருந்தது ரெயில்வே போலீஸ். அவனும் அவன் பாகத்துக்கு கெஞ்சினான். “ஐயா... தெரியாம செஞ்சுட்டேங்க. இதான் முதல் தடவை. எங்க அப்பா அம்மா தெரிஞ்சா அவமானத்துல செத்தே போயிடுவாங்க. தயவு செஞ்சு விட்டுடுங்கய்யா... இனிமே இந்தமாதிரி பண்ணவே மாட்டேன். என் படிப்பும் வாழ்க்கையும் போயிடும்யா...“
இன்ஸ்பெக்டர் அவனுடைய கழுத்தைப் பிடித்து தள்ளினார்.
“திருட்டு நாய்ங்க எதுதான் இப்படி பேசாம இருந்திருக்கு... சும்மா கிட... “
“யோவ் ரைட்டர் எங்கய்யா... இன்னும் காணோம். அவனை இங்கே வரச்சொல்லு.... சீக்கிரம் எப்.ஃ.ஐஆர் தயார் பண்னணும்..“
“கிழவிக்கு ஏதாச்சும் வேணுமா கேளு...“
“ஆமா எஸ்பி எங்கய்யா.. புடிக்கவே முடியலை... வெளியூர் போயிருக்காரா என்ன ?... பழனி... அவரோட செல்நம்பர் என்ன ?“

தொடர்ச்சி 6ம் பக்கம்.





Dortmund நகரில் வெற்றிமணி விழா 14.09.2013

## மாடுகளுக்காகத் தீக்குளித்து மாண்ட பிக்கு! ஓர் தேடப்பட்டடு வந்த குற்றவாளியாம்!

மிருகவதைக்கு எதிராக தீக்குளித்து உயிரிழந்த போவத்தகே இந்திரன தேரர் நீதிமன்றத்தால் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்த குற்றவாளி என்று லங்கா ஈ நியூஸ் தகவல் வெளியிட்டுள்ளது. அச் செய்தி தளத்தில் தேரோவின் குற்றங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது.குறித்ததேரோ பிரதேசபை உறுப்பினராக இருந்தபோது ஜோன்செனிவிரத்னா ஊடாக மினஇசார சபையில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி பிரதேசமக்களிடம் பெருந்தொகையான பணத்தினை மோசடி செய்திருந்தார்.

தம்புள்ள பள்ளிவாசலுக்கு எதிராக அடாவடித்தனம் செய்த பிக்குகள் கூட்டத்தில் இவரும் ஒருவர்.தன்னைத்தடுத்த படைவீரர்களுக்கு முன்னால் தன் காவியுடையை அவிழ்த்து கூச்சல்போட்டவர்.

2012 இல் வீரகெட்டியாவில் கிறிஸ்ததேவாலயம் மீதும்தாக்குதல் மேற்கொண்டவர் இவரேதான்.2013 பள்ளிவாசல் மீதும் தாக்குதல் நடத்தினார்.

இவர் தீக்குளிப்பதற்கு 3 நாட்களுக்கு முன்னர் (14.05.2013 தீக்குளிப்பு) இவருக்கு எதிராக நீதிமன்றத்தில் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு லங்கா ஈ நியூஸ் தெரி விக்கிறது. படுத்தியுள்ளது. மாடுகளைக் கொல்லவேண்டாம் மிருகவதை கூடாது. உண்மையில் புத்தசமயத்திற்கு பெருமைதரும் செயல். ஆனால் செய்தவர் நோக்கம் பெருமைக்குரியதாகத்தெரிவில்லையே! இருந்தாலும் அவர் மரணம் மிருகவதையை என்றாலும் நிறுத்தினால் நன்றே!





## ‘திருட்டு....5ம் பக்கத் தொடர்ச்சி..

‘திருட்டு....5ம் பக்கத் தொடர்ச்சி..

இன்ஸ்பெக்டர் பரபரப்பாய் இருந்தார்.

பழனி எஸ்பியுடைய செல்போன் நம்பரை கிழிந்து கிடந்த பேப்பர்களிடையே இருந்து துடைத்து எடுத்து நீட்டினார்.

“ஐயா... எஸ்பி... இருக்காருங்களா ? நான் செங்கல்பட்டு ரெயில்வே இன்ஸ்பெக்டர் தங்கதுரை பேசறேன்“

சொல்லுய்யா... என்ன விஷயம் ?“

“சார்... இன்னிக்கு காலைல ஒரு கள்வனைப் புடிச்சுட்டோம் சார். சுமார் ஐம்பதாயிரம் மதிப்புள்ள பொருட்களை கண்டுபிடித்துவிட்டோம்..“

“நல்லது... விட்டுடாதே... ஏற்கனவே உங்க ஸ்டேசன் மேல ஏகப்பட்ட பிளாக் மார்க்.... நிறைய கேஸ் பெண்டிங். நீங்க ரெயில்வே திருடங்களுக்கு சப்போர்ட் பண்றமாதிரி எல்லாம் புகார் வந்திருக்கு... அதனால் இந்த மேட்டரை ரொம்ப பெரிசு பண்ணு.. அப்போ தான் நம்ம டிப்பார்ட் மெண்ட் மேல கொஞ்சமாச்சும் மக்களுக்கு மரியாதை இருக்கும்“

“ அதனால தான் பார்ட்டியை ஸ்டேசனுக்கு வரச்சொல்லி கம்ப்ளெயிண்ட் எழுதி வாங்கிட்டிருக் கேன் சார்“

“ம்ம்... அதைப் பண்ணு முதல்ல. ஆமா... யாரு அக்யூஸ்ட். அதே ஏரியாவா ?

“ இல்ல சார்... விருதுநகர் பக்கத்துல உள்ள ஒரு பையன்“

“ அதானே பார்த்தேன்.. நம்ம ஏரியான்னா... உங்களால புடிக்க முடியாதே.... போன மாசம் ஏழு கேஸ்... உங்களுக்குத் தெரியாம நடந்திருக் காது. ஆனா எனக்கு எதுவும் வரலை. நான் இங்கே திருச்சில இருக்கிறதனால எனக்கு எதுவும் தெரியாதுன்னு நினைச்சுடாதே...“ எஸ்பி தனக்கு மாமூல் வராத வெறுப்பை வெளிக்காட்டினார்.

“ அப்படியெல்லாம்.... “

“ போதும்யா... ரொம்ப இழுக்காதே. இந்த கேஸை ஸ்ராங்கா புரஜக்ட் பண்ணு. திருட்டு நடந்த மூணு மணி நேரத்துல திருடனைப் பிடித்து ரயில்வே போலீஸ் சாதனை என்று நியூஸ் குடு. ...சரியா... “

“அப்படியே செய்யறேங்கையா... “ என்று சொல்லி போனை வைத்த இன்ஸ்பெக்டர். போனை வைப்பதற்காகவே காத்திருந்தது போல, வைத்த வுடன் அந்த காவலர்களுக்கே உரிய ....பய என்னும் கெட்டவார்த்தையை மந்திரம் போல உரைத்தார்.

மதியம் மணி இரண்டைக் கடந்தபோது இன்ஸ் பெக்டர் பொன்னம்மாவை அழைத்தார்.

“வாம்மா... வந்து இங்கே ஒரு கையெழுத்து போடு....“

பொன்னம்மா பெருவிரலை நீட்டினாள்....

“கம்ப்ளெயிண்ட் போட்டாச்சுங்களா ஐயா... நான் இப்போ கிளம்பலாமா ?“ என்று கூறிக் கொண்டே பையைத் தொட்டாள்.

“என்னம்மா... புரியாம பேசறே. இப்போ தான் கம்ப்ளெயிண்ட் போட்டிருக்கு... இனிமே இதை கோர்ட்டுக்கு கொண்டு போயி விசாரணை பண்ணிட்டு உங்க கிட்டே பொருளை எல்லாம் குடுப்பாங்க. நீ இப்போ போ.... போயிட்டு இரண்டு வாரம் கழிச்சு வா... என்னிக்கு கோர்ட்டுக்கு போகணும்ன்னு சொல்றேன்“ இன்ஸ்பெக்டர் சொல்லச் சொல்ல இடிந்து போய் உட்கார்ந்தாள் பொன்னம்மா.

“ஐயா... பொண்ணுக்கு கல்யாணம் வெச்சிருக் கேங்கய்யா... பணத்தையும் நகையையும் குடுத்துடுங்கய்யா.. எந்த கோர்ட்டுக்கு வேணும் என்றாலும் நான் வரேன்“

“ அதெல்லாம் ரூல்ஸ்படி தான் நடக்கும். நீ இப்போ போயிட்டு இரண்டு வாரம் கழிச்சு வா. எல்லா நகையையும் தனித்தனியே எடை போட்டு கணக்கு எழுதணும். இருக்கிற பணத்தை எல்லாம் கணக்கு காட்டணும்... எத்தனை வேலையிருக்கு... போ...உன்பணத்தை யாரும் முழுங்கிடமாட்டாங்க“ என்று இன்ஸ்பெக்டர் சொல்ல.. எதுவும் புரியாமல் வெளியே வந்தாள் பொன்னம்மா.

அதன்பின் இரண்டு வாரங்கள் கழிந்து பொன் னம்மா செங்கல்பட்டு ஸ்டேசனுக்கு வந்து காவல் இருக்க,

“இந்த திருட்டு நடந்தது விழுப்புரம் ஏரியாம்மா.. அதனால விழுப்புரம் ஸ்டேசனுக்கு நாங்க கேசை மாற்றியிருக்கோம். கேஸ் செலவுக்கெல்லாம் உன் கிட்டேயிருந்து ஆயிரம் ரூபாய் எடுத்திருக்கோம். யாரு கேட்டேலும், பத்து பவுன் நகை ஒன்பதாயிரம் ரூபாய்ன்னு சொல்லு... இல்லேன்னா உனக்கு ஒண்ணும் கிடைக்காது“ என்று இன்ஸ்பெக்டர் அவளை விழுப்புரம் அனுப்பினார்.

பொன்னம்மா... அழுதுகொண்டே விழுப்புரம் ஸ்டேசனுக்கு ஓட....

“இன்னும் கேஸ் கட்டு இங்கே வரலேம்மா...“ என்று நாட்கணக்கில் விழுப்புரம் ஸ்டேசன் இன்ஸ பெக்டர் இழுத்தடிக்க, பொன்னம்மா அங்கும் இங்கும் ஓடி ஓடி வாரங்கள் மாதங்களாக.... ஒருவழியாக கேஸ் விழுப்புரத்துக்கு வந்தது.

இன்ஸ்பெக்டர் அழுதுகொண்டிருந்த பொன்னம் மாவிடம் சலனமே இல்லாமல் சொன்னார்.

“ அம்மா... கேஸ் முடியறதுக்கு எப்படியும் இரண்டு மூணுவருசம் ஆகும். அதுவரைக்கும் உங்க நகைகளையும் பணத்தையும் கோர்ட் லாக்கர்ல தான் வெச்சிருப்பாங்க.... நீங்க கேஸ் ஆரம்பிச்ச பிறகு உங்க சாட்சியைச் சொல்லிட்டு நகைகளை வாங்கிட்டு போயிடலாம். ஆனா அந்த நகைகளை எல்லாம் கோர்ட் எப்போ கேட்குகோ அப்போ கொண்டு வந்து காட்டணும். அதை விக்கவோ, மாற்றவோ கூடாது. பணத்தோட நம்மரை எல்லாம் நோட் பண்ணி வெச்சிருக்காங்க. அதனால பணம் எல்லாம் கோர்ட்ல தான் இருக்கும் அது கேஸ் முடிஞ்சதுக்கு அப்புறம் தான் தருவாங்க....“

“அப்போ என் பொண்ணு கல்யாணம்..... “ என்று ஏங்கிய பொன்னம்மா கண்கள் இருண்டு போய், நடை தளர்ந்து ஸ்டேசன் வாசலிலேயே சாய்ந்தாள்.

பணம் இல்லாமல் பொன்னம்மாவின் மகளுடைய கல்யாணம் நின்று போனதும், அந்த அவமானம் தாங்காமல் பொன்னம்மாவின் கணவர் தற்கொலை செய்து கொண்டதும், ஒருவருடம் கடந்தபின்னும் இன்னும் பொன்னம்மா விழுப்புரம் கோர்ட் வாசலில் வெயிலில் அழுது கொண்டிருப்பதையும், கேஸ் என்பதே குறைந்த பட்சம் ஐந்து வருடம் என்பதை அறியாமல் வாரம்தோறும் அவள் மனசாட்சியே இல்லாத தலைமை கிளார்க்கிடம் அழுது புலம்புவதையும் எழுதுவதற்குரிய மனவலிமை எனக்கு இல்லாததால் இந்தக் கதை இத்துடன் முடிவடைகிறது

**சேவியர்**

**KAILAS** Fisch- Feinkost

டோட்முண்ட் நகரில்

இதோ கடல் உணவுக்கு ஓர் கடை

Tel:0231 137 433 95

ஒவ்வொரு வியாழக்கிழமையும் இலங்கை இந்திய மீன்கள் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்!

மீன்: 7.99 € இல் இருந்து

தரமான ஆட்டு இறைச்சி எம்மிடம் கிடைக்கும்!

Offnungszeiten:

திங்கள் முதல் சனிக்கிழமை வரை

காலை 9.00 முதல்

மாலை 20.00 மணி வரை

Adler Str.05
44137 Dortmund

பசுமையான உடன் மரக்கறி வகைகளுக்கும் எம்மை நாடுங்கள்

163 47 60 857
163 47 60 237

web.kailas-fisch.de
email:info@kailas-fisch.de

# தமிழ்மொழிக்கல்வியின் எதிர்காலம்!

- முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் -




உலக மொழிகளில் தமிழ்மொழி மிகவும் சிறப்பான மொழியாகும். அதற்குக் காரணம் தமிழ்மொழி மிகப் பழைய இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதாகும். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தப்பழைய இலக்கியங்கள் அறியப்பட்ட இலக்கியங்களாக உள்ளன. இன்னும் தமிழில் தொடர்ச்சியாக இன்றுவரை இலக்கிய ஆக்கம் நடைபெற்றுவருவதும் அதன் சிறப்புக்கு அணியாக உள்ளது. உலகமொழிகளில் ஒரு சில மொழிகளே இத்தகைய சிறப்பைப் பெற்றுள்ளன. இச்சிறு கட்டுரை தமிழ்மொழிக்கல்வியின் எதிர்காலம் பற்றிய ஒரு நோக்கைச் சுருக்கமாக முன்வைக்க முயல்கிறது.

### தமிழ்மொழிக்கல்வி பயிற்றல்:

தமிழ்மொழி தாய்மொழியாகப் பயன்படும் நிலையில் தமிழகமும் இலங்கையும் நீண்டகாலமாக அறியப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களென இனங் கணப் பட்ட இலக்கியங்கள் இதற்குச் சான்றாக உள்ளன. இவ்விலக்கியங்கள் வாய்மொழி நிலையில் பேணப்பட்டுப் பின்னர் ஏட்டு வடிவம் பெற்று இன்று அச்சு வடிவில் நூல்களாக எல்லோரும் படிக்கக் கூடிய இலக்கியங்களாக எம் மிடையே உள்ளன. எனவே சங்க இலக்கியக் கல்வியென்பது தமிழ்மொழிப் புலமையின் உயர்நிலையாகக் கணிக்கப்படுகிறது. இந்த உயர்நிலையை அடைவதற்கான தமிழ்மொழிக் கல்வி பயிற்றல் கடந்த நூற்றாண்டில் வலுப் பெற்றிருந்தது. பயிற்றல்நிலையில் இரண்டு நிலைகள் கட்டமைக்கப் பட்டிருந்தன. ஒன்று தமிழ்மொழி பயிற்றல் மொழியாக இருந்தது. மற்றது ஒரு மொழிக்கற்கை என்ற நிலையில் பயிற்றப்பட்டது. தாய்மொழி மூலமான கல்வி என்ற நிலையில் தமிழ்மொழிப் பயிற்றல் நடைபெற்றபோது மொழிப்புலமைத் தேர்ச்சி எளிதாக அமைந்தது. ஆனால் ஒரு மொழிக்கல்வி என்ற நிலையில் பயிற்றல் நடைபெற்றபோது தமிழ்மொழியில் சிறப்பானபுலமையப் பெற வாய்ப்பு அரிதாகவே அமைந்தது.

இன்னும் பள்ளி என்னும் நிறுவனமயப்பட்ட நிலையில் தமிழ்மொழிக்கல்வி பயிற்றல் ஒரு படிமுறை வளர்ச்சிநிலையாகக் கட்டமைக்கப்பட்டது. வகுப்பு நிலையில் தகுதிநிலை கணிக்கப்பட்டுப் பயிற்றல் நிலைகளுக்கான தமிழ் மொழிப்பாட நூல்களும் ஆக்கப்பட்டன. தாய்மொழிக்கல்வி என்ற ஒரு கட்டுக் கோப்புள் தமிழ்மொழிக்கல்வி இன்றியமையாத இடத்தைப் பெற்றிருந்தது. தமிழ்மொழிப்புலமைத்தேர்ச்சியும் சிறப்பான அடைவாகப் பேணப்பட்டது. பள்ளி என்ற நிறுவன அமைப்பில் நடைபெற்ற தமிழ்மொழிப் பயிற்றல் மேலும் உயர்நிலையில் பல்கலைக்கழகம் என்ற உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெறும் ஒரு நிலை ஏற்பட்டது. தமிழ்மொழிப் புலமைத்தேர்ச்சி என்ற இலக்கோடு மட்டும் இப்பயிற்றல் நின்றுவிடாமல் தமிழியல் ஆய்வுநிலைக்கு உயர்ந்தது. இந்த நிலையில் தமிழ்மொழி தொடர்பான எல்லா விடயங்களையும் ஆய்வு செய்கின்ற ஒரு விஞ்ஞான மயப்பட்ட கற்பித்தலாக தமிழ்மொழிக்கல்விப் பயிற்றல் பிறிதோர் இலக்கையும் கொண்டமைந்தது.

இது பிறமொழியாளரும் தமிழ்மொழியைக் கற்க வேண்டும் எனமுன்வருதற்கு வாய்ப்பளித்தது. மொழி ஒப்பியலாய்வுகள் தமிழராலும் பிறமொழியாளராலும் மேற்கொள்ள இதுவே காரணமாயிற்று. இதனால் தமிழ்மொழிப் பயிற்றல் தமிழர் தாயகங்களோடு மட்டும் முடங்கிவிடாமல் கடல்கடந்தநாடுகள் பலவற்றிலும் மேற் கொள்ளப்பட்டது. பிறநாடுகளில் தமிழிமொழிப்பயிற்றல் நிலையில் சில அமைப்புகளும் தோன்றலாயின. பிறமொழியாளர் தமிழ் மொழியைப் படிப்பதற்கென பயில்நிலை நூல்களும் பாடத் திட்டங்களும் அமைக்கப்பட்டன. ஆனால் இவையாவும் அந்தந்த நாட்டு மொழிப் பயிற்றல் நிலைக்கான பயில்நூல்களையும் பாடத்திட்டங்களையும் தழுவியே பெரிதும் அமைக்கப்பட்டன.

இந்நிலையில் இலங்கையில் ஏற்பட்ட “தமிழர்புலப்பெயர்வு” தமிழ்மொழிக்கல்வியின் திட்டமிடலில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இலங்கையிலிருந்து ஏறக்குறைய 40 நாடுகளுக்கு தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து சென்றனர். அவ்வாறு சென்றவர் தமது அடுத்த தலை முறையினருக்குத் தமிழைப் பயிற்றவேண்டிய நிலை ஏற்பட்டது. தாய் மொழியைப் பிறமொழியாகப் பயிற்றவேண்டிய ஒரு தனித்துவப்பயில்நிலைக் கட்டமைப்புத் தோற்றம் பெற்றது. பலநாடுகளில் சில அமைப்புகள் இப்பணியை மேற்கொண்டு தமிழ்மொழிப் பயிற்றலுக்கான பாடநூல்களையும் பயில் நூல்களையும் ஆக்கியுள்ளன. தமிழ்மொழித் தேர்ச்சிக்கான மதிப்பீட்டுத் தேர்வுகளையும் நடத்துகின்றன. இந்தப் புதிய தமிழ்மொழிப் பயிற்றல் மிகவும் கவனத்துடன் செய்யப்படவேண்டியது. கல்விப்பணியை மேற்கொண்டுள்ள கல்வியியலாளர் இது பற்றிய புதிய ஆய்வுகளைச் செய்ய வேண்டியுள்ளது புலம்பெயர்நாடுகளில் தமிழ்மொழியை ஏறக்குறையக் கால் நூற்றாண்டாகப் பயிற்றுகின்ற ஆசிரியர்களின் பட்டறிவும் இப்புதிய ஆய்வுத் தடங்களைச் சுட்டிக் காட்டக் கூடும்.

மரபான தமிழ்க்கல்விப்பயிற்சியில் தமிழ்மொழி வாய்மொழிக் கற்பித்தல் நடை பெற்றமையைச் சங்கப்பாடல்களும் உரையாசிரியர் களுடைய உரைகளும் சுட்டிக்காட்டுகின்றன. குறிப்பாக இலக்கியமும் இலக் கணமும் பயிற்றிய தமிழறிஞர் பாடநூல்கள் இன்றி மனப்பதிவு நிலையிலேயே கற்பித்தலைச் செய்தனர். ஏட்டு வடிவிலே எழுத்தாக்கம் பெற்ற பின்னரும் எல்லோருடைய கைகளிலும் ஏட்டுச்சுவடி வைத்துக் கற்றலைத் தொடரக்கூடிய வாய்ப்பும் இருக்கவில்லை. எனவே கல்விப்பயிற்றலில் மனப்பதிவு பெரிதும் பேணப்பட்டது.

### புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழிக்கல்வி

இன்று ஏறக்குறைய 40 நாடுகளில் வாழும் தமிழர் தமிழ்மொழியைப் பயிற்றுவதற்குப் பல் வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். மொழிக்கல்வி பிறநாடுகளில் ஒரே நிலையில் நடைபெறவேண்டும் என்ற நிலையில் பல திட்டமிடற் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. தமிழ் மொழிக்கல்வியும் அத்தகைய செயற்பாட்டு நடைமுறைகளையே பின்பற்ற வேண்டும் என்ற கட்டுப்பாடும் சிலநாடுகளில் உண்டு. ஆனால் இக்கட்டுப்பாடு இருந்தபோதும் தனித்துவமான கற்பித்தல் செயற்றிட்டங்களும் ஆக்கப்பட் டுள்ளன. அவற்றை முழுமையாக இக்கட்டுரையிலே எடுத்துக்கூற வாய்ப பில்லை. எனினும் ஏறக்குறைய தமிழ்க்கல்வி திட்டமிடப்பட்ட நிலையிலே உள்ள நாடுகளில் உள்ள நிலையப் பற்றிப் பொதுவான சில கருத்துகளை முன்வைககலாம்.

தொடக்கநிலையில் புலம்பெயர்நாடுகளில் நமது தலைமுறையினர் தாய்மொழியைப் படிக்கவேண்டும் என்ற ஆவலுடன் கற்பித்தல் நடைபெற்றது. குறிப்பாக ஐரோப்பியாநாடுகளில் இப்பயில்நிலை சிறந்தமுறையில் திட்டமிடப்பட்டு இருந்தது. அங்கு ஏற்கனவே தமிழர் அறிந்த பிறமொழியான ஆங்கிலம் வாழிட மொழியாக இருக்கவில்லை.
வேற்று மொழிகளே வாழிட மொழியாக இருந்தன. அதனால் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழர் தாய்மொழியின் சிறப்பை அது தனித்தியங்கும் ஆற்றலை நேரிலே காணும் வாய்ப்பைப் பெற்றனர். எனவே தாம் புலம் பெயர்ந்த தமது முதுசொமாக எடுத்து வந்த தமிழ்மொழியைப் பேணிக்காத்துத் தமது அடுத்த தவைமுறையினரிடம் கையளிக்கவேண்டும் என்ற இலக்கோடு மொழி பயிற்றலை முன்னெடுத்தனர்.

தொடர்ச்சி 8ம் பக்கம்

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது
உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை
தயாரித்து நாம் வழங்குகின்றோம்!
ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி
எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை
திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளனர்.
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de

7ம் பக்கத் தொடர்ச்சி

# தமிழ்மொழிக்கல்வியின் எதிர்காலம்

தமிழ்மொழியைப் பயிற்றும் ஆசிரியர்கள் தமிழ்மொழியில் தாய்நாட்டில் மொழித்தேர்ச்சி பெற்றவராக மட்டும் இருந்தால் போதும் என்னும் வரையறையே பேணப்பட்டது. தாய்நாட்டுப் பாடநூல்களையே கற்பித்தலுக்குரிய நூல்களாகப் பயன்படுத்தினர். வாழிட மொழியிலே பள்ளிக் கற்கைநெறியை மேற்கொண்டிருந்த தமிழ்ச்சிறார் தமிழ்மொழிக் கற்கைநெறியைப் புறநிலைக்கற்கை நெறியாக மேற் கொண்டனர்.

அடுத்த கட்டமாகப் புலம் பெயர்நாடுகளின் தமிழ்மொழிக்கல்விப் பயிற்றல் ஒரு வளர்ச்சி நிலையை அடைந்துள்ளதை அறியமுடிகிறது. இப்பயிற்றல் வெறுமனே தமிழர்களின் மொழியறிவு என்ற நிலைக்கும் அப்பால் புலம்பெயர் நாடுகளில் அந்த நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் சிறார் கட்டாயமாகத் தமது தாய்மொழியைக் கற்றிருக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டபோது தமிழ்மொழி பயிற்றல் கட்டாயமாயிற்று. பல நாடுகளில் பள்ளிகளிலே கற்பித்தலைச் செய்ய வருப்பறைகள் வழங்கப்பட்டன. பாடத்திட்டம் பொதுநிலையில் ஏனைய பிறமொழிகளையும் ஒருங்கிணைப்புச் செய்து வழங்கப்பட்டது. பாடநூல்களின் ஆக்கம் ஒரு குழுநிலையில் அமைய வேண்டும் என்ற வரையறையும் முன்வைக்கப்பட்டது. பாடநூல்களுடன் பயிலல் நூல்களும் வேண்டப்பட்டன. பாடநூலாக்கத்திற்குரிய செலவீனத்தையும் புலம்பெயர் நாடுகளின் கல்விச்சபைகள் பொறுப்பேற்றபோது ஒரு நெறிப்பட்ட கற்கையாகப் பள்ளிச் சூழலிலே தமிழ்மொழிக்கல்விப் பயிற்றல் தொடர்ந்தது. சீர்செய்யப்பட்ட இப்பயிற்றல் புலம்பெயர் நாடுகளில் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதற்குத் தாய்மொழியின் தேர்ச்சித்திறமையும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒரு தகுதிப்பாட்டையும் நல்கியது. தமிழ்க்குழந்தைகளின் வாழிட மொழிக்கல்வியின் திறன் புலம்பெயர் நாடுகளின் கல்வியாளரின் கருத்தையும் வலுப்பெறச் செய்துள்ளது.

### எதிர்கால இலக்கு:

தமிழ்மொழிக் கல்வியின் எதிர்கால இலக்குப்பற்றிய செயற்றிட்டங்களையும் இப்போது நாம் வரைபு செய்ய வேண்டிய பொறுப்பிலுள்ளோம். இன்றுவரையும் புலம்பெயர்ந்த நாடுகளில் பெரும்பான்மையாகத் தாயகத்திலிருந்து வந்த மொழிப்பற்றாளர்களே தமிழ்மொழியைப் பயிற்றும் ஆசிரியப் பணியை ஏற்றுள்ளனர். ஜேர்மன் நாட்டில் 150 இளைய தமிழாசிரியர்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் ஜேர்மன் மொழி மூலம் பள்ளிக்கல்வியைக் கற்றவர்கள். பல்கலைக்கழகக்கல்வியையும் தொடர்பவர்கள். 12 ஆண்டுகள் புறநிலைக் கல்விப்பயிற்றலில் தமிழ்க் கல்வியைக் கற்று ஐரோப்பிய நாடுகள் நடாத்தும் பொதுத்தேர்வினையும் எழுதித் தேர்ச்சியினைப் பெற்றவர்கள். இந்த ஆசிரியர்களே எதிர்காலத்தில் புலம் பெயர் நாடுகளில் பிறக்க இருக்கின்ற குழந்தைகளுக்குத் தமிழ்க் கல்வி பயிற்றிப் புதிய ஆசிரியர்களை உருவாக்கும் பொறுப்பை ஏற்றவர்களாவர்.

பொறிமுறைக் கருவிக் கையாட்சிகளின் துணைகொண்டு பள்ளிக்கல்வித்திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படும் இந்த அறிவியல் நூற்றாண்டில் தமிழ்மொழிக்கல்விப் பயிற்றலும் இணையவுள்ளது. எனினும் மொழிக் கற்கையில் எல்லா மொழிக் கற்கைக்கும் ஒரு பொதுவான பாடப்பரப்பை ஏற்புடையதாக்கவே ஆய்வுகள் முனைகின்றன. ஆனால் மொழி தான் பயன்படுகின்ற நாட்டு மக்களின் பண்பாட்டு விழுமியங்களையும் புலப்படுத்தும் ஊடகமாகவும் இருக்கிறது. மேலும் மொழிக்குரிய வரிவடிவ அமைப்பில் வேறுபாடுகளும் உள. ஒலிப்புஇ பொருள்இ தொடர் என்ற நிலையில் தனித்துவமாகச்சில மொழிகள் வியப்புறு நிலையில் ஒற்று மையுற்றிருப்பினும் வரிவடிவநிலையில் வேற்றுமை உண்டு. தமிழ்மொழியும் யப்பானிய மொழியும் ஒலிப்பு, பொருள், தொடரமைப்பு என்பவற்றிலே முற்றிலும் ஒற்றுமையாக இருப்பது யப்பானிய மாணவர்களுக்குப் பெரிதும் மகிழ்ச்சியைத் தரும் செய்தியாக இருப்பினும் வரிவடிவங்கள் முற்றிலும் வேறுபமட்டிருப்பது அவ்வளவு மகிழ்ச்சியைத்தராது. தமிழ்மொழியைக் கற்கவேண்டுமாயின் 247 வரிவடிவங்களை எழுதும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

எனவே எதிர்காலத்தில் தமிழ்மொழிக் கற்கையில் தமிழ் எழுத்து 247யும் எளிதாக எழுதப் பயிற்ற வேண்டும். புதிய கற்பித்தல் முறையிலே தமிழ் எழுத்துகளை அ தொடங்கி ஔ வரையிலான தொடர்நிலையில் பயிற்றுவது மிகக் கடினம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. கோட்டு அமைப்பிலுள்ள எழுத்துகளையே முதலில் பயிற்ற வேண்டும் என்ற முனைப்பான செயற்பாடும் தொடர்கிறது. தாயகத்திலும் தாய்மொழியாகத் தமிழ்மொழியைப் பயிற்றும்போதும் இம் முறையே பின்பற்றப்படுகிறது. ஆனால் இம் முறையால் மேல்நிலை வகுப்புகளில் தாயக, புலம்பெயர் இருவகையினரும் அடைவுமட்டம் இன்றியே உள்ளனர். வரிவடிவங்களை தமிழ்நெடுங்கணக்கு அட்டவணைப்படியே மாணவர் நினைவிற்கொள்ள ஏற்ற உத்திகளைக் கையாண்டு பயிற்ற வேண்டும். அமைப்பு நிலையில் அவற்றை வகைப்படுத்தி விளக்கலாம். ஓர் எழுத்துப் பிறிதொரு எழுத்தாக மாற்றமடையும் போது அதனோடு இணையும் பகுதியைத் தெளிவாகச் சுட்டிக்காட்ட வேண்டும்.

அடுத்து மொழிச் சொற்களைக் களஞ்சியப்படுத்தும் முறை பயிற்றப்பட வேண்டும். ஒவ்வொரு வகுப்பு நிலையிலும் சொற்களஞ்சியம் மாணவர் தொகுக்க வேண்டும். இதனால் வாழிட மொழிச் சொற்களோடு பொருள் நிலையில் வேறுபடும் சொற்களை உடனடியாக இனங் கண்டு கொள்ள வாய்ப்பு ஏற்படும். கேட்டல், பார்த்தல், வாசித்தல், கிரகித்தல், எழுதுதல் என்ற ஐந்து திறன்களும் மொழிக்கல்விப் பயிற்சிக்கு அடித்தளமானவை. எதிர்காலத்தில் இத்திறன்களை வளர்க்கப் புதிய பொறிமுறைகளைத் தேடுவதை விடுத்து ஆசிரியரின் கற்பித்தற் செயற்பாட்டால் வளர்ப்பதேநன்று. ஆசிரியரது ஒலிப்பு முறையை நேரிற் கேட்டுத் தானும் ஒலிப்பதால் மொழியைப் பயிலும் மாணவனுக்கு ஒரு தன்னம்பிக்கை உருவாகிறது.

பாடநூல்களையும் எளிதாக்குவது தகாது. செம்மொழியான தமிழ்மொழியைக் கற்கும் ஆற்றல் எதிர்காலத் தலைமுறையிடம் இல்லையெனக் குறைவாக மதிப்பிடுவதும் தவறு. மனப்பதிவுப் பயிற்சியையும் நினைவாற்றலையும் நிறைவாகப் பயிற்ற வேண்டும். உலகை வலம் வரும் மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்று. தமிழ்மொழி இலக்கியப் பதிவுகள் காட்டும் மனித விழுமியங்களையும் மனித வாழ்வியலையும் பிறமொழியாளர்கள் அறியச் செய்யும் இலக்கே எதிர்காலத்தமிழ் ஆசிரியர்களின் தலையாய பணியாகும். அதனைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு இன்றைய புலம்பெயர் நாட்டு இளைய ஆசிரியர்களை நாம் ஆற்றுப்படுத்த வேண்டும்.



# ரஜினி விட்டாலும் இரசிகர்கள் விடுவதாக இல்லை!

இன்று ரஜினியை வைத்து படம் எடுப்பவர்களுக்கு ஒருபடிமேல் இரசிகர்கள் சென்று விட்டார்கள். அவர்கள் ரஜினிக்காக எழுதும் நெருப்பு வசனங் களைப் பாருங்கள்.
ரஜினிகாந்த் இன்று சுடப்பட்டார்... நாளை குண்டுக்கு இறுதிச் சடங்கு!
கொம்பஸை வைத்து ரஜினி நேர் கோடு வரைவார்.

ரஜினியின் நாடித்துடிப்பை ரிக்டர் அளவுகோலை வைத்து கணக் கிடுவார்கள்.
100 மீ ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டு ரஜினி முதலாவதாக வந்தார். ஆனால் ஒளி இரண்டாவதாக வந்ததைப் பார்த்து ஐன்ஸ்டீன் இறந்து விட்டார்.
அலெக்சாண்டர் கிரகாம் பெல் முதன்முதலாக தொலைபேசியை பயன படுத்தியபோது அதற்கு ஏற்கனவே ரஜினி 2 மிஸ்ட் கால் கொடுத்ததை கண்டுபிடித்தார்.
நியூட்டன் மீது விழுந்த ஆப்பிளை எறிந்ததே ரஜினி தான்.


Gopara Gnanam




வண்ண வண்ண ஆடைகள்
என்று புதிய வரவுகள்
மனதுக்கு நிறைவான விலையில்
பெற்றிட நாடுங்கள்

பசுமையான மரக்கறிகள்
கடல் உணவுப் பொருட்கள்
மளிகைப்பொருட்கள்
அனைத்தும்எம்மிடம்
தரமாகவும்
மலிவாகவும்
கிடைக்கும்.

Rheinische Str.81
44137 Dortmund- Germany
Tel: 0231/5450028
Mob: 01713306542


திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450








# மாதகலில் இளஞ்சிட்டுக்களின் பாடல் படப்பிடிப்பு!

கடந்த 31.05.2013 வெள்ளிக்கிழமை மாலை மாதகல் கடற்கரையில் வெற்றிமணி ரி.பி.பி. இணைந்து வழங்கும் வெற்றிமணி விழாவுக்கான பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டன.

சஞ்ஜேயின் இசையில் சிவகுமாரன் எழுதிய உன்தன் சிரிப்பில் முல்லைப்பூவும் பூக்கிறதே தன்னன்னா பாடல் அங்கு படமாக்கப்பட்டது. பாடலை மொழி புகழ் பல்ராமும் செல்வி விஜிதா நற்குணராஜாவும் பாடியிருந்தார்கள்.
மாதகல் இயற்கை எழில்மிகுந்த கடற்கரையிலும், வயல் குளம் சூழ்ந்த மாதகல் நுணசை முருகன் ஆலயச்சூழலிலும் படப்பிடிப்பு சிறப்பாக இடம்பெற்றது.
பாடல் காட்சியில் செல்வி பிரான்சிஸ் . மேரி ஜான் றொபேக்கா மற்றும் செல்வன் தோமஸ் அமலதாஸ் அன்ரனிதாஸ் ஆகியோர் நடித்தனர். கடலில் துணிச்சலாக படகோட்டியவர். திலீபன், ஒரு கட்டத்தில் படப்பிப்பில் மறந்து பாதுகாப்பு வலயத்தையும் தாண்டிவிட்டோம். உடனடியாக நேவியின் விசில்சத்தம் கேட்டது. படகோட்டி பயந்து விட்டார். ஆனால் காட்சியில் நடித்த இளம் சிட்டுக்கள் வரட்டும் கிட்ட என புன்னகையோடு சொல்லிக்கொண்டு நடித்தனர். இளையவர்களின் ஆவலுக்கு ஏதோ அவர்கள் தடைபோட முடியாது தவித்தனர்.
வண்டில் காட்சிகள் சிறப்பாக அமைந்தன.வண்டிலை தந்து விரும்பியபடி எல்லாம் எடுக்க உதவியர் திரு.கணேசன் அவர்கள். மாதகல் மக்கள் ஒரு படப்பிடிப்பு நடைபெறுவதாக அறிந்து மகிழ்வுடன் வந்து பார்த்து இரசித்தனர். ஒளிப்பதிவினை கண்ணாவும், அவருக்கு உதவியாக அவ்வப்போது. கமல்.எஸ்.கே.யும் உதவினார். பாடலின் இனிமை படப்பிடிப்பிலும் நடிப்பிலும் ஒருங்கே இணைந்ததை இரசிகர்கள் விரைவில் காண்பார்கள். படப்பிடிப்புக்கான சகல உதவிகளையும் தயங்காது செல்வி.சுபா.சபாரத்தினம் செய்து வெற்றிமணியின் பாராட்டைப்பெற்றார்.








# வாழ்க்கை முறை மாற்றத்தினால் நீரிழிவை சீராக வைத்திருக்கலாம்!!!





தற்போதைய நோய்களில் நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தான் அதிகம் உள்ளது. இத்தகைய நோய் உண்மையில் முற்றிலும் குணமாகாது. ஆனால் அவற்றை அளவுக்கு அதிகமாகவிடாமல், சீராக வைக்க முடியும். இவை அனைத்தும் வாழும் வாழ்க்கை முறையைப் பொறுத்ததே ஆகும். ஆகவே நீரிழிவு இருப்பது தெரிந்துவிட்டால், பின் நிச்சயம் வாழும் வாழ்க்கை முறையிலும் சில மாற்றங்கள் வேண்டும். இத்தகைய மாற்றங்களை மேற்கொண்டு வந்தால், இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை அதிகரிக்காமல் தடுக்க முடியும். ஆனால் அவ்வாறு வாழ்க்கை முறையில் மாற்றங்களை கொண்டு வராவிட்டால், பின் இரத்தத்தில் சர்க்கரையின் அளவானது அதிகரித்து, சில நேரங்களில் கண் தெரியாமல் கூட போய்விடும். மேலும் தற்போதைய அவசர உலகில் வாழ்க்கை முறையானது சரியாக இல்லை. அதிலும் வேலைக்கு செல்பவர்களுக்கு, அதிக வேலைப் பளுவினால் மன அழுத்தம், மன இறுக்கம் போன்றவை ஏற்பட்டு, உடலுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன. எனவே உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள, ஒருசில மாற்றங்களை அவ்வப்போது நிகழ்த்தினால், உடல் ஆரோக்கியமாக இருப்பதோடு, நீரிழிவு இருந்தாலும் அதிகரிக்காமல் இருக்கும். அதுமட்டுமின்றி, நீரிழிவைக் கட்டுப்படுத்த மருத்துவர் கொடுத்த போதிய மருந்துகளையும் மறக்காமல் சாப்பிட வேண்டும். சரி, இப்போது எத்தகைய மாற்றங்களை பின்பற்ற வேண்டும் என்று பார்ப்போமா!!!

நடைப்பயிற்சி இறுக்கமான வாழ்க்கை முறையில் நடைப்பயிற்சி ஒரு சிறந்த மற்றும் ஆரோக்கியமான உடற்பயிற்சி. எனவே அலுவலகத்திற்கு செல்லும் போதோ அல்லது காலையில் எழுந்தோ சிறிது நேரம் நடைப்பயிற்சியை செய்யும் பழக்கத்தை கொள்ள வேண்டும். இதனால் உடல் எடை அதிகரிக்காமலும் இருக்கும்.

யோகா சில ஸ்பெஷல் யோகாசனங்களை செய்து வந்தாலும், இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தலாம். எனவே தினமும் உடலை பிட்டாகவும், நீரிழிவை சரிசெய்யவும் யோகாசனங்களை செய்ய வேண்டும்.

இயற்கை இனிப்புகள் செயற்கை இனிப்பான சர்க்கரையை உணவில் சேர்ப்பதை தவிர்த்து, இயற்கை இனிப்புகளான தேன் மற்றும் சுகர்-ப்ரீ போன்றவற்றை பயன்படுத்த வேண்டு

மனஅழுத்தத்தை குறைப்பது தற்போது நிறைய பேர் மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு காரணம் அதிகப்படியான வேலை அழுத்தம் தான். எனவே அதனை சரிசெய்ய அவ்வப்போது தியானம் செய்வதைப் பழக்கமாக கொள்ள வேண்டும்.

கார்போஹைட்ரேட்டை தவிர்ப்பது டயட்டில் கார்போஹைட்ரேட்டை அதிகம் சேர்ப்பதை தவிர்க்க வேண்டும். குறிப்பாக ஒளிச்சேர்க்கை செய்யும் உணவுப் பொருட்களான அரிசி மற்றும் உருளைக்கிழங்கை அறவே தவிர்க்க வேண்டும். இந்த இரண்டையும் சிறிது கூட உணவில் சேர்க்கக் கூடாது. அதற்கு பதிலாக ப்ரௌன் அரிசி, கோதுமை பிரட் மற்றும் தினை மாவு போன்றவற்றை அளவாக சேர்த்துக் கொள்ளலாம்.

எடை அளவான எடை இருந்தால், நீரிழிவை நிச்சயம் கட்டுப்படுத்த முடியும். அதற்கு அதிக எடையும், நீரிழிவும் உள்ளவர்கள், எடையை குறைக்கும் உடற்பயிற்சிகளை தொடர்ந்து செய்து வர வேண்டும்.

மாத்திரைகள் சாப்பிடுவது என்னதான் வாழ்க்கை முறையை மாற்றினாலும், நீரிழிவைக் கட்டுப்படுத்தும் மாத்திரை மற்றும் மருந்துகளை தவறாமல் சாப்பிட வேண்டும். இல்லையெனில், இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரித்து, உடலின் மற்ற அனைத்து உறுப்புக்களும் பாதிக்கப்படும்.

அடிக்கடி சாப்பிடுவது நீரிழிவு இருந்து, அதனை தடுப்பதற்கு மருந்துகளை உட்கொள்ளும் போது, இரண்டு மணிநேரத்திற்கு ஒரு முறை கொஞ்சம் சாப்பிட வேண்டும். அவ்வாறு சாப்பிடாவிட்டால், பின் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு மிகவும் குறைந்து ஆபத்தான நிலையை உண்டாக்கிவிடும்.

அடிக்கடி இரத்த பரிசோதனை மாதத்திற்கு ஒரு முறை இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை பரிசோதிக்க வேண்டும். பின், அதற்கேற்றாற் போல் நடந்து கொள்ள வேண்டும்

ஆல்கஹால் நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு, ஆல்கஹால் மிகப் பெரிய எதிரி. ஏனெனில் இதில் சர்க்கரை மற்றும் கொழுப்புக்கள் அளவுக்கு அதிகமாக நிறைந்துள்ளது. அதுமட்டுமின்றி, ஆல்கஹாலில் எளிய சர்க்கரைகள் இருப்பதால், எளிதில் ஆக்ஸிஜனேற்றப்படுகிறது.

முழு உடல்நல பரிசோதனை நீரிழிவு என்பது சாதாரணமான நோய் அல்ல. அது முற்றினால் உடலின் மற்ற உறுக்கபுளான கண்கள், சிறுநீரகம், இதயம் மற்றும் பல உறுப்புகள் பாதிக்கப்படும். எனவே ஆறு மாதத்திற்கு ஒரு முறை உடலை முழுமையாக பரிசோதித்துவிட வேண்டும்.

ஸ்ரீ கருமாரியம்மன் ஜோதிடம்



உலகப்புகழ்பெற்ற ஜோதிடர் இந்திய பாரம்பரியத்திலிருந்து

பண்டிதர் நாராயண சுவாமி

இந்தியவிலிருந்து வருகை தந்துள்ள பண்டிதர் நாராயண சுவாமி உங்களின் துள்ளியமான கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம், கைரேகை போன்ற விபரங்கள் மற்றும், தாயத்துக்கள் சத்கர ஸ்தாபனங்கள் வழங்கப்படும். சலகல விதமான பில்லி, சூனியங்களில் இருந்து விடுதலை பெற்றுத் தரப்படும். மோகினிப்பேய், இப்படி ஏராளமான வேதனைகளுக்கு தீர்வு தரப்படும். அன்பர்களே! உங்கள் எல்லாவிதமான பிரச்சனைகள் தீர, ஒரு முறை எங்களை நாடுங்கள். தொர்பு கொள்ளுங்கள்:

**உங்களுக்கு இது போன்ற ஏதாவது பிரச்சனைகள் உள்ளதா?**
உடல்நலம்,திருமணயோகம்,
வாஸ்த்து வாஸ்திரம், பெயர்வசிகம்,
காதல்வசிகம், தொழில்வசிகம்,
கணவன் மனைவி,
திருமணம்,தொழில்முடக்கம் வியாபாரம்
உத்தியோகம்,குழந்தை பாக்கியம்,கண்திருஸ்டி,நீதிமன்ற வழக்குள்,தோசங்களுக்கு பரிகாரம்.

**Tel: : (0049) 0231 280 20 89**
**(0049) 0152 149 361 21**

**Paulinen Str.48**
**44137 Dotmund**
**Germany**



**உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?**
**உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.**
**அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.**



Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb³ VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN

rmb³ ist Partner der Gothaer



# வாடைக்காற்று தணியாத தாகம் கே.எஸ்.பாலச்சந்திரன் அவர்களுடன் ஓர் நேர்காணல்.



**திருமதி. ஸ்ரீரஞ்ஜினி. வி**

நாவல் எழுத வேண்டும் என்ற ஆர்வம் அல்லது உந்துதல் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

பொதுவாகவே படைப்பாளிகள் கவிதையில்தான் ஆரம்பிப்பார்கள். தொடர்ந்து சிறுகதைகள், பின்னர் நாவல் என்று தொடரலாம். என்னைப் பொறுத்தவரையில் கவிதை எழுதுவதில் எனக்கு நாட்டம் இருக்கவேயில்லை. நல்ல கவிதைகளை வாசிப்பதில், மனதில் பதிவுசெய்து கொள்வதில் நான் காட்டிய விருப்பம், மோகம் என்றே சொல்லலாம். படைப்பதில் ஏனோ இருக்கவில்லை. பல நாடகங்கள், சில சிறுகதைகளுக்குப் பிறகு நேரடியாக நாவல் எழுதப்புறப்பட்டு விட்டேன். கடலோடிகளின் வாழ்வு என்றுமே எனக்கு கவர்ச்சியானதாகவிருந்தது. நான் இளைஞனாக விரும்பி வாசித்த நாவல்களான ஆங்கில எழுத்தாளர் ஏனெஸ்ற் ஹேமிங்வேயின் 'கடலும் கிழவனும்', மலையாள எழுத்தாளர் தகழிசிவசங் கரம்பிள்ளையின் 'செம்மீன்' இரண்டையுமே நான் மொழிபெயர்ப்பா கத்தான் வாசித்தேன். அவை எனது மனதில் ஏற்படுத்திய தாக்கத்தினால், ஐதீகங்கள், நம்பிக்கைகள, போராட்டங்கள் நிறைந்த அவர்கள் வாழ்வின் தனித்துவத்தை வெறுமனே சிறுகதையில் பதிந்துவிடும் சாத்தியம் இல்லை என்று எனக்கு பட்டதினால் நீண்ட நாவலாக படைத்தேன்.

2. ஏதாவது சிறுகதைகள் முன்பு எழுதி இருக்கிறீர்களா? அதில் நினைவில் நிற்கும் ஒரு கதையின் கரு என்னவாயிருந்தது எனச் சொல்லமுடியுமா?

நான் அதிகம் எழுதிக்குவிக்கவேண்டும் என்ற மனவிசாரத்துக்கு எப்போதுமே உட்படாதவன். எப்போதாவது ஒரு பொறியாக, மின்னற்கீற்றாக ஒரு நினைவு, ஒரு அனுபவத்துளி தோன்றி 'என்னைப்பற்றி எழுது' என்று என்மனதை நெருக்குவாரப் படுத்திக்கொண்டிருந்தாலும் அவசரப்பட்டு எழுத ஆரம்பித்து விடுவதில்லை. ஆற, அமர மனதின் ஒரு மூலையில் போட்டு, கரு மெருகடைந்த பின்னர் நிதானமாக எழுதும் பழக்கத்தினால் நான் எழுதிய சிறுகதைகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். அவற்றுள் ஒன்று 'துணையாக' என்று வீரகேசரியில் வெளிவந்த சிறுகதை. வெளிநாட்டில் வாழும் ஒருவனுக்கு திருமணம்பேசி, முன்அறியாத ஒருவனுடன் வெளிநாட்டிற்கு அனுப்பிவைப்பதற்காக, மகளை அழைத்துக்கொண்டு கொழும்பு வந்து 'லொட்ஜில்' தங்கியிருக்கும் ஒரு தாய், தனது இளமைக் காலத்தில் நடந்த ஒரு நினைவுக்கீற்றினால், மனம் மாறி, மகளை அழைத்துக்கொண்டு ஊருக்கு திரும்பிப்போகிறாள். 'இலங்கையர்கோனின்' எழுதிய சிறுகதையான 'வெள்ளிப்பாதசரம்' எனக்கு மிகவும் பிடித்தது. அவர் சித்தரித்த அக்கால 'வல்லிபுரக்கோயில் திருவிழாவை' பின்புலமாகக்கொண்டு, எனது இந்தசிறுகதையின் முக்கியதிருப்பமும் அமைந்ததினால் என் மனதிற்கு இதமானதாக இன்றும் இருக்கிறது.

3. நாடகம் அல்லது திரைப்படம் மூலம் சொல்ல வரும் செய்திக்கும் நாவலில் முன்வைக்கும் கருத்துக்கும் தெரியப்படுத்தும் விதத்தில் உள்ள வேறுபாடுகள் என்ன என்று நினைக்கிறீர்கள்? (நாடகம் அல்லது திரைப்படம் ஒரு குழு முயற்சி. செலவு அதிகமனாது இருந்தாலும் அதில் முக பாவங்களால், உடல் மொழியால் செய்தியை எடுத்துச் செல்வது ஒப்பீட்டளவில் இலகுவானது. அவ்வகையில் உங்களின் நாவலின் வெற்றி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?)



**பாலச்சந்திரன் -ஆனந்தராணி**

நாடகம் காட்டூன் வரைவது போன்றது. சிலகோடுகளால், சிலவசனங்களினால், ஆழ்ந்த கருத்தினை புரியக்கூடியவர்க்கு அழுத்திச் சொல்கிறேன் புரிந்துகொள்ளும் பக்குவம் உடையவர்க்கு உணர்த்தும் சக்தி வாய்ந்தது. இதில் ஒரு சங்கடமும் இருக்கிறது. உயிரும், தசையுமாக மேடையில் இயங்கும் பாத்திரங்களோடு, பார்வையாளன் என்றுமே முற்றுமுழுதாக ஐக்கியமாகிப்போவதில்லை. திரைப்படம் என்பது பெரிய படுதாவில் ஓவியம் வரைவதற்கு ஒப்பானது. எல்லையற்ற காட்சியின் அனுகூலங்கள் நிறையவே திரைப்படத்தில் இருக்கிறன. அத்தோடு திரையில் உலவும் பிம்பங்களோடு பார்வையாளன் தன்னை இணைத்துப்பார்க்கும் சாத்தியம் சற்று அதிகமாகவே இருக்கிறது.



வாழ்வின் அடிமட்டத் திலும் வாழும் மனிதனும், கற்பனையில் அற்புதங் களை சாதிக்கும் சந்தோசம் பெறுகிறான். முந்திய தலைமுறையில் எம்.ஜீ.ஆரின் திரைப்படங்கள் வெற்றிபெற்றமைக்கு இதுவே காரணம். நாவலுக்கு இவற்றைவிட நிறையவே அனுகூலங்கள் உள்ளன. நாவல் படைப்பாளிக்கும், வாசகனுக்கும் நேரடியான பந்தத்தை உருவாக்கும் வசதி உடையது. வேறு புலன்களுக்கான தீனிவோடும் திரைப்படம் போன்றோ அல்லது நாடகம் போன்றோ நாவல் இருப்பதில்லை. நீங்கள் குறிப்பிட்ட குழுமுயற்சி என்பதிலேயே திரைப் படம், நாடகம் என்பன தனிப்பட்ட ஆளுமையை இழந்துவிடுகின்றன என்று பொருள் கொள்ளலாம். செலவு அதிகமென்பதினால், அவற்றை மீளப்பெறுவ தற்காக 'சமரசங்கள்' செய்யப்ப டலாம். நாவலுக்கு இந்தத்தடைகள் எதுவுமே யில்லை. நிச்சலனமான ஓடையைப்போல அமைதியாக வாசகனின் மனதில் சொல்ல வந்ததை அது பதிந்து செல்லும். எழுத்தாளர் சா.கந்தசாமி சொன்னதைப்போல, 'நாவல் என்பது முடிந்துவிடும் விசயமல்ல. நாவல் வாசித்து முடிக்கப்பட்டவுடன், வாசகன் மனதில் இன்னுமொரு நாவல் தொடர்கிறது'.

4. உங்களின் எழுத்துக்கூடாக நீங்கள் எதைக் காட்ட முனைகிறீர்கள்?
படைப்புக்கள் மூலம் போதனை செய்வது என்றுமே என்நோக்கமாயிருக்கவேயில்லை. அதுவும் நேரடியான பிரச்சார இலக்கியம் எனக்கு பிடிக்கவே பிடிக்காது.



11ம் பக்கத் தொடர்ச்சி....

## வாடைக்காற்று தணியாத தாகம் கே.எஸ்.பாலச்சந்திரன் அவர்களுடன் ஓர் நேர்காணல்.

சமூகத்தில் நிகழ்வனவற்றை பதிவு செய்ய விரும்புகின்றேன். வாசிப்பவரின் மனதில் அவை எழுப்பும் மறுகேள்விகளின் சாத்தியம் எனக்கு தெரியும் என்பதினால்.

5. நாடகம், திரைப்படம், நகைச்சுவை, கட்டுரை, விவரணம் என பலதுறைகளில் கால் பதித்திருக்கும் உங்களுக்கு மனநிறைவைத் தரும் செயற்பாடு என்று எதைக் கருதுகிறீர்கள்? இவை எல்லாமேதான் என்னை நாவல்துறைக்குள் செல்ல கால்கோள் இட்டிருக்கின்றன. ஒரு நடிகனுக்குரிய அவதானம், உணர்ச்சிகளை எளிதில் புரிந்து கொள்ளும் தன்மை, திரைப்படக்கார னுக்குரிய காட்சிப்புலத்தை சீராக வர்ணிக்கும் அனுபவம், நீண்டகதையில் இழையோடவேண்டிய நகைச் சுவை, இவை எல்லாவற்றையும் விவரண மாக பதிவுசெய்யும் ஆற்றல் எல்லாமே எனது நாவல் எழுதப்பட்டபோது உதவிசெய்திருக்கின்றன.

6. நல்ல இலக்கியம் என்றால் என்ன அது சமூகத்துக்கு எவ்வகையான பயனைக் கொடுக்க வேண்டும் என்று நீங்கள் நினைக் கிறீர்கள்?
நல்ல இலக்கியம் என்பதின் நோக்கம் நல்ல மக்களை உருவாக்க வேண்டியதாகவிருக்கும். ரசனைக்கு தீனிபோடுகிறோம் என்று நச்சு இலக்கி யங்கள் படைப்பவர்களும் இருக்கிறார்கள் என்பது கவலையாகவிருக்கிறது. 'எனக்காகவே எழுது கிறேன்' என்று ஒரு படைப்பாளி சொன்னபொழுது, என்மனதில் எழுந்த ஒருகேள்வி, 'அவர் எப்படிப் பட்டவராக இருக்கலாம்?' நியாயமான சநதேகம் தானே இது?

7. சமூகத்திலுள்ள பல குறைகளை நகைச்சுவையு டனும், நளினத்துடனும் வெளிப்படுத்து வதில் வல்லவர் நீங்கள். இந்த வகைக் கலை இப்போது புலம் பெயர் மக்களால் எவ்வளவு தூரத்துக்கு வரவேற்கப்படுகிறது?

நம்மை நாமே கிண்டல் செய்து கொள்வது ஆரோக்கியமானது. அதுவும் நகைச்சுவையாகச் சொல்லப்படும் அந்தக்கலை புலம்பெயர் நாடுகளிலிலே வேரூன்றியதொன்று. இருப்பினும் புலம்பெயர்வாழ் நம்மக்கள் மத்தியிலே அதற்கான தயார்நிலை இல்லாதிருப்பது எனக்கு ஆச்சர்யமாக விருக்கிறது. மாறி,மாறி புகழ்ந்து கொள்வதில் உள்ள நாட்டம், சுயவிமரிசனம் செய்து கொள்வ தில் இல்லை என்று மட்டும் எனக்கு புரிகிறது.

8. உங்களைக் கவர்ந்த புத்தகம் அல்லது எழுத்தாளர் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.

எழுத்தாளர் அ.முத்துலிங்கத்தின் ஆரம்பகாலப் படைப்பான 'அக்கா' சிறுகதைத் தொகுதியே எனக்கு மிகவும் பிடித்தது. அதில் முக்கியமாக இரண்டு சிறுகதைகள் ஷஅக்கா' மற்றது 'அனுலா'.
இந்திய சஞ்சிகையான 'கல்கி' எந்த ஆண்டில் 'ஈழத்துச்சிறுகதைப்போட்டியை நடத்தியது என்று எனக்கு ஞாபகம் இல்லாவிட்டாலும், அந்த சிறுகதைப் போட்டியின் முடிவுகளை. ஆவலுடன் பார்த்திருந்து வாசித்தது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அந்தப்போட்டியில் பரிசுபெற்ற சிறுகதைகள் முதல் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொண்ட கதைகள் வரை எல்லாவற்றையும் படித்தேன். ஆனால் அவற்றுள்ளே என் மனதில் இடம்பிடித்த கதை அ.முத்துலிங்கத்தின் 'அனுலா' என்ற இரண்டாவது பரிசு பெற்ற சிறுகதைதான்.
ஒரு இளைஞனாக இந்தச்சிறுகதையை மனப்பாட மாக ஆகுமளவிற்கு பலமுறை வாசித்திருப்பேன். இக்கதையின் ஓட்டம், கதையின் நாயக பாத்திரத்தின் குணாதிசயம் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. தன்னை நாடிவரும் அப்பாவியான கிராமப்பெண்ணை உதாசீனம் செய்யும், இதயத் தை கிழிப்பதுபோல வார்த்தைகளைக்கொட்டும் வக்கிரமான அந்தப்பாத்திரம் எனது அபிமானத்துக் குரிய அனுலாவை வேதனைக்கு உள்ளாக்குவதை நான் பரிபூரணமாக வெறுத்தேன். கடைசி வசனம் கூட எனக்கு இன்றுவரை ஞாபகத்தில் இருக்கிறது 'இன்னும் எத்தனை நாளைக்கு உன்னிடம் இப்படி யாசிக்கப்போகிறேன்'.....விளக்கு எப்போது அணைந்தது.... ஒரு துளிகூட காற்று வீச வில்லையே.

யாழ்ப்பாணத்தில் தொடங்கி ரொறன்ரோ வரை.. எத்தனை மைல்கள்..எத்தனை ஆண்டுகள் என் அபிமான எழுத்தாளரை தேடிக் களைத்து, எதிர்பாராமல் ஸ்காபரொவில் முதன்முதலாக சந்தித்த வேளையிலே இந்த வசனத்தை அவருக்கு மறக்காமல் சொன்னேன். அவர் சற்று நேரம் பேசாமல் இருந்தார்.

9. பொதுவாக ஒரு நாவலுடைய முழுத்தோற்றத் தையும் பிரதிபலிக்கக்கூடியது இந்த நாவலின் அட்டைப்படத்தைப்பற்றி, வரைந்த ஓவியர் பற்றிச்சொல்லுங்கள்.
ஏறக்குறைய ஒரு முப்பது ஆண்டுகளுக்கு முந்திய ஒரு கதை, கதைக்களம் எங்கள் யாழ்ப்பாண மண். இவற்றுக்குப் பொருத்தமான ஒரு ஓவியர் ஏறக்குறைய அந்தக் காலகட்டத்தைச் சேர்ந்த நாவல்களுக்கு அட்டைப்படம் வரைந்த ஓவியராக இருக்கவேண்டும். ஏனென்றால் எங்கள் மண்ணின் முகங்களை அவர்தான் சிறப்பாக வரைந்து தருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. நான் இந்திய ஓவியர்களைப் பயன்படுத்தியிருக்கலாம், அது சுலபமான காரியமாக முடிந்திருக்கும். இருந்தாலும் கூட இந்த நாவலுக்கு குறிப்பாக எங்கள் மண்ணின் ஓவியர் ஒருவர் வரைவதுதான் பொருத்தமாக இருக்கும் என நினைத்து, எனக்கு நண்பராக ஒரு காலத்திலே இருந்த, தொடர்பு அற்றுப் போய் விட்ட சிறந்த ஓவியர் ரமணி அவர்களைத் தொலைபேசி மூலம் அழைத்து இப்படியான ஒரு நாவலுக்கு நீங்கள் தான் அட்டைப்படம் வரைய வேண்டும் என்று கேட்டு, இந்த நாவலின் கதையை அவருக்கு அனுப்பி வைத்து அதைக் கொண்டு அவர் இந்த நாவலுக்கான சிறப்பான ஓவியத்தை வரைந்து தந்தார். யாழ்ப்பாணம் ரமணி அவர்களுடைய ஓவியம் இந்த நாவலுக்கு அணி சேர்க்கும் சிறப்பாக நான் கருதுகிறேன்.

உங்களின் நாவல் மூலம் இலங்கையில் உள்ள ஒரு பகுதி மக்களின் வாழ்வுக் கோலங்களை



திருமதி ஸ்ரீரஞ்ஜினி.வி

அழகாக வாசகர்களின் கண் முன்னே கொண்டு வந்திருக்கிறீர்கள். சமகால அல்லது புகலிடப் பிரச்சனைகள் பற்றியும் நீங்கள் எழுத வேண்டும் என நான் விரும்புகிறேன். நிறைவாக நீங்கள் வாசகர்களுக்கு வேறு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?



எனது நாவல் பற்றிய உங்கள் கருத்துக்கு நன்றி. நனவிடை தோய்தல் என்ற அடிப்படையிலே, எனதும் என்னையொத்தவர்களினதும் சிறு பராயங் களின் சில்மிஷங்களை, அனுபங்களை நகைச் சுவை தோய நான் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைத்தொடர் வெகுவிரைவில் நூல்வடிவில் வரவிருக்கிறது. நீங்கள் கூறியது போலவே புலம் பெயர்வாழ்வின் பதிவாக நாவல் ஒன்று எழுது வதற்கான முனைப்பும் என்மனதில் இருக்கிறது.

வாசிப்புப்பழக்கம் அருகிக்கொண்டேபோகிறது. கணினியின் அதிக்கம் மேலோங்குகிறது என்று அடிக்கடி ஆரூடம் கூறிக்கொள்பவர்களின் மத்தியிலும், ஏராளமான தமிழ் நூல்கள் தினமும் வெளியிடப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன.

இணையத்தில் கூட புத்தகவிழாக்கள் பற்றிய செய்திகள் முக்கியத்துவம் பெறத்தான் செய்கி ன்றன. கணினியில் தமிழில் எழுதுபவர்கள் கூட, தங்கள் படைப்புக்களை அச்சில் காணும் கனவு களோடுதான் உலவுகிறார்கள்.

வாசகர்களே, நீங்கள் நிறையவாசிப்பதன்மூலமே படைப்பாற்றல் மாத்திரமல்ல, நல்வாழ்வுக்கான அத்தனை ஆற்றல்களையும் பெறுவீர்கள் என்று நம்புகிறேன். தொடர்ந்து வாசியுங்கள்.




T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846







# விண்ணில் கல்யாணம் மண்ணில் கல்யாணம் நீருக்கடியில் கல்யாணம் அந்தரத்தில் கல்யாணம்!

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. ஆனால் அவை நடப்பது இப்பூலோகத்தில்தான் ஒவ்வொரு இனமும் தங்கள் மத கலாச்சார பண்பாடுகளுக்கு அமைய திருமணச்சடங்குகளைச் செய்வார்கள், இதுதான் உலகில் வழமையாக இருந்துவரும் முறையாகும்.
ஆனால் இன்று காலத்தின் கோலமாற்றங்களுக்கு ஈடாக சடங்குகள் சம்பிரதாயங்கள் யாவும் மாற்றம் கண்டு வருகின்றன.
அண்மையில் சீனாவில் ஒரு திருமணம் தெருவில் பாதசாரிகள் கடக்கும் இடத்தில் நடைபெற்றது. காரணம் மாப்பிளையும் பொம்பிளையும் முதல் முதல் அந்தப்பாதசாரிகள் கடக்கும் இடத்தில்தான் சந்தித்து கொண்டார்களாம். ( அதுதான் நம்மவர் கல்யாணங்கள் பல கோவில்களில் நடக்கின்றன போலும்). மாப்பிளையும், பெண்ணும் பெரும்பாலும் இன்றும் கோவில்களில்தான் சந்தித்து காதலை வளர்த்துக் கொள்கிறார்கள்) இன்னும் பல திருமணங்கள் அண்டவெளியில் விமானத்திலும், ஏன்! அந்தரத்தில் கயிற்றில் தொங்கியபடியும், கடலுக்கு அடியிலும்கூட திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. இம்முறைகள் வெளிநாட்டவர்களுக்கு இன்று சாதாரணமாகி விட்டாலும் நம்மவர்களுக்கு இதுவரை அப்படி இல்லை.

ஆனால் இன்று நம்மவர்களும் புதுமை என்று அவர்களது புதியபாணியினைப்பின்பற்றி திருமண எழுத்து திருமணம் என அவற்றை கடலில் கப்பலில் வாவியில் என அசத்திவருகிறார்கள்..இந்த வகையில் இளம் ஜோடிகளான ஓர்டின்-றோஷானி இருவரதும் பதிவுத்திருமணம் கடந்த வருடம் யேர்மனியில் நடைபெற்றது. இடம் : Biggesee - கப்பலின் பெயர்: Westfalen - திகதி: 22. September 2012- கப்பலில் நிண்ட நேரம்: 2 மணி நேரம்- கப்பலில் மொத்தமாக 100 பேர் உடன் கொண்டாடினார்கள்.
- Biggesee கப்பலில் திருமணம் செய்த முதல் வெளிநாட்டவர்கள் இவர்கள்தான்
கப்பலால் ஒரு பெரிய இருதயக் கேக், பிள்ளைகளுக்கு ஏற்றவாறு Waffle, juice wine எல்லாம் போட்டு செய்திருந்தார்கள்

கப்பலில் நடந்த வைபவம் தம்பதிகளுக்கு மட்டும் இல்லை வந்தவர்கள் அனைவருக்கும் ஒரு சந்தோஷமான வித்தியாசமான நிகழ்வு என்று பலரும் பேசிக் கொண்டார்கள்..வாழ்க்கை என்னும் படகிலே பயணமாகும் போதிலே வாழ்க்கையே இறை வழிநடத்தல்...
பயணங்கள் பல அதிலும் கடற் பயணம் வாழ்வோடு பின்னிப் பிணைந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பயணத்தை தேர்ந்து கொள்கின்றனர். உல்லாசக் கப்பல், பொருள் ஏற்றும் கப்பல், மீன்பிடிக்கும் கப்பல், எண்ணெய் ஏற்றும் கப்பல் இப்படி வாழ்க்கையிலும் பல பக்கங்கள் உண்டு. காற்று, புயல், பனி, அமைதி, அபாயம் இறப்பு இவை வாழ்விலும் உண்டு அத்தனையையும் தாண்டி நீரில் மூழ்காமல் இலட்சியத்தை நோக்கி (கரையை நோக்கி) பயணம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. இன்னும் ஏராளமான அர்த்தங்கள் கடற்பயணத்தில் உண்டு ஒவ்வொரு கரையையும் சேரும்போது பெறும் அனுபவம் சந்தோஷம், ஏக்கம், அதிசயங்கள் என்று ஏராளம்...
திருமண வாழ்வில் காலடி வைக்கும் தம்பதிகளுக்கு இவ்வைபவம் மிக மிக பொருத்தம் - அத்தோடு நம்பிக்கை எனும் நங்கூரம் மிக மிக அவசியம். எல்லாவற்றிற்கும் அன்புதான் ஊற்று...
Ordin Thanapalsingam-- பிறந்த இடம;: Gummersbach- அப்பாவின் பெயர்: சின்னத்துரை தனபாலசிங்கம்- அம்மாவின் பெயர்: விஜயானந்தக்குமாரி-- Computerscience படித்துள்ளார-- Music இல் ஆழ்ந்த Interest இருக்கின்றது
ROSHANI:- பிறந்த இடம்: Sri Lanka- அப்பாவின் பெயர்: அருக்காஞ்சுப்பிள்ளை ஞானேஸ்வரன் -அம்மாவின் பெயர்: நிலானி- "South Asian Art History" இல் Bachelor பட்டதாரி- பரதநாட்டியத்தில் Diploma பட்டம் பெற்றுள்ளார்

## புதுமையை விரும்பும் இளையவர்கள்!








RAJE druck
ராஜி பதிப்பகம்
Spezialdruckerei Fernöstlicher Medien
Inh.: Kandiah Ampalavanapillai e.K
சகல விதமான அச்சுப்பதிப்பு வேலைகளும்
தரமானதாகக் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.
திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் போன்றவற்றுக்கு
நிழற்படம் எடுத்து நவீன முறைகளில் அல்பம் செய்து தரப்படும்.
Neu Straße 53, 58256 Ennepetal. Tel.: 0 23 33 / 60 27 96
Fax: 0 23 33 / 98 41 61 Mobil: 0 172 956 76 46 Pvt. Tel.: 0 23 33 / 62 32 8
info@rajedruck.de www.rajedruck.de

## சிங்கள மக்கள் எம்மை நேசிக்கின்றனர். எங்களுக்கு தீர்வைத் தர தயாராக உள்ளனர்.

## ஆனால் அரசியல் தலைவர்கள் தமது சுயநலனுக்காகவும், தமது பதவிகளுக்காகவும்

# எமது உரிமைகளைத் தர மறுக்கின்றனர்!

**இரா. சம்பந்தன்**

ஒன்றிணைந்த நாட்டுக்குள் இறைமை, சுயநிர்ணய உரிமை, பாதுகாப்பு ஆகியவற்றுடன் கூடிய ஓர் தீர்வையே நாம் வேண்டி நிற்கிறோம். அதற்கு மேல் நாம் எதனையும் கேட்கவில்லை. எமது கோரிக்கை நியாயமானதும், நீதியானதும் என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. அதனை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கிறது. எமக்கான தீர்வு கிடைக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

எமது கோரிக்கைகளையும், அபிலாஷைகளையும் சிங்கள மக்களில் பெரும்பான்மையானோர் ஏற்றுக்கொண்டுள்ளனர். சிங்கள மக்கள் எம்மை நேசிக்கின்றனர். எங்களுக்கு தீர்வைத் தர தயாராக உள்ளனர். ஆனால் அரசியல் தலைவர்கள் தமது சுயநலனுக்காகவும், தமது பதவிகளுக்காகவும் எமது உரிமைகளைத் தர மறுக்கின்றனர். விடுதலைப் புலிகளை பல நாடுகள் ஒன்று சேர்ந்தே அழித்திருந்தன. புலிகள் இன்று இருந்திருந்தால் வடக்கு, கிழக்கில் இடம்பெற்றுவரும் பல்வேறு கெடுபிடிகள் ஏற்படுவதற்கு வாய்ப்பிருந்திருக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சமகால அரசியலும், இன்றைய தமிழ் மக்களின் நிலைப்பாடுகளும் என்னும் பொருள்பற்றியும் வாக்காளர் பதவுகள் பற்றியும் திருகோணமலை சில்வெஸ்டர் ஹோட்டலில் நேற்று (26.05.2013) ஞாயிறு காலை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இன்று வடகிழக்கில் பல்வேறு கெடுபிடிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மக்கள் பல்வெறு துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். காணிகளை சுவீகரிக்கின்றார்கள். மக்களின் மீள் குடியேற்றம் முறையாக செய்யப்படவில்லை. புலிகள் இருந்திருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் நடைபெற வாய்ப்பு இருந்திருக்காது. அதற்காக விடுதலைப் புலிகள் சரியானவர்கள், பிழை செய்யவில்லை என்று சொல்லவரவில்லை.

எமது மக்கள் நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். எங்களுக்கென தனித்துவமான மொழி, கலாசாரம், பாரம்பரியம் உண்டு. குறிப்பிட்ட பிரதேசங்களில் நாங்கள் வாழ்ந்து வந்திருக்கிறோம். நாடு சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து எல்லாத்துறைகளிலும், நாங்கள் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறோம்.

நாங்கள் தமிழ் மக்கள். தனி தேசிய இனம். சர்வதேச சட்டங்களின்படி ஐ.நா. பிரகடனங்களின்படி நாங்கள் மக்கள். மக்கள் என்ற சொல்லுக்கு வலுவான கருத்துண்டு. எங்கள் உரிமைகளை நாங்கள் கேட்ட காரணத்தினாலேயே புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறோம். எமது சந்ததி இந்த நாட்டில் ஒரு உரிமையுடன் பின் சந்ததியாக வாழ வேண்டும். அதற்காகவே போராடுகின்றோம்.

**தந்தை செல்வா நினைவலைகள்**



அரசாங்கத்தில் பின் வரிசையில் இருக்கின்ற அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படுகின்ற பணம் 100 மில்லியன் ரூபா. நான் அபிவிருத்தி பற்றி கவனிக்கவில்லை என குற்றஞ்சாட்டுகிறீர்கள். அந்த பின் வரிசை ஆசனக்காரர் போல் நானும் அரசாங்கத்துடன் சேர்ந்திருப்பேனானால் 500 மில்லியன் பணத்தைப் பெற்று அபிவிருத்தியை செய்துகொள்ள முடியும். அபிவிருத்திக்காக எனது இனத்தை காட்டிக் கொடுக்க மாட்டேன். எமது இலட்சியத்தை விட்டுக் கொடுக்கமாட்டேன். எனது மக்கள் சம உரிமையுடன் வாழ வேண்டும். இரண்டாம் தரப் பிரஜைகளாக இருக்கக்கூடாது என்று விரும்புகின்றவன் நான். இந்த நாட்டில் எமது சந்ததி தலைநிமிர்ந்து வாழ வேண்டும். அதை அடகுவைக்க நான் தயார் இல்லை.

தந்தை செல்வா சாத்வீக ரீதியாக போராடினார். சமாதானம் பேசினார். ஒப்பந்தம் செய்தார். அரசாங்கத்துடன் இணைந்து ஆட்சியமைத்தார். ஒன்றும் கைகூடவில்லை.

அடுத்து ஆயுதப் போராட்டமாக மாறியது. தற்போது ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. பிறகு என்ன நடக்கிறது. சமாதானத்தீர்வை அடைவதற்கு எங்களால் ஆன அத்தனை முயற்சிகளையும் செய்கிறோம்.

எமது போராட்டம் இன்று இலங்கைத் தீவை தாண்டி வெளியே சென்றுள்ளது. ஐ.நா. சபைக்குப் போய் இருக்கிறது. ஐக்கிய நாடுக் சபையின் மனித உரிமை சபைக்குப் போயிருக்கிறது. எமது தீர்மானத்தின் அடிப்படையில் அமெரிக்கா, மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எமது நோக்கத்தை இலக்கை அடைவதற்கு நாங்கள் ஒன்றுபட வேண்டும். கவனமாகவும், நிதானமாகவும் செயல்பட வேண்டும்.

கிழக்கு மாகாண சபை தேர்தலில் நாங்கள் ஆட்சியைக் கைப்பற்றவில்லை. மூன்று மாவட்டங்களிலும் இன்னும் கூடுதலான ஆதரவு கிடைத்திருந்தால், ஆட்சியைக் கைப்பற்றி இருக்க முடியும். ஏன் இரண்டு மாவட்டங்களிலும் கூடுதலான ஆதரவைப் பெற்றிருந்தாலும், ஆட்சியைக் கைப்பற்றியிருக்க முடியும். வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கின்ற போதிலும் அதில் எமக்கு வெற்றிபெறும் சாதக நிலை உருவாகும் என்று சொல்லிவிட முடியாது. 17ஆவது சரத்து நீக்கப்பட்டு விட்டது. வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் அனுமதிக்கப்படுவார்களா? அல்லது தேர்தல் நடைபெறுவதற்கு முன் அவர்கள் வருவார்கள் என்று அரசு உத்தரவாதம் வழங்க முடியுமா? இன்றைய நிலையில் சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்படுமென்று அரசாங்கத்தினால் உத்தரவாதம் தரமுடியுமா?

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன் 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கிவிட வேண்டும். பொலிஸ், காணி அதிகாரங்களை பறித்துவிட வேண்டம் என்ற கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். காரணம் வடக்கு மாகாண தேர்தல் நடந்தால் ஆட்சி தமிழ் மக்கள் கையில் போய்விடும். தாம் ஆட்சியமைக்க முடியாமல் போய்விடும் என்பதனாலேயே 13ஆவது திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டும். பொலிஸ், காணி அதிகாரங்களை நீக்கவிட வேண்டும் என முயற்சி செய்கிறார்கள்.

ஒருமித்த நாட்டுக்குள் இறைமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமை, பாதுகாப்பு ஆகியவற்றுடன் கூடிய ஓர் தீர்வையே நாம் வேண்டி நிற்கிறோம். அதற்கு மேலாக நாம் ஒன்றையும் கேட்கவில்லை. எமது கோரிக்கை நியாயமானது. நீதியானது என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. அங்கீகரிக்கின்றது. நாங்கள் இன்று முக்கியமான காலகட்டத்தில் இருக்கிறோம். எமது கோரிக்கைகளையும், அபிலாசைகளையும் சிங்கள மக்களின் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் இனத்துவேசம் கொண்ட அரசியல்வாதிகள் அதை மறுத்து வருகிறார்கள். சிங்கள மக்கள் நேசிக்கிறார்கள். எங்களுக்கு தீர்வு தர தயாராகவுள்ளார்கள். ஆனால், அரசியல் தலைவர்கள் தமது சுயநலத்துக்காக, தமது பதவிக்காக எமது உரிமைகளைத் தர மறுக்கிறார்கள்.

நாங்கள் மீண்டும் முக்கியமான ஒரு காலகட்டத்தில் இருக்கிறோம். எமக்கு தீர்வு கிடைக்கும். அது வரும் வரை பொறுத்திருப்போம். தீர்வு கிடைக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதை கூறிக்கொள்கின்றேன். எனத் தெரிவித்தார்.

**தந்தை செல்வா நினைவலைகள்**



# மின்சாரம் என்ற பெயர் பயன்படுத்தி வருகிறோமே! அதற்கு நம் பாட்டன் இட்ட பெயர் மித்ரவருண சக்தி!

குட்டை உருவமும், நீண்ட தாடியும் கொண்ட ஒரு சாமியாரும், ஒரு மண் குடுவையும் ஒரு சில ஆங்கில வார்த்தைகளும் உங்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கலாம். முதலில் யாரிந்த சாமியார் என்பதை தெரிவித்து விடுகிறோம். இவர் தாங்க "அகத்தியர்". ஒரு சிலர் படத்தைப் பார்த்ததும் யூகித்திருப்பீர்கள்! சரி இவருக்கும் இந்த பதிவுக்கும் என்ன சம்மந்தம் என்பதைப் பார்க்கலாம்.

சுமார் 9000 ஆண்டுகளுக்கு முன் இந்தியர்கள் கண்ட விமான அறிவியல், வானவியல் சாஸ்திரம் என்ற வரிசையில் இப்போது சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழன் அறிந்து வைத்திருந்து ஒரு அரிய தொழில் நுட்பத்தைப் பற்றி விவரிப்பது தான் இந்த பதிவு.



"சன்ஸ்தப்ய ம்ரின்மாய பத்ரே
தாம்ரப்பத்ரம் சுசான்ஸ்க்ரிதம்
சாட்யெச்சிகிக்ரிவன் சர்த்ரர்ப்ஹி
கஷ்த்பம்சுப்ஹி
தஸ்தலொஷ்தோ நிததவ்யாஹ்
பர்தச்சடிதஸ்த்ஹா
சன்யோகஜ்ய்தே தேஜோ
மித்ரவருனசங்கியதம்"

புரியலை நா விட்டுடுங்க..., நீங்கள் இப்போது படித்த வரிகள் பைந்தமிழ் முனிவர் அகத்தியர் எழுதிய அகத்திய சம்கிதம் என்ற அறிவியல் பொக்கிடத்தின் ஒரு பகுதி. இதற்கான விளக்கத்தை இப்போது பார்க்கலாம்,

"ஒரு மண் குடுவையை எடுத்து அதனுள்ளே தாமிர தகடை செலுத்தி சிறிதளவு சிகிக்ரிவம் நிறப்ப வேண்டும். பின்னே அதை ஈரமான மரத்தூள், பாதரசம் மற்றும் துத்தநாகத்தைக் கொண்டு பூசி, இரண்டு கம்பிகளை இணைத்தால் மித்ரவருனசக்தியைப் பெறலாம்"

மித்ரவருனசக்தியா அப்படினா என்ன? சித்தர்கள் தவமிருந்து கிடைக்கிற சக்தியா?

Rao Saheb Krishnaji Vajhe (சுருக்கமாய் கிருஷ்ணாஜி) 1891 ஆம் ஆண்டு புனேவில் தமது பொறியியல் படிப்பை முடித்துவிட்டு, தமது துறை சார்ந்த விடயங்களை பண்டைய கால படைப்புகளில் தேடலைத் தொடங்கினார். அப்போது உஜ்ஜெய்னி மாகாணத்தைச் சேர்ந்த Damodar Tryambak Joshi (சுருக்கமாய் ஜோஷி) ஜோஷியிடம் ஒரு சில பண்டைய ஆவனங்களைப் பெற்றுத் தனது ஆய்வுகளைத் தொடர்ந்தார். அது சுமார் கி.மு 1550 ஆம் ஆண்டின் ஆவணம். நாம் மேலே பார்த்த அந்த வரிகளைப் படித்த உடன் அதைப் பற்றி தெரிந்து கொள்ள சமஸ்கிருத வல்லுனரான Dr.M.C.Sahastrabuddhe (சுருக்கமாய் புத்தே) அவர்களை அணுகினார். புத்தே அப்போது நாக்பூர் பல்கலைக்கழக சம்ஸ்கிருதத் துறைத் தலைவர். அவர் இதைப் படித்துப் பார்த்ததும் ஆச்சரியத்துடன் அதிர்ந்து போய் இது ஏதோ ஒரு டேனியல் செல்லைப் போன்ற மின்கலத்தின் கட்டுமானத்தைப் போன்று இருக்கிறது என்றார். சரி இதை மேலும் ஆராய வேண்டும் என்ற ஆர்வம் தொற்றிக் கொள்ள புத்தே அதை நாக்பூரைச் சேர்ந்த பொறியியல் வல்லுனர் P.P. Hole (ஹோல்) அவர்களிடம் அதைக் கொடுத்து ஆராயச் சொன்னார். இதைக் கேட்டதும் நமது கிருஷ்ணாஜிக்கு உற்சாகம் பீறிட்டு வர அவரும் களத்தில் குதித்தார்.

ஒவ்வொன்றாய் படித்து படித்து அதில் கூறப்பட்டதைப் போன்றே தனது மின்கலத்தை வடிவமைக்கும் போது அவர் வந்து முட்டி மோதி நின்ற இடம் சிகிக்ரிவம் என்ற சொல். நாமும் கூட அதை படிக்கையில் என்ன அது என்று சற்று யோசித்திருப்போம். அவர்களும் இது என்னவாய் இருக்கும் எனத் தினரும் போது ஒரு சமஸ்கிருத அகராதியில் "மயிலின் கழுத்துப் பகுதி" என்று இருந்ததைப் பார்த்தார்கள். உடனே அவர்கள் இருவரும் பக்ஹ் என்ற ஒரு மயில் சரணாலயத்தில் தலைமைப் பொருப்பாளராய் இருந்தவரிடம் போய் ஏதாவது இறந்த மயில்கள் உள்ளதா அல்லது இங்கிருக்கும் மயில்கள் எப்போது சாகும் என கேட்க அவருக்கு கோபமே வந்துவிட்டது. பிறகு இவ்விருவரும் நிலைமையை விளக்கிக் கூற உடனே பக்ஹ் சிரிக்க ஆரம்பித்துவிட்டார். இருவரும் திகைப்புடன் அவரை நோக்க பக்ஹ் சொன்னார் "அது மயிலின் கழுத்து அல்ல மயிலின் கழுத்தைப் போன்ற



நிறம் உள்ள பொருள்". இதைக் கேட்டதும் அவர்களுக்கு சிந்தனை முளைத்தது. ஆஹா! ஆம்! அது தான் அது!, மயிலின் கழுத்து நிறம்! அதே தான். காப்பர் சல்.'.பேட்! கண்டுபிடித்தாகிவிட்டது.

அடுத்த சில மணி நேரங்களில் மின் கலமும் தயாரானது. அந்த மின் கலத்தை ஒரு மல்டி மீட்டரை வைத்து ஆராய்ந்த போது 1.38 Open Circuit Voltage மற்றும் 23 milliampere Short Circuit Current. கிடைக்கப்பெற்றது. ஆமாம்! வெள்ளைக்காரன் Electric current என்றதை அலுப்பே இல்லாம மின்சாரம் என்று பெயர் மாற்றி பயன்படுத்தி வருகிறோமே அதற்கு நம் பாட்டன் இட்ட பெயர் மித்ரவருண சக்தி.

இந்த மித்ரவருண சக்தி என்ற பெயருக்கும் கூட விளக்கமுண்டு. வருணன் என்றால் தண்ணீர் என்பது நாம் அறிந்ததே, மிதரன் என்றால் சூரியன் என்று பொருள். ஆனால் இங்கே ஹைட்ரஜன் என்ற பொருளைக் கொள்ளும். ஏனெனில் சூரியனின் சக்தி ஹைட்ரஜனில் தான் உள்ளது. அதனால் இங்கே ஹைட்ரஜனைக் குறிக்க மித்ரா என்று குறிப்பிடுகிறார். தண்ணீரில் இருந்து ஹைட்ரஜனைப் பிரித்து எடுத்தால் மாபெரும் சக்தியை நாம் பெறலாம். எனவே அவ்வாறு பெறப்பட்ட சக்தியையே மித்ரவருண சக்தி என்கிறார் அகத்தியர்.

என்னப்பா இது அந்த காலத்துல மின்சாரமா என்று கேட்கிறீர்களா? தேடுங்கள் கூகுள் தளத்தில், பாக்தாத் பேட்டரி என்று ஆங்கிலத்தில். அது மட்டும் அல்ல ஹிஸ்டரி சேனலின் "தி ஏன்ஸியண்ட் ஏலியன்ஸ்" தொடரைப் பார்த்தவர்களுக்கு இது தெரிந்திருக்கக் கூடும்.

இருங்க இருங்க.., நம்ம பாட்டன் இதோட நிருத்திடல.. இன்னும் கொஞ்சம் தகவல் மட்டும் சுருக்கமாய் சொல்லி முடித்து விடுகிறோம்..

அவர் மேலும் கூறுவது, இது போல 100 கலன்களை செய்து தண்ணீரைப் பயன்படுத்தினால் அது பிராண வாயுவாகவும் ஹைட்ரஜனாகவும் பிரியும் என்கிறார். இந்த ஹைட்ரஜன் மிதக்கும் தன்மையுடையது எனவும் இதை ஒரு பையில் அடைத்தால் பறக்கப் பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கிறார். அது மட்டுமல்லாமல் இதே அகஸ்திய சம்ஹிதாவில் நமது நவீன கால "electroplating" என்று சொல்லக் கூடிய அதே முறையை தெள்ளத் தெளிவாக விவரித்து செயற்கையாக தங்கத்திற்கு சாயம் பூசுவது எப்படி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பு : தமிழும் சம(ஸ்)கிருதமும் சித்தர்கள் மொழியாகவுள்ளது. அகத்தியர் வாழ்ந்த காலகட்டம் குறித்த தெளிவான புள்ளி விவரம் கிடைக்கப் பெறவில்லை. சுமார் 9000 ஆண்டுகளுக்கு முன் இருந்து 3500 ஆண்டுகளுக்கு முன் வரை வெவ்வேறு காலகட்டங்களில் அவர் வாழ்ந்ததைப் பற்றிய குறிப்புகள் உள்ளது. அதனால் இந்த அறிவியல் பொக்கிடம் நிச்சயம் குறைந்தது 3500 முதல் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தமிழனால் கண்டுபிடிக்கப்பட்டது என்று கூறலாம்.


யேர்மனியில் Düsseldorf நகரில் இருந்து

சுவை பாட்டி சேவை

உங்கள் வீட்டு மங்கல வைபவங்களுக்கு சுவையாக உணவு செய்து தரக் காத்திருக்கின்றோம். கொத்துரொட்டி, இடியப்பம், என நீங்கள் விரும்பும் உணவுகள் 1000 பேர் என்றாலும் வந்து பரிமாறுவோம்.
மேலும் குறைந்த அளவு உணவு உடன் தேவை என்றால் 2 மணிநேரத்திற்கு முன் ஓடர் செய்தால் உடன் சுடச்சுட செய்து தரப்படும்.



தொடர்பு கொள்ள...
0211 167 577 89 ,0211 688 5 9 67
Handy: 0163 690 8151

HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்

ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள் கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்து கற்பிக்கப்படும்.



தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

# எல்லோருக்கும் முன்பு A9 தெரியும். இப்போ தமிழ் மாணவர்களின் 9A புரியும்!

எல்லோருக்கும் முன்பு A9 தெரியும். இப்பொழுது உலகிற்கே தமிழ்மாணவர்களின் 9A புரியும். எத்தனை வலிதந்த யுத்தத்திலும் தமிழன் தலைவிதியை நிர்ணயிக்கும் கல்வி தலைநிமிர்ந்தே உள்ளது. எந்த அரசாலும் எந்த அரக்கனாலும் அசைக்கமுடியாதது கல்வி என்பதனை நன்கு உணர்ந்தவர்கள் ஈழத்தமிழர்கள்.

கல்வியே முழுமூச்சாக புலமைப்பரிசில் (5ம் வகுப்பு பரீட்சை) முதல் கல்வித்தராதர (க.பொ.த) கல்விதராதர உயர் பரீட்சைவரை எல்லப் பாடங்களிலும் ஏ! ஏ! என எடுத்துக்குவிக்கும் மாணவர்கள். அவர்களின் கல்விசிறக்க நாமும் வாழ்த்துவதோடு மட்டும் நிற்காமல் அள்ளிக்கொடுங்கள். அவர்கள் நெஞ்சங்களை உங்கள் அன்பால் கிள்ளுங்கள். உங்கள் குழந்தைகள் படித்து முடித்துவிட்டால் பின்பு அவர்கள் கல்விக்கு என வைத்திருக்கும் பணத்தில் ஒரு சிறுதுளியை அவர்கள் கல்விக்காக தாயகத்திற்கு அனுப்பி உதவுங்கள்.

இதற்கு இடையில் எவரும் தேவை இல்லை. இம்முறை தாயகத்திற்கு விடுமுறையைக்கழிக்க வரும் நீங்கள், எங்கு நல்ல மாம்பழம் கிடைக்கும், எங்கு நல்ல மீன் வாங்கலாம், எங்கு ஆடு அடிக்கிறார்கள் என்று யார் யாரையோ கேட்கத்தான் போகின்றீர்கள். அவர்களிடம் நீங்கள் இந்தக்கேள்வியையும் கேட்கலாம்.

கல்விக்காக ஏங்கும் பிள்ளைகள் இருந்தால் சொல்லுங்கள். எனக் கேழுங்கள். எங்கு மீன் வாங்கலாம் என்று கேட்டு அவர்கள் சொன்னதற்காக எப்படி அங்கு சென்று உடன் அள்ளாமல், மீனைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து தெரிவு செய்கிறீர்களோ, அதுபோல் அவர்கள் சொல்லும் மாணவர்களையும் அவர்கள் கல்வி, அவர்களது நோக்கம், எல்லாவற்றையும் புரட்டிப், புரட்டிப் பாத்து படிப்புக்கு உதவி செய்யுங்கள். ஒரு முறை வழங்கினாலும் அவர்கள் வாழ்நாள் எல்லாம் அந்த அன்பு பாயும்.கல்வி சிறக்கும்.

கடந்த க.பொ.த பரீட்சையில் தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவி **9A** க்களை எடுத்து சாதனைபுரிந்துள்ளாள். செல்வி. தேவதர்சினியின் இச்சாதனைக்கு துணைநின்ற துர்க்காபுரத்திற்கும் அவர் கல்வி கற்ற இராமநாதன் கல்லூரிக்கும் எங்கள் வாழ்த்துக்கள்.

இவரைப்போன்று செல்வி.ஸ்ரீகலாதர் சுயித்தா (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) இன்னும் பலர் இந்த **9A** யைச் சொந்தமாக்கி தமிழர்களின் கல்வியில் தங்கள் இருப்பை திடப்படுத்தியுள்ளனர். எதிர்காலத்தில் எம்மினத்தின் பெயர் பொறிக்கப்போகிறவர்கள் இவர்கள் என்ற மகிழ்ச்சி எமக்கெல்லாம் உண்டு.




## அடடா!! அதற்காகவா!





யாழ்ப்பாணத்தில் சுன்னாகம் அருகே வாழ்வகத்திற்கு முன்னால் பெண்களும் ஆண்களும் சிறுவர்களும் நாய்களுடன் வாக்கிங்போனார்கள். என வெளிநாட்டவர்கள் போல் இவர்களும் பழகிவிட்டார்களோ என எண்ணத் தோன்றியது. எரிக்கும் வெய்யிலில் நடக்கிறார்களே என எண்ணியபோது திகைப்பாகவும் இருந்தது. நாயோடு நின்ற ஒரு சிறுவனிடம் கேட்டேன் நாய்களை எங்கு கொண்டு செல்கிறீர்கள் என்று. அதற்கு அவன் ஊசிபோடத்தான் என்றான். ஏன் ஊசி என்றேன் அம்மா போட்டுவிட்டு வரும்படி சொன்னா! என்றான். அம்மாவுக்கு ஏன் ஊசிபோடுவது என்று சொல்ல நேரம் இல்லைப்போலும். நான் அப்போது அது நாய்களுக்கு இந்த வெய்யில் காலத்தில் விசர்பிடிக்காமல் இருக்க என்று சொன்னேன். உடன் முன் சென்ற பெண் ஒருத்தி திரும்பி அட அதற்காகவா என்றாள்.

Duisburg நகரில் இருந்து
ஓர் சிறந்த சேவை!
House Tech
உங்கள் வீடுகளில் திருத்த வேலைகள் எதுவானாலும் சிறப்பாகச் செய்து தருகின்றோம்.
மாபிள் பதித்தல், லெமினாட் போடுதல், வீட்டுக்கு வெள்ளை அடித்தல், மற்றும் குழாய்கள் பொருத்துதல் போன்ற வேலைகளைச் செய்து தருகின்றோம்.
தொடர்புகளுக்கு: பிரபா
0203/4495842
0173/3274987

சரஸ்வதி கல்யாணமாலை
இதோ ஒரு திருமணசேவை! பெற்றோர்களே கவலையைவிடுங்கள்! உங்கள் பிள்ளைகளுக்கு மணமகனையோ மணமகளையோ தேடிகஸ்டப் படாதீர்கள். கலாச்சார மேம்பாட்டனும் சாதகக் குறிப்புகளுடனம் நீங்கள் விரும்பியபடி மணமக்களை சிறப்பாகத் தேர்ந்தெடுக்க எம்மை நாடுங்கள்.
தொடர்புகளுக்கு: செல்வி:
0173 27 50 457- Tel: 02333 86 93 159
02333 86 93 165

# உதிரும் நட்சத்திரங்கள்!

இதோ இன்னும் ஒரு நடிகை தற்கொலை... தொடர்ந்து உதிரும் நட்சத்திரங்கள்!

சென்னை: தற்கொலை செய்து கொண்ட நடிகைகளின் பட்டியலில் சேர்ந்துள்ளார் இளம் நடிகை ஜியா கான். இவர் இந்தியில் உருவான கஜினிரீமேக்கிலும், 18 வயதில் 64வயது அமிதாப்புக்கு ஜோடியாக நடித்து பரபரப்பு கிளப்பிய ஜியா கான்!.



ஜியா கான்

இந்தியா என்றில்லை, உலகம் முழுவதுமே நடிகைகளின் தற்கொலை என்பது சாதாரணமாக விஷயமாகி விட்டது. அடிக்கடியும், அவ்வப்போதும் ஏதாவது ஒரு நடிகை தற்கொலை செய்து கொண்டபடிதான் உள்ளார். மன அழுத்தங்கள், குடும்ப நெருக்கடிகள், காதல் தோல்விகள், மோசடிகள், ஏமாற்றங்கள், நம்பிக்கைத் துரோகங்கள் என இதற்கு எத்தனையோ காரணங்கள்... அந்த வரிசையில் தற்போது ஜியா கானும் தனது உயிரை மாய்த்துள்ளார்.

மும்பையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட பிரபல பாலிவுட் நடிகை ஜியா கான் மிகக் குறுகிய காலத்திலேயே முன்னணி நடிகையாகிவிட்டார். இத்தனைக்கும் அவர் ஏகப்பட்ட படங்களில் நடிக்கவில்லை. மூன்றே படங்கள்தான். சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் மேடை நிகழ்ச்சிகளிலும் தோன்றியுள்ளார். ஒல்லிக்குச்சி உடம்புக்காரியாகத் தோன்றிய இந்த மகா செக்ஸியான நடிகைக்கு ஏனோ தொடர்ந்து வாய்ப்புகள் வரவில்லை.

நிஷப்த் 2007-ம் ஆண்டு தனது 18 வயதில் வயதிலேயே நடிக்க வந்து பிரபலமானவர் ஜியா கான். முதல்படத்திலேயே உச்சகட்ட கவர்ச்சியாகத் தோன்றி பரபரப்பு கிளப்பியவர். ராம் கோபால் வர்மாவின் நிஷப்த் படத்தில் அவர் ஹீரோயினாக அறிமுகமானார். அவருக்கு ஜோடி அமிதாப் பச்சன். இந்தப் படத்துக்காக சிறந்த அறிமுக நடிகைக்கான பிலிம்பேர் விருது பெற்றார்.

இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் தற்கொலை மூலம் உயிரை மாய்த்துக் கொண்ட நடிகைகள் குறித்த ஒரு பார்வை...

அழகி ஷோபா... கருப்பாக இருந்தாலும் அத்தனை பேரின் மனங்களிலும் அப்படியே ஈசிக் கொண்டவர் இந்த ஷோபா. பசி ஷோபா என்றும் ஊர்வசி பட்டம்வென்றதால் ஊர்வசி ஷோபா என்றும் அழைக்கப்பட்டவர் ஷோபா.




ஷோபா

நடிப்புக்கரசி ஷோபாவின் நடிப்பு அவ்வளவு அற்புதமாக இருக்கும். அவரது கண் கூட நடிக்கும். இதழ்கள் நடிப்பின் துடிப்பை நச்சென்று வெளிப்படுத்தும். ஒவ்வொரு பிரேமிலும் அவரை ரசித்து பார்த்து சந்தோஷப்பட்டது அன்றைய ரசிகர் கூட்டம். நடிகர்களுக்கு இணையான கம்பீர நடிப்பு ஷோபாவுடையது.
17 வயதில் சிறந்த நடிகை தனது 17வது வயதில் பசி படத்தில் சிறப்பாக நடித்ததற்காக தேசிய அளவில்சிறந்த நடிகை விருதினை வாங்கியவர் ஷோபா. இந்த சாதனையை இதுவரை வேறு யாரும் படைத்ததில்லை.

மாண்டு போன மகாலட்சுமி மகாலட்சுமி என்ற இயற்பெயர் கொண்ட ஷோபா, பாலுமகேந்திராவின் பட்டறையைச் சேர்ந்தவர். பாலுவின் மனதிலும் புகுந்தவர். ஆனால் என்ன கொடுமை பாருங்கள்.. தனது 17வது வயதிலேயே தற்கொலை மூலம் மாண்டும் போனார் ஷோபா.

வட்லபட்டி விஜயலட்சுமி என்கிற சில்க் விஜயலட்சுமி வட்லபட்டி என்ற இயற் பெயர் கொண்டவர் சில்க் ஸ்மிதா. தென்னிந்தியத் திரையுலகையே தனது கவர்ச்சியின் கீழ் வைத்திருந்தவர். சிலுக்கு என்ற செல்லப் பெயரால் ரசிகர்களைக் கவர்ந்திழுத்தவர்.
பாதியில் முடிந்து போன வாழ்க்கைச் சக்கரம் வண்டிச்சக்கரம் மூலம் தமிழ் சினிமாவுக்கு வந்த சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கை 1996ம் ஆண்டு முடிவுக்கு வந்தது - தற்கொலை மூலம்.


படாபட் ஜெயலட்சும

மறக்க முடியுமா ஜெயலட்சுமியை? மறக்க முடியுமா படாபட் ஜெயலட்சுமியை... மூன்று முடிச்சு படத்தில் வந்த என்னடி உலகம் அதில் எத்தனை கலகம் என்ற பாட்டில் அவர் நடிப்புதான் எவ்வளவு அழகு.. அந்தப் படத்தில் அவர் உபயோகித்த படாபட் என்ற வார்த்தையே அவருக்கு அடையாளமாகிப் போனது. அழகான, அருமையான நடிகையாக வலம் வந்த படாபட்டின் முடிவு தற்கொலையாகிப் போனதுதான் துயர மானது.
வாழ்க்கையில் வீழ்ந்து போன விஜி விஜயகாந்த் உள்ளிட்ட பலருடன் நடித்து பிரபலமானவர் பெங்களூர் விஜி. தமிழில் பிரபலமான நடிகையாக வலம் வந்த அவரது வாழ்க்கையும் 2000மாவது ஆண்டு தற்கொலை மூலம் முடிவுக்கு வந்தபோது அனைவரும் வருந்தினர். தற்கொலைக்கு முன்பு அவரது வாழ்க்கையில் பல புயல்கள். அத்தனையும் ஓய்ந்தபோது விஜியின் விதி முடிவுக்கு வந்திருந்தது.


சில்க் ஸ்மிதா

மர்ம மரணத்தில் முடிந்த திவ்ய பாரதியின் வாழ்க்கை தெலுங்கிலும், தமிழிலும் முன்னணிக்கு வந்து கொண்டிருந்த அழகு நடிகை திவ்ய பாரதி. 1993ம் ஆண்டு இவர் 5 மாடிக் கட்டடத்திலிருந்து விழுந்து இறந்தார். இது தற்கொலையா அல்லது கொலையா அல்லது விபத்தா என்பது இதுவரை தெளிவாகத் தெரியவில்லை. இவரது வாழ்க்கையில் மொத்தமே 14 படங்களில் தான் நடித்தார். இறந்தபோது வயது 19தான். மறக்க முடியாத அழகு நடிகை இவர்.


ஜியா கான்







# சுவிஸ் நாட்டில் இருந்து இலங்கை வந்த பிஞ்சுகள் தெருவில் பலி!!!







## விடுறை என்ற உணர்வுகள் வீதியில் நடக்கும்போது தோன்றவே மாட்டாது! தோன்றவும் கூடாது!



சுவிஸ் சூரிச் இல் வசிக்கும் கரம்பனைச் சேர்ந்த பசுபதி ஜவீன், புங்குடுதீவை சேர்ந்த ஜெயந்திமாலா தம்பதியினர் தம் பிள்ளைகளோடு இலங்கைக்கு சென்றிருந்தனர். தம் விடுமுறையை கழித்து விட்டு சுவிஸ் நாட்டுக்கு மீண்டும் திரும்ப இருந்த வேளையிலேயே 05.05.2013 அன்று கோர விபத்து நடைபெற்றுள்ளது.

இவ் விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,கொழும்பு வெள்ளவத்தை பகுதி வீதியில் பாதசாரிக் கடவையில் வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில், கார் ஒன்று மோதியதில் கோர விபத்து இடம்பெற்றுள்ளது.
இவ் விபத்தில் ஜவீனின் சகோதரியின் மகள் (பாலசூரியன் வாரணி (29) உயிரிழந்ததுடன், சுவிஸில் இருந்து இலங்கைக்கு சென்ற ஜவீன் ஜெயந்திமாலா தம்பதிகளின் மகள் ஜனனி (16) படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள தோடு, மேலும் படுகாயமடைந்த ஜவீனின் மகன் ஜனன் (13) கொழும்பு வைத்தியசாலையில் தீவிர சிகிசைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.
ஆயினும் சிகிச்சை பலனின்றி (08.05.13) செல்வன் ஜவீன் ஜனனும் மரணம் அடைந்துள்ளார்.

சுவிஸ் சூரிச் இல் வசிக்கும் கரம்பனைச் சேர்ந்த பசுபதி ஜவீன், புங்குடுதீவை சேர்ந்த ஜெயந்திமாலா (ஜெயந்தி) தம்பதிகளுக்கு மேற்படி ஜனனி (16வயது), ஜனன் (13வயது) இருவருமே செல்வப் புதல்வர்கள் என்பதும், இருவரையும் இக்கோர விபத்தில் இழந்துள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.


**இந்த விபத்துக்கள் எதிர்காலத்தில் எவருக்கும் நிகழக்கூடாது!**

வீதி விதிமுறைகளை ஒழுங்காகக்கடைப்பிடிக்கும் நாடுகளில் இருந்து தாய்நாட்டுக்கு வருபவர்கள்.அங்கும் வீதி விதிமுறைகள் தாம்வசித்தநாடுகள் போல் ஒழுங்காக இருக்கும் என்ற நினைப்புடன் சட்டப்படி தாம் நடப்பார்கள். ஆனால் அங்கு வீதிச்சட்டதிட்டங்களை மதிக்காதவர்கள் மதிப்பவர்களை இனம் காணமாட்டார்கள்.இதனால் விபத்துக்கள் நேரலாம்.
பாதசாரிகள் வீதியைக் கடக்கும் அந்த மஞ்சள் கோட்டில் பாதசாரிகள் கடக்க முனையும் வேளையிலும் வாகனங்கள் கோண் அடித்து அது உங்களுக்கான இடம் அல்ல, என்பதுபோல் அதிகாரம் காட்டுவார்கள். அதனால் மிரழும் பாதசாரிகள் விபத்துக்குள்ளாக நேரிடும்.

முடிந்த வரை ஓட்டோவில் செல்பவர்கள் தாம் செல்லவேண்டிய பக்கத்திற்கு ஓட்டோவை செல்லச் சொல்லவும். காசு மிச்சம்பிடிக்க ஓட்டோவை மறுபுறத்தில் நிற்பாட்டிவிட்டு மறுபக்கம் செல்லக் கடக்கவேண்டாம்.

வெளிநாடுகளில் வாகனம் வரும் பக்கம் இடம் இருந்து வலமாவோ அல்லது வலம் இருந்து இடமாவோ இருக்கலாம். கொழும்பில் தெருவைக்கடக்கும் போது வாகனம் வலம் இருந்து இடம் வரும். இதனைப் பெற்றோர் அவதானமாகச் சொல்லிக் கொடுக்கவும். ஒரு தெருவில் இருபக்கமும் வாகனம் ஓடினால் இரு புறமும் அவதானிக்கவேண்டும். பெற்றோர் கைளை பிடித்து பிள்ளைகளுடன் கடக்கவேண்டும். நிச்சயமாக செல்போன் பேசிக்கொண்டு நடப்பதை தவிர்க்கவும். வாகன ஓட்டுநர்கள் குடிபோதையிலும் ஓடுவர்.
உங்கள் கவனம் பரவலாகவேண்டும். விடுறை என்ற உணர்வுகள் வீதியில் நடக்கும்போது தோன்றவேமாட்டாது! தோன்றவும் கூடாது!





# பறிபோகும் கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிரதேசம்

பி.எஸ்.குமாரன்

கடந்த 10 வருட காலத்திற்கும் மேலாக பேரினவாதிகளின் திரிவுபடுத்தப்பட்ட வரலாற்றின் அடிப்படையில் தடுக்கப்பட்ட கன்னியா வெந்நீர் ஊற்று பிள்ளையார் கோவில் புனர் நிர்மாணப் பணிகள் தொடர்ந்து தடுக்கப்பட்டே வருகிறது. அதேவேளை கன்னியா வெந்நீர்ஊற்றுப் பகுதியில் அமைந்திருந்த பிறமதத்தவர்களது வழிபாடும் நிர்மானங்களும் எதுவித இடையூறுகளுமன்றி செய்யப்பட்டு வருகிறது. மறுபுறமாக வெந்நீர் ஊற்றுக்களை அன்மித்த மலையடி வாரப்பகுதியில் புதிதாக பௌத்தர்களுக்குரிய வணக்கஸ்தலம் ஒன்று நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதேவேளை பல்லாண்டு கால வரலாற்றைக் கொண்ட பிள்ளையார் ஆலய புனர் நிர்மாணப் பணிகள் மட்டும் இன்னமும் தடுக்கப்பட்டுள்ளது. இவ்விவகாரத்தில் தடுக்கப்பட்டிருப்பது பிள்ளையார் கோவில் புனருத்தாரணம் என்பதைவிட, தமிழர்களின் பாரம்பரிய வரலாற்று உரிமை மறுதலிப்பு என்பதே சரியானதாகும். இந்துக்கள் இறந்தோரின் 31ம் நாள் அந்தியேட்டி கிரியைகளை செய்வதற்குரிய புண்ணியஸ்தலமாக பலநூறு வருடங்களாக பயன்படுத்தி வரும் கன்னியா வெந்நீர் ஊற்று பிரதேசத்தின் பூர்வீக வரலாற்றை திரிபுபடுத்தி,அதனை வில்கம் விகாரையுடன் தொடர்பு படுத்தி ஒன்றிணைக்கும் செயல்திட்டத்தின் தொடர்ச்சியாகவே பிள்ளையார் கோவில் புனர் நிர்மாணம் தடுக்கப்பட்டு வருகிறது. ("வில்கம் விகாரை" பிரதேசம் மன்னராட்சிக் காலத்து சிவன் கோவில் என்பதும் தமிழர்கள் அக்கோவிலை பராமரிக்க தவறியதனால் காலப்போக்கில் அது வில்கம் விகாரையாக மாற்றப்பட்டதாகவும் ஒரு கதை திருக்கோணமலை மூத்த தமிழர்களால் கூறப்படுகிறது.)

கன்னியா வரலாற்று சுருக்கம்

இராவண மன்னன் இறந்த தனது தாயாரின் 31 வது நாள் அந்தியேட்டி கிரியைகளை செய்வதற்காக உருவாக்கியதே கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள் என்பது வரலாறு இதனை அடிப்படையாக கொண்டே இந்துக்கள் இறந்தவர்களின் 31ம் நாள் அந்தியேட்டி கிரியைகளை கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் நிறைவேற்றி வருவது ஐதிகம்.

பிரித்தானிய கவனித்துவ காலத்தில் பிரித்தானியா ஆட்சியாளரால் திருக்கோணமலை பிரதேசத்தின் பிரதான அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்த வெள்ளையர் பொக்களிப்பான் நோயால் அவஸ்தைப்பட்ட சந்தர்ப்பத்தில் திருக்கோணமலை மடத்தடி மாரியம்மான் கோவில் பூசகர் அம்பாளின் அனுக்கிரகத்தால் அந்த வெள்ளைக்கார அதிகாரியை குணப்படுத்தியதற்காக வெள்ளைக்கார அதிகாரியால் மாரியம்மான் கோவிலுக்கு சன்மானமான கன்னி வெந்நீர் ஊற்றுக்கள் அடங்கலாக 17 ஏக்கர் நிலத்தை கன்னியா வெந்நீர் ஊற்றுப்பகுதியில் 1827ல் வழங்கியிருந்தமை வரலாறு. அன்றில் இருந்து கன்னியா வெந்நீர் ஊற்றுக்களினதும் அங்கு அமைந்திருந்த பிள்ளையார் கோவிலனதும் பரிபாலனம் திருக்கோணமலை மடத்தடி மாரியம்மன் கோவில் மணியகாரர்களால் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது.

**சன்முகா நம்பிக்கை நிறுவனம்**

கன்னியா வெந்நீர் ஊற்று அந்தியேட்டி கிரியைகளை செய்ய வரும் இந்துக்களுக்கு வசதியாக திருகோணமலை தம்பலகாமத்தை சேர்ந்த பெருந்தனவந்தர் ஸ்ரீமான் சண்முகம்பிள்ளை அவர்கள் அந்தியேட்டி கிரியை மடம் ஒன்றை நிர்மாணித்து உதவியதுடன் அதனை பராமரித்தும் வந்தார். அந்த நாட்களில் திருக்கோணமலையை சேர்ந்தவர்களும் அதனை அண்மித்த கிராமங்களில் வதியும் இந்துக்கள் அந்தியேட்டி கிரிகைகளை செய்வதற்கான முதல் நாளே தேவையான பொருட்களுடன் கன்னியா அந்தியேட்டி மடத்துக்கு வந்து அங்கு தங்கி கிரியைகளுக்குரிய ஏற்பாடுகளை கவனிப்பதுடன் அந்தியேட்டிக்குரிய அன்னதானத்துக்கான சமையல் வேலைகளையும் இரவோடுஇரவாக முடித்து மறுநாள் காலையிலேயே திருக்கோணமலை ஆலடி விநாயகர் ஆலய சைவ குருக்களை அழைத்துவந்து அந்தியேட்டி கிரிகைகளை பூர்த்தி செய்வதுடன் கன்னியா கிராம வாசிகளை அழைத்து அன்னதானம் வழங்கி பூரண மனத்திருப்த்தியுடன் திருப்பிச் செல்வது வழக்கம். (இவ்விடயம் இக்கட்டுரையாளனாகிய எனது பாட்டன் ,பாட்டி ஆகியோரது அந்தியேட்டி கிரியைகளின் கண்ணுற்ற நேரடி அனுபவத்தின் அடிப்படையில் எழுதியதாகும்). ஸ்ரீமான் சண்முகம்பிள்ளை அவர்களின் மறைவுக்குப்பின் அவரது இல்லத்தரசி தங்கம்மாள் சண்முகம்பிள்ளை தனக்குப்பின் வாரிசற்ற தமது சொத்துக்களை மையமாகவைத்து உருவாக்கிய.தர்மஸ்தாபனங்கள் பலவற்றுடன் இந்த அந்தியேட்டி மடத்தையும் சேர்த்து "சண்முகா நம்பிக்கை நிறுவனம்" என்னும் தர்மஸ்தாபனத்தை ஸ்தாபித்துச் அதனை நிர்வாகிக்க திருக்கோணமலை பிரமுகர்கள் சிலரை நம்பிக்கை பொறுப்பாளராக நியமித்திருந்தார். திருமதி தங்கம்மாள் சண்முகம் அவர்களால் சட்டபூர்வமாக எழுதப்பட்ட சண்முகா நம்பிக்கை நிறுவன உயிலுக்கமைவாக கன்னியா வெந்நீர் ஊற்று மடத்தை நிர்வாகிக்கவும் பராமரிக்கவும் தேவையான வருவாயை பெற்றுக்கொள்ள ஏற்புடையதாக மூதூர் பிரதேசத்தில் சில ஏக்கர் வயல் நிலங்களையும் ஒதுக்கியிருந்ததாக கூறப்படுகின்றது. இவ்வாறாக கன்னியா வெந்நீர் ஊற்று பிரதேசம் தமிழர்களின் வரலாற்று உரிமையின் அடையாளமாக இருந்து வந்தது. காலப்போக்கில் நம்பிக்கை பொறுப்பாளர் சபையினர் அந்தியேட்டி மடத்தை சரியாக பராமரிக்க தவறியதனால் அந்தியேட்டி மடம் பாழடைந்து கவனிப்பாரற்று 1983 வரை இடிபாடுகளுடன் காட்சியளித்தது. உள்நாட்டு யுத்த சூழலில் மிகமோசமான நிலையில் காட்சியளித்திருந்த நிலையில் கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கு முன் அந்தியேட்டி மடம் இருந்த தடயமே இல்லாதவாறு புள்டோசரால் தரைமாக்கப்பட்டது. இப் புண்ணிய காரியத்தை செய்தவர்களின் கன்னியா பிரதேச சபையினர் என அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். சொந்த இனத் துரோகிகளே இந்த மடத்தை இருந்த இடம் தெரியாமல் புள்டோசரால் அழித்ததன் பின்னனியில் செயல்பட்டதாக கூறப்படுகின்றது. தற்போது சண்முகா நம்பிக்கை நிறுவன அந்தியேட்டி மடத்துக்குப் பதிலாக முன்னைய மடம் இருந்த இடத்திற்கு சிறிது தூரம் தள்ளியதாக பஸ்தரிப்பு போன்ற சிறு கட்டிடம் ஒன்றை கன்னியா பிரதேச சபை அந்தியேட்டி மடமாக நிர்மானித்து கொடுத்துள்ளது. மழைகாலத்தில் இந்த மடத்தில் அந்தியேட்டி கிரியைகள் செய்வது மிகக்கடினமான காரியமாகும்.



வெந்நீர் ஊற்றுக்கள் காட்டிக்கொடுப்பு

சண்முகா நம்பிக்கை நிறுவனத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் சபை உறுப்பினரான கிருஸ்ணதாசன் மாரியம்மான் கோவிலுக்கு உரித்தானதும் கோவில் மணியக்காரர்களால் நிர்வாகிக்கப்பட்டு வந்ததுமான பிள்ளையார் கோவிலை சண்முகா நம்பிக்கை நிறுவனத்தின் சொத்தாக உரிமை கொண்டாட முற்பட்டதன் காரணமாக இருதரப்புக்கும் இடையிலான சர்ச்சை நீதிமன்றம் சென்றது. இறுதியில் கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிள்ளையார் கோவில் மாரியம்மன் கோவிலுக்கு சொந்தமானதென்பதும் அதனை பராமரிக்கும் உரிமை கோவில் மணியக்காரனின் உரிமை என்பதனையும் நீதிமன்றம் உறுதி செய்து தீர்ப்பு வழங்கியது இதையடுத்து கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள் இயற்கை நீர் ஊற்றுக்கள் சட்டத்தின் பிரகாரம் மரியம்மன் கோவில் சொந்தம் கொண்டாட முடியாது அதனை அரசு பொறுப்பேற்க்கவேண்டும் என்ற வகையில் அன்றைய ஆட்சியாளருக்கு பெட்டிசன் மூலம் முறைப்பாடு கொடுத்ததை யடுத்து வெந்நீர் ஊற்றுக்கள் தொடர்பில் இந்துக்களின் உரித்து ரத்துசெய்யப்பட்டு அது அரச உடமையாக மாற்றப்பட்டது. இவ்வாறாக திருக்கோணமலையில் தமிழர்களின் இருப்பை உறுதிசெய்யும் பல அடையாளங்களை அமித்தொழிக்கப்பட்டது. இவற்றை இன்றைய தலைமுறையினர் அறிந்திருக்க நியாயமில்லை

கண்ணீர் வடிக்கும் பிள்ளையார்

இவ்வாறான காட்டிக்கொடுப்புக்களின் தொடர்ச்சியாக இன்று கன்னியா வெந்நீர் ஊற்று பிள்ளையார் சிறிய கொட்டிலில் குடியிருக்க வேண்டிய அவலத்துக்குள்ளாகியுள்ளார்.

Dortmund நகரில் 14.09.2013 வெற்றிமணி விழா

## புலன்களைப் பெயர்த்துச் செல்ல முடியாத வலிகளும், கனவுகளும் கதைகளில் ஆங்காங்கே இழையோடுகின்றன!

# இடைவெளி

**நூல்ஆய்வு: சேவியர் தமிழ் நாடு**

”இடைவெளி” எனும் சிறுகதைத் தொகுப்பை சமீபத்தில் வாசித்தேன். ஜெர்மனியிலிருந்து வெளியாகும் வெற்றிமணி இதழின் ஆசிரியர் திரு.சிவகுமரன், மாதவி எனும் புனைப் பெயரில் எழுதியிருக்கிறார். மாதவி யார் எனும் வினாவை எழுப்பவும், எழுப்பாமல் இருக்கவும் முடியவில்லை. காரணம் நூலின் கதைகள் முழுக்க காதலின் வாசம். இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்தாலும், புலன்களைப் பெயர்த்துச் செல்ல முடியாத வலிகளும், கனவுகளும் கதைகளில் ஆங்காங்கே இழையோடுகின்றன.

இந்தக் கதைகள் சமூகத்தின் பெரிய பிரச்சினைகளை அலசி ஆராயவில்லை, ஆனால் நமது வாழ்வில் நம்மைச் சந்திக்கும் சிறு சிறு பிரச்சினைகளை மிகவும் லாவகமாகச் சந்தித்துச் செல்கிறது. அதனாலேயே கதைகளுடன் அதிகமாய் ஒன்றிக்கவும் முடிகிறது. கலாச்சார வேறுபாடுகள், தலைமுறை இடைவெளிகள், நினைவுகள், கனவுகள் என இந்தக் கதைகள் உணர்வுகளோடேயே பயணிப்பதால் வெகுவாக ரசிக்க வைக்கின்றன. “தவறான படிவத்தை அச்சுக்குக் கொடுத்தனன். தமிழ் தெரியாத ஜெர்மனியல்லோ... அப்படியே அச்சாகி வந்துட்டுது“ என்று முன்னுரையோடு கொடுத்திராவிட்டால், ”ஐயா.. எழுத்துப் பிழைகள் இருக்கிறதே” என்று சொல்லியிருப்பேன்.

சில புத்தகங்களை வாசித்தால்
எழுத்தாளர்களை நேசிப்போம்.
சில எழுத்தாளர்களை நேசித்தால்
அவர்களுடைய புத்தகங்களை வாசிப்போம்.
நான் எழுத்தாளரை நேசித்ததால்
நூலை வாசித்தேன்.
இப்போது நேசம் எழுத்துக்கு
இடம் மாறியிருக்கிறது !
நன்றி ஐயா விழிக்குணவு அளித்தமைக்கு !



# கவணாவத்தை வேள்வி

### சாமியும் பக்தியும்!...

மனித வாழ்வுக்கு ஒழுக்கமான, கட்டுப்பாடான, நேர்மையான, நீண்டகால நல்வாழ்வுக்கும் பண்பாடு இறைபக்கி நிறைந்த வாழ்வுக்கு வழிபாடும் தியானமும் இன்றியமையாதவையே. கடவுள் இருக்கிறாரா...இல்லையா.. என்ற வாதப்பிரவாதங்களுக்கு அப்பால் பக்தியும் பயமும் மனித வாழ்வுக்கு உறுதுணையாகவே இருந்து வருகின்றன.. எந்த மதமாயிருந்தாலும் இறைவழிபாடு என்பது மனிதரின் ஒழுக்கமான நேரிய வாழ்வுக்கு பாதுகாப்பாகவும் வரப்பிரசாதமாகவும் அமைந்துவிடுகின்றன.

இன்று இந்த நேரத்தில் மிக அண்மைக்காலத்தில் தாயகத்தில் நடைபெற்ற சம்பவம். வடபகுதி கீரிமலை கவணாவத்தை என்ற இடத்தில் உள்ள வயிரவர் கோவிலில் நடைபெற்ற சம்பவம் என் மனதை நெருடிய காரணத்தால் இதை எழுதுகின்றேன். சாமியும் பக்தியும் என்ற போர்வையில் அறியாமையில் மூடநம்பிக்கையில் ஒரே நாளில் 700 800 ஆட்டுக்கடாக்களையும் 400 500 கோழிகளையும் வெட்டிச்சரித்து இரத்தத்தை பூமியில் ஓடவிட்டு பக்தியை நிறைவேற்றியருப்பவர்கள் யாருமல்ல. நம்மவர்களே.. உயிர்ப்பலி கொடுத்து ஒரே நாளில் புண்ணியம் தேடிய கனவான்களும் பக்தியாளர்களும் தங்கத்தமிழர்களே!..

உயிர்ப்பலி என்பது எவ்வளவு கொடுமையானது. ஆண்டவன் பெயரைச்சொல்லி இப்படி அநியாயம் செய்வது எந்தச் சமூகத்தில் இருக்கின்றது. பல ஆண்டுகளுக்கு முன் வடபகுதியில் இச்சம்பவங்கள் ஆங்காங்கே நடைபெற்றுத்தான் வந்தன பின்னர் சில சமூக அக்கறையாளர்களும் அரசும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளால் தடைசெய்யப்பட்டிருந்தன. ஆனால் இப்போ வேதாளம் பழையபடி முருக்கை மரத்தில் ஏறிய கதையாகிவிட்டது. இந்த உயிர்க்கொலைகளை நம்மவர்களே புரிந்து சாமியிடம் பக்தியை நிறைவேற்றியுள்ளார்கள். வெட்டப்பட்ட ஆடுகளுக்கோ அளவுக்கு அதிகமான உணவு, குடிவகை எல்லாம் கொட்டி ஊட்டி அவைகளை அளகுபடுத்தி, மாலைபோட்டு, அலங்கார வண்டிகளில் மின்னொளியில் பலவர்ணம் ஒளிபரப்பி பவனிவந்து சாமி என்னும் பக்தியால் வெட்டிச்சரித்த நம்மவர்கள் அவற்றைப் புசித்து இரத்த வெறியை நிலைநாட்டியிருக்கிறார்கள் என்றே கூறவேண்டும். தான, தர்மம் செய்ய வேண்டியவர்கள் இன்று அதர்ம தர்மத்தை வளர்க்கும் செயல்கண்டு நாம் வெட்கப்பட வேண்டும் வேதனைப்பட வேண்டும்!..

நம்மட சாமிகள் ஒருபோதும் ஆடு, கோழிகளை வெட்டிப் பலியிடுமாறு கேட்கவில்லை. நம்முடைய ஆசாமிகளின் அறிவீனத்தால் பணத்துக்கும் வயிற்றுக்கும் இந்தக் கேவலமான உயிர்ப்பலிகளைச் செய்வது எவ்வளவு கொடுமையான விடையமாகும். அரசும் சட்டமும் இச்செயலை பெயரளவில் தடைசெய்தபோதும் நம்மவர்களின் பக்திப் பரவசத்தால் இச்செயலைச் செய்து இன்பங்காண்கிறார்கள். இச்சம்பவத்தோடு வடபகுதியில் இன்னும் பல கோவில்களில் ஆடு, கோழி வெட்டும் நிகழ்வுகள் பெருக வாய்ப்புக்கள் இருக்கின்றன. இந்த நூற்றாண்டில் இன்னும் தமிழர்கள் இப்படியாக வாழ்கிறார்களே என்னும் போது கேவலமாகவே மதிப்பிடவேண்டியுள்ளது.
மண்:வ.சிவராஜா













கடந்த 19.05.2013 யேர்மனியில் வூப்பெற்றால் நகரில் இடம்பெற்ற நவதுர்க்கா அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழாவில் இருந்து சில காட்சிகள்.

# ஒன்று அல்ல இரண்டல்லச் சிங்கம்

## சிங்கம் 3 ம் தயாராம்!

சூர்யா நடித்துள்ள சிங்கம் 2 படம் வரும் ஜூன் 14-ம் தேதி வெளியாவது உறுதியாகியுள்ளது. ஹரி இயக்கத்தில் கடந்த ஆண்டு வெளியாகி பெரும் வெற்றிப் பெற்ற சிங்கம் படத்தின் இரண்டாம் பாகம்தான் சிங்கம் 2 என்ற பெயரிலேயே வெளியாகிறது. முதல் பாகத்தில் நடித்த சூர்யா - அனுஷ்கா ஜோடியுடன், ஹன்சிகா, விவேக், சந்தானம் ஆகியோர் நடிக்கின்றனர்.



கடந்த ஓராண்டு காலமாக இதன் படப்பிடிப்பு பல்வேறு பகுதிகளில் படமாக்கப்பட்டு வந்தது. க்ளைமாக்ஸ் காட்சி மட்டும் தென் ஆப்ரிக்காவில் எடுக்கப்பட்டது. ஹரியின் எந்தப் படத்துக்கும் இல்லாத அளவு அதிக நாட்கள் இந்தப் படத்துக்குத்தான் நடத்தப்பட்டது. கோடைச்சிறப்பாக வரும் என எதிர்ப்பார்க்கப்பட்ட சிங்கம் 2 வெளியீடு, போஸ்ட் புரொடக்ஷன் பணிகளுக்காக தள்ளிப் போடப்பட்டது. இப்போது வெளியீட்டுத் தேதியை உறுதிப் படுத்தியுள்ளனர். வரும் ஜூன் 14-ம் தேதி உலகமெங்கும் வெளியாகிறது சிங்கம் 2. தேவி ஸ்ரீ பிரசாத் இசையில் உருவாகியுள்ள பாடல்கள் வரும் ஜூன் 1-ம் தேதி வெளியானது. இவ்விழாவில் பங்கேற்ற நடிகர் சூர்யா பேசுகையில், ”சிங்கம்-2ஐ உருவாக்க நாங்கள் 8 மாதங்கள் உழைத்துள்ளோம். அடுத்த பாகத்தை எடுக்க வேண்டும் என்றால் அதற்கு நேரம் ஒத்துழைக்க வேண்டும். இயக்குனர் ஹரிக்கு பொறுமையும், நேரமும் இருந்தால் சிங்கம்-3 படத்தில் நடிக்கவும் நான் விரும்புகிறேன். சிங்கம்-2ல் நடித்தபோது ஏற்பட்ட ஆர்வமும் உற்சாகமும் சிங்கம்-3லும் நடிக்க வேண்டும் என்ற நம்பிக்கையை எனக்குள் ஏற்படுத்தியுள்ளது. இயக்குனர் ஹரி அடுத்த படத்திற்கான வேலைகளில் ஈடுபட்டுள்ளார். நேரம் ஒத்துழைத்தால் சிங்கம்-3ல் நாங்கள் மீண்டும் ஒன்றாக இணைவோம்,” என்றார்.



Om Namaste
Om Namaste
Tel:0231 530 644 74
டோட்மூண்ட் நகரில் .....
நீங்கள் மட்டுமல்ல உங்கள் விருந்தினர்களுடனும்
ஆற அமர இருந்து அறுசுவை உணவை
உருசித்து மகிழ இதோ! ஓர் இடம்!
ஓம் நமஸ்த்தே!
Mittags Buffet
All you can eat!
only 6,00 €
(11.00-15.00)
Inhaber: S.Sivakumaran
Tel: 0176 49 75 7406
Om Namaste
Rheinische Str.55
44137 Dortmund
om-namaste@hotmail.de
Öffnungszeiten
Di-Fr 11.00-15.30
Di-Fr 17.00-23.00
Sa,So Und Feiertage
11.00-23.00
Montag Ruhetag
பிறந்தநாள் விருந்து
உபசார நிகழ்வுகள்
எமது உணவகத்தில்
சிறப்பாகச் செய்யலாம்.

10 Years
Kaneen electronics
www.kaneenelectronics.de
புதியதோர் தொழில் நுட்பம்!!!!! புதியதோர் வாய்ப்பு!!.
Full HD,SDமுறையில் அனைத்து நிகழ்வுகளையும் Video-Photo செய்யவும்,சிறந்த முறையில் படத்தொகுப்பு செய்யப்பட்டு, Blue Ray DVD பதிவுக்கும்அனைத்து நிகழ்வுகளை விழா நடக்கும் இடத்தில் இருந்து செய்மதிமூலம் உலகெங்கும் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கும் அற்றும் சகல sat,Receiver,Camera-Alam கருவிகள் கொள்வனவு செய்வதற்கும் பொருத்துவதற்கும் இவை அனைத்தும் மாதாந்த தவணை முறையில் வங்கியூடாக பெற்றுக் கொள்வ தற்கும்
Schevenhoferweg-24 42111 Wuppertal
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266
info@ kaneenelectronics.de

# யேர்மனியில் தேர்த் திருவிழாக்கள்!



கற்றிங்கன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயம்
Sithivinayagar Temple Hamm e.V
Bredenschneider Str.119
45527 Hattingen
ஆலயம் 02381 162 686
கொடி ஏற்றம் 08.06.2013
தேர்த்திருவிழா 16.06.2013

குறிஞ்சிக்குமரன் ஆலயம் குமஸ்பார்க்
Kurinchi Kumaran Temple
Industrie Str 7
51643 Gummersbach
ஆலயம் 02261 5015964/ 5016223
கொடி ஏற்றம் 20.07.13
தேர்த்திருவிழா 28.07.2013

சுவற்றா ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
Sri Kanakathurka Ampal Temple
Robert Koch Str 5a
58239 Schwerte
ஆலயம் 02304 16721
உற்சவம் ஆரம்பம்
02.08.2013-தேர் 11.08.2013

கம் திருநல்லூர் ஸ்ரீ ஆறுமுக வேலழகன்
Thiru Nallur Sri Arumuka Velalakan Temple
Roon Str 2a
59065 Hamm
02381 260 9 2 - 02381 291 03
கொடி ஏற்றம் 29..06.13
தேர்த்திருவிழா 07.07.2013

கம் சித்தி விநாயகர் ஆலயம்
Sithivinayagar Temple Hamm e.V
Ferdinand Poggel Str 25,
59065 Hamm
ஆலயம் 02381 162 686
கொடி ஏற்றம் 27.07.13
தேர்த்திருவிழா 04.08.2013

டோட்முண்ட் சாந்தநாயகி
சமேத சந்திரமௌலீஸ்வர ஆலயம்
Sri Santhanayaki Sametha
Santhramouleeswara Temple
Kiefer str 24
44225 Dortmund-Hombruch
ஆலயம் 0231 72 51 51 65
கொடி ஏற்றம் 13.07.13 தேர்த்திருவிழா 21.07.2013

எசன் கதிர் வேலாயுதசாமி ஆலயம்
Sri Kathirvelauthaswamy Temple e.V
Kloster Str 49 a
45149 Essen.
ஆலயம் 0201 806 74 33
கொடி ஏற்றம் 06.07.13
தேர்த்திருவிழா 14.07.2013

கனக துர்க்கை அம்மன் ஆலயம்
Sri Kanaka thurka Amman Temple
Alleen Str.18-19
73230 Kirchheim- U Teck
Tel:07021 8074399
அலங்கார உற்சவம்
தொடக்கம். 06.7.2013
தேர்த் திருவிழா 14.07.2013

தரன் வீடியோ & போட்டோ Tel:0208 88 265 73
0177 24 77 449
rajakaruna@live.de
world kovil.com



விநாயகப்பெருமான் பல இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் பூமிக்கு வந்த வேற்றுக்கிரக வாசியா? இதிகாசங்கள்,புராணங்கள் சொன்னவை உண்மையே.

# கேள்வியாயும்,உண்மையாயும் ஒரு தேடல்

**ஏலையா க. முருகதாசன்**

கடந்த ஆண்டு உலக பூராவும் பரபரப்பாகவும் பயத்துடனும் பேசப்பட்ட விடயம் 21. 12. 2012இல் உலகம் அழிந்து விடுமா என்பதே.மாயா இனத்தினரால் குறிப்பிட்ட திகதி நெருங்க நெருங்க உலக மொழி ஊடகங்கள் அனைத்துமே இதுபற்றிய செய்திகளை வெளியிட்டவண்ணம் இருந்தன. உலகம் அழியாது என்று வீராப்பாக வெளிப்படையாக பேசியவர்கள்கூட சில வேளை „நாங்கள் உயிரோடு இருக்கப் போகும் கடைசிநாள் 21.12.2012 வரையுந்தானா என உள்ளுக்குள்ளே பயந்தபடிதான் இருந்தனர். விஞ்ஞானி களால்கூட உலகம் அழியுமா அழியாதா என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை.

உலக மனிதர்கள்,கடவுள் இருக்கிறார் என்பதை நம்புகிறவர்கள் கடவுள் என்பவர் இல்லவே இல்லை விஞ்ஞான நடவடிக்கை என்பதே உண்மை என்ற இரண்டுவிதமான சமாந்தரமான நம்பிக்கைத் தண்டவாளத்திலேதான் தமது வாழ்க்கைப் பயணத்தை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டும் அதற்கு முன்பும் வெளிந்த மாயா இனக் கலண்டர் தொடர்பான கட்டுரைகள் பலவற்றை வாசித்த போது என்னை அந்தக் கட்டுரைகள் ஒரு சிந்தன வெளிக்குள் இட்டுச் சென்றன. தேடல் நோக்கி எனது சிந்தனை விரிந்தன.

ஆகாயம் என்ற பரந்த வெளியான எல்லையற்ற பிரபஞ்சம் என்றால் என்ன அங்கே மிதந்து கொண்டிருக்கும் பூமி உட்பட்ட கோள்கள் பற்றிய தேடல் சிந்தனை விரியத் தொடங்கியது. இங்கே நான் எழுதத் தொடங்கியிருக்கும் இந்தக் கட்டுரையானது. கடவுள் நம்பிக்கைக்கும் விஞ்ஞான நிரூபணங் களுக்கும் அப்பாற்பட்டது. „ஏன் அப்படி இருக்காது“என்ற கேள்வியாயும் உண்மையாயுமான ஒரு தேடலே இக்கட்டுரை.

ஊகங்களாகவும், கற்பனைகளாகவும் அப்படி இருக்குமா இப்படி இருக்குமா எனச் சந்தேகத்துடன் பார்க்கப்பட்டவை அதுபற்றிய தேடல் சிந்தனையால் அவை உண்மையானவையாக விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஊகங்களையும் கற்பனைகளையும் மனுக்குலத்தின் முன் இயற்பியல் வடிவில் கொடுப்பதற்கு அவைபற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு பல படிகளைத் தாண்ட வேண்டியிருந்தது, பல ஆண்டுகளைத் தாண்ட வேண்டியிருந்தது. ஆனால் இந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு முன்பு வெறும் சிந்தனை அறிவினாலேயே சொல்லிச் சென்றவை „சொன்னவை உண்மைதான் என நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.



பத்திரிகைகளையோ நூல்களையோ அல்லது இணையத்தளங்களையோ வாசிப்பவர்களின் மனதில் அவைபற்றிய சிந்தனை ஒரு தேடலை நோக்கிச் செல்ல வைக்கும். மாணவனாக இருந்த காலத்திலிருந்தே எனக்கு பூமியைப் பற்றிச் சொல்லுகின்ற புத்தகங்களை, இனக்குழுமங்கள் பற்றிய புத்தகங்களை, பிரபஞ்சத்தை,கோள்களை, சித்தகர்களைப் பற்றிய புத்தகங்களைப் பற்றி வாசிப்பதிலும் ஆர்வம் அதிகம்.

நாங்கள் எமது அன்றாட தேவைகளின் எல்லைக்குள்ளும் கொஞ்சம் நேரம் கிடைத்தால் செய்தி அறிதலு,டன் எமது வட்டத்தை சுருக்கி அமைத்து வைத்திருக்கிறோம். ஆதலால் எமது சிந்தனையை அதிக தூரம் நீட்டிச் செல்வதில்லை. ஒரு விடயத்தைப் பற்றி ஒரு எல்லைக்கு அப்பால் நாம் தேடுவதும் இல்லை, ஆராய்வதுமில்லை.

பிரபஞ்சம் என்றால் அவை எல்லையற்ற பரந்த வெளி, அதில் நாங்கள் வாழும் பூமி உட்பட நாம் அறிந்து கொண்ட கோள்கள் தவிர்ந்த இன்னுமதிகமான ஏன் கோடிக்கணக்கானவை உண்டு என்பது உணரக்கூடியதே. இது பற்றி ஆர்வம் உள்ளவர்கள்கூட இதுபற்றி ஊகிப்பார்கள். ஆனால் அந்த ஊகங்கள் நிரூபிக்கப்படும் வரை அவை வெறும் கற்பனை எனறே கணிக்கப்படுகின்றது.

ஆனால் வியப்புடன் வாசிக்கப்பட்ட பல நம்பமுடியாமலிருந்த பல கதைகள் காலப்போக்கில் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டு இன்று உலகினரால் இயற்பியலாக அனுபவிக்கப்பட்டு வருகின்றன. சுமார் ஒரு வருடங்களுக்கு முன்பு எனக்கு ஒரு மின்னஞ்சல் தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்தது. அதில் தென்னமெரிக்காவில் கௌதமாலா என்ற இடத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றுகள் கல்வெட்டுகளுடன் வரைபடத்துடனும் காணப்பட் டிருந்தன. இணையத்தளங்களை வாசிப்பவர்களுக்கோ அல்லது நூல்களையோ பத்திரிகைகளையோ வாசிப்பவர்கள் ஒரு விசயத்தை அவதானிப்பவர்களாக இருந்திருக்கக்கூடும். தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்போகவே உலக நாடுகளில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதே. காலப் போக்கில் அவர்கள் தமது அடையாளத்தை இழந்தோ அல்லது கலப்புத் திருமணங்கள் மூலமாகவோ வேற்று இனமாக மாறியிருக்கலாம் என்பதற்கான சாத்தியங்கள் உண்டு.

ஆனால் அவற்றை ஆணித்தரமாக தொல்லியல் மூலமாவோ தொடர்ச்சியான தேடல்களை நோக்கி செல்வதற்கான பொருளாதார வசதிகளோ, ஆளணிகளோ தமிழர் தரப்பில் இல்லாமையால் தொல்லியல் தேடல்களை தொடர முடியாமல் போய்விட்டது. தேட வேண்டும், தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்ந்தார்கள் என்பதை அறிய வேண்டும் என்ற தமிழ் தொல்லியலாளர்களின் ஆர்வத்திற்கு நிதிநிலைமை தடையாகியது. நிறுவனப்படுத்தப்பட்ட போதியளவு நிதியைக் கொண்ட தமிழர்களின் தொல்லியல் அமைப்பு உலகளாவிய ரீதியில் இல்லை என்பதும் ஒரு காரணமாகும். ஆனாலும்கூட முற்றுமுழுதாக தமிழர்களின் வரலாற்றை யாருமே ஆராயாமல் விடவில்லை. தொல் தமிழர்களின் தொல்லியல் ஆராய்ச்சி தொடர்ந்தும் அவை இடம்பெற்றுக் கொண்டு வருகின்றன என்பதும் உண்மையே. தொல்லியல் துறைசார் கல்வியாளர்கள், பேராசிரியர்கள், அத்துறையில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் போன்றோர் தமிழர்கள் உலகில் எங்கெங்கு வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் போய் அதற்கான ஆதார தடயங்களைத் தேடவேண்டிய விரைவைக் காண முடியவில்லை என்பதே எனது கருத்தாகும்.

ஆனால், அமெரிக்க ஐரோப்பியத் தொல்லியலாளர்கள் அகழ்வாராய்ச் சியாளர்கள் தாங்கள் எந்த இனக் குழுமத்தின் வரலாற்றை ஆய்ந்தறிய வேண்டுமென திட்டமிடுகிறார்களோ அதற்கான தகவல்களைப் பெற்று அந்தந்த இடங்களுக்குச் சென்று மாதக்கணக்கிலல்ல வருடக்கணக்கில் தமது ஆய்வை மேற்கொண்டு பின்னர் அதனை நூலாக வெளியிடுகின்றனர்.

அதன் சான்றாகத்தான் „ 2012இல் உலகம் அழியுமா.......?“ என்று வெளி வந்திருந்த கட்டுரையில் ஒரு அமெரிக்க ஆய்வாளரின் ஆய்வின்படி மாயா இனத்தவர்கள் தமிழர்கள்தான் எனக் கூறியிருந்த மேற்கோளை இங்கே தனது ஆய்விற்காக கட்டுரையாளர் பதிவு செய்திருந்தார்.

வெளிவந்திருந்த அந்த ஆய்வுக் கட்டுரையில், கட்டுரையாளர் பல நூல்களிலிருந்தும் இணையதளங்களிலிருந்தும் சான்றுகளை சிற்பங்களா கவும், வரைபடங்களாகவும், தொல்லியல் சான்றுகளாகவும், புகைப்படங்களா கவும் பதிவு செய்திருந்தார்.

அவரின் கட்டுரை எனக்குள் நீண்ட காலமாக ஆர்வமுடன் சிந்திக்கப்பட்டக் கொண்டிருந்த எண்ணங்கள் பற்றிய நீட்சியை ஏற்படுத்தியுள்ளது. இனக்குழுமங்கள் பற்றிய தொல்லியல் ஆய்வுக் கட்ரைகள் என்பவையோ, இனக்குழுமங்களின் அரசியல் வரலாற்றாயவுக் கட்டுரைகள் என்பவையோ அதை வாசிப்பவர்களைச் சிந்திக்க வைக்க வேண்டும், அது இன்னொரு தளத்தை நோக்கி பயணிக்க வைக்க வேண்டும்.

உண்மை, பொய், பகுத்தறிவு வாதம், முற்போக்கு வாதம், நாத்திகம், ஆத்திகம் என்ற முரண்பாட்டு வலைப்பின்னல் என்ற குழப்ப நிலைக்குள் சிக்கிக் கொள்ளாமல் சிந்திக்க வேண்டும். எனவே அந்தக் கட்டுரையை வாசித்த தலிருந்து கீழ்வருபவற்றை எனது பார்வைக்கு „நான் நம்புகின்றேன்“என்ற படிநிலையில் எடுத்துள்ளேன்.

1. பிரபஞ்சம் 2. கோள்கள் 3.இராவணன் 4.ஏட்டுச்சுவடிகள் 5.விநாயகரின் உருவம் 6.சித்தர்கள், யோகிகள், ரிசிகள் 7.சைவசமயமும் உண்மை நோக்கிய தீர்க்க தரிசனமும்

BCN Travals
Business Consulting Network.UG
Handy:0231 98 53 94 16
BCN Travals
Tel: 0231-10876361
Adler str-30
44137Dortmund
இந்தியா செல்வதற்கான விசாவினையும் பெற்றுத் தருவோம்
நம்பிக்கையான விமானச் சேவை
இலங்கை-இந்தியா-கனடா-அமெரிக்கா-அவுஸ்த்திரேலியா-சிங்கப்பூர் மலேசியா உட்பட உலகின் அனைத்து நாடுகளுக்கும் சலுகைவிலையில் விமானச் சீட்டுக்களைப் பெற்றுத்தருகின்றோம்.
Rail&Fly எனும் விமானநிலையம் வரை புகையிரதத்தில் செல்வதற்கான சேவை வீட்டிலிருந்து விமான நிலையம் செல்வதற்கான வாகனசேவை என்பவற்றையும் வழங்குகின்றோம்.வங்கியில் பணம் செலுத்தினால் விமானப்பயணச்சீட்டினை உங்கள் வீட்டிற்கே அனுப்பிவைப்போம்.
மின்னஞ்சல்:- bcntravals@gmail.com
web: www.bcn-ug.com





## GAAYATREE PARTY SERVICE

உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்தியா சீனா மலேசியா நாட்டு உணவுகள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் சுத்தமாகவும் சுவை ஆறாது தயாரித்து விருப்பம்போல் பரிமாறுகின்றோம்.

கொத்துரொட்டி
புரியாணி
நூடில்
தந்தூரிச்சிக்கன்
இறால் சம்பல்
இறால் கறி

இன்னும் பல சுவையான உணவுகளும் உண்டு இவை அனைத்தும் வெளிநாட்டு மக்களுக்கும் ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.

e.mail:gaayatree-cs@live.de
TeL:07021 99 39 363
Mobile:0152 119 74 068

73230 Kirchheim-Unter-Teck



Gaayatree Party Service



# ஆபாசத்தால் பே்ஃஸ் புக்கில் ஆபத்து !






எச்சரிக்கை! Facebook இல் தோன்றும் இவ் வீடியோவில் இருந்து கவனமாக இருங்கள் ! இது ஒரு எச்சரிக்கையே ! தற்போது Facebook இல் கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளவாறான வீடியோ ஒன்று உங்கள் நண்பர்களால் பகிரப்பட்டதாக உங்கள் குநநன இல் இடம்பெறும் சம்பவம் நடைபெறுகிறது. சற்று ஆபாசமான படம் காணப்படும் இவ் வீடியோவை நீங்கள் பார்க்க முயன்று அவ் இணைப்பில் க்ளிக் செய்தால் அவ் இணைப்பு கீழே காட்டப்பட்டுள்ள படத்தில் உள்ளவாறு அனுமதி கேட்கும்.

ஆனால் இதில் உள்ளது போல இவ் இணைப்பு Youtube உடம் சம்மந்தப்பட்டது இல்லை. நீங்கள் "Okay" ஐ அழுத்திவிட்டால் போதும், அவ் ஆபாச வீடியோ, உங்களால் பகிரப்பட்டதாக, உங்கள் நண்பர்களின் Feed க்கு சென்றுவிடும்.

எச்சரிக்கையாக இருங்கள், உங்கள் நண்பர்களும் இது தொடர்பில் அறிந்துகொள்ள, இச் செய்தியை அனைவரிடமும் பகிருங்கள். உங்கள் அந்தரங்க சட்டிங், தொடர்புகள் என்பனவற்றையும் இது களவாடி மற்றவர்களுக்கு அனுப்பிவிடும். இந்த சாப்ட்வெயர் தொடர்பாக தமிழர்கள் கவனமாக இருப்பது நல்லது.








# கரையில் இருந்தே மீன் பிடிக்கும் சீனர்களது நுட்பம்!



கேரள மாநிலத்தில் உள்ள கொச்சி நகரத்துக்கு உங்கள் வாழ்நாளில் நீங்கள் ஒரு முறையாவது விஜயம் செய்து ரசிக்க வேண்டும். அரபிக்கடல் ஓரம் வீற்றிருக்கும் இந்த கம்பீரமான நகரம் இங்கு மூங்கில் தடிகளில் நீண்டு இருக்கும் சைனீஸ் நெற்(சீனர்களின் மீன்பிடி வலை) 20 மீற்றர் பரப்பளவு கொண்டது.கடலில் மேல் 10 மீற்றர் உயரத்தில் அமைத்திருப்பார்கள். ஆறு மீனவர்கள் கூட்டாகச் சேர்ந்து இங்கு சீன முறையில் மீன்பிடிப்பார்கள்.

மெல்ல வலையை நீரில் இறக்கிவிட்டு ஊரில் துலாமிதிப்பது போல் ஒருவர் மேலேறி அமத்த, வலை கிழும், மேலும், செல்லும்.

வலையில் சிக்கும் மீன்கள் கடல் நடுவில் வலை வீசுவதற்கு ஒப்பாக இருக்கும். இந்தப் பழமை வாய்ந்த சீனர்களது நுட்பமான மீன்பிடி தொழில், இன்றும் கொச்சினை செல்வம் கொழிக்கவைக்கிறது. கரையில் நின்றே கடலைக் கலக்கும் சீனர்களின் தொழில் நுட்பம் மிகப்பழமை வாய்ந்த ஒன்று. படம்:வெற்றிமணி

Nirubagini Magendiran
மொழிபெயர்ப்பாளர்
Tamil- Deutsch
Deutsch- Tamil
தமிழ் யேர்மன்
யேர்மன் தமிழ்
Tel: 0176/ 24012135
Email: nirumagendiran@hotmail.com
Vereidigte Dolmetscherin und ermächtigte Übersetzerin

INDO AFRO TRAVELS
Mit uns um die Welt
தொடர்புகளுக்கு: ஸ்ரீதர்
Tel:0621 86 24 32 12
Handy:0173 68 28 990
Fax:0621 86 24 32 14
e.mail info@indo-afro.de
S.1-11
68161 Mannheim

கோடைகால விடுமுறையை இதமாகக் கழித்திட இன்றே உங்கள் விமானப் பயணத்திற்கு எம்மை நாடுங்கள்

யேர்மனியில் Manheim நகரில்

S.J. Enterprises
S.1-11
68161 Mannheim

S.J.Asian-Afro Store
Schulstraße7-9
67059 Ludwigshafen







# எம்ஜிஆர் சிவாஜி இவர்களின் கலை வாழ்வுக்கு உயிரூட்டிய உயிர் இப்போதான் துயில்கிறது!

சென்னை: 25.05.2013 அமரர் டிஎம் சவுந்திரராஜன். இவரைப் போன்று முழுத் திறமைப் படைத்த பாடகர் ஒருவர் இவருக்கு முன்னரும் இருந்ததில்லை இனியும் இருக்கப் போவதில்லை, என்று புகழாரம் சூட்டியுள்ளார் முதல்வர் ஜெயலலிதா. டிஎம்எஸ் மறைவுக்கு அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தி: ”தமிழக மக்களை தனது சிம்மக் குரலால் கவர்ந்த பிரபல திரைப்பட பின்னணிப் பாடகரும், திரைப்பட நடிகரும், 'டி.எம்.எஸ்.“ என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படுபவருமான டி.எம். சவுந்தரராஜன் உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இன்று இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து ஆற்றொணாத் துயரமும், மிகுந்த மனவேதனையும் அடைந்தேன். ”ராதே என்னை விட்டு ஓடாதேடி” என்ற பாடலின் மூலம் தமிழ்த் திரையுலகில் அடியெடுத்து வைத்த டி.எம்.சவுந்தர ராஜன், ரசிகர்களை வசிய வைக்கும் குரலுக்குச் சொந்தக்காரர். பத்தாயிரத் திற்கும் மேற்பட்ட பாடல்களை தமிழ் திரைப்படங்களில் பாடியுள்ள டி.எம். சவுந்தரராஜன்,



தெலுங்கு மற்றும் மலையாள மொழித் திரைப்படங்களிலும் சில பாடல்களைப் பாடியுள்ளார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு பின்னணி பாடும்போது எம்.ஜி.ஆர் அவர்களின் குரலுக்கேற்ற வாறும், சிவாஜி கணேசன் அவர்களுக்கு பின்னணி பாடும்போது, சிவாஜி கணேசன் அவர்களின் குரல் போலவும், மற்ற நடிகர்களுக்குப் பாடும் போது அவரவரது குரலுக்கு ஏற்றவாறு தன் குரலை வித்தியாசப்படுத்தி பாடுவதிலும் வல்லவர் டி.எம்.எஸ். தமிழ் மொழியை அதற்கே உரிய அழகோடு உச்சரித்துப் பாடியவர். முருகக் கடவுள் மீது பக்திகொண்ட டி.எம். சவுந்தரராஜன், முருகப் பெருமான் மீதான ”கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்”, ”உள்ளம் உருகுதய்யா முருகா”, ”சொல்லாத நாளில்லை சுடர்மிகு வடிவேலா”, ”மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன்” போன்ற பல பாடல்களுக்கு தானே இசையமைத்து உள்ளம் உருக பாடி, முருக பக்தர்களின் மனங்களில் நீங்கா இடம் பிடித்தவர். ”நான் ஆணையிட்டால்”, ”அச்சம் என்பது மடமையடா”, ”நெஞ்சம் உண்டு நேர்மை உண்டு”, ”நாணமோ இன்னும் நாணமோ”, ”வசந்த முல்லை போலே வந்து”, ”மலர்ந்தும் மலராத”, ”ஆடலுடன் பாடலைக் கேட்டு”, ”நினைத்தேன் வந்தாய் நூறு வயது” போன்ற காலத்தால் அழியாத பாடல்களைப் பாடி ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். டிஎம்எஸ்ஸுடன் பாடிய அனுபவம் 'அன்பைத் தேடி“ என்ற திரைப்படத்தில் ”சித்திர மண்டபத்தில் சில முத்துக்கள் கொட்டி வைத்தேன்” என்று துவங்கும் பாடலிலும், 'சூரியகாந்தி“ என்ற திரைப்படத்தில் ”ஓ...மேரி தில் ரூபா” என்று துவங்கும் பாடலிலும் இவருடன் இணைந்து நான் பின்னணி பாடியது என் நினைவை விட்டு நீங்கா நிகழ்வாகும். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்த் திரையுலகில் பின்னணிப் பாடகராக விளங்கிய டி.எம். சவுந்தர ராஜன், 1960, 1970-களில் தமிழ்த் திரையுலகில் கொடிகட்டிப் பறந்தவர். இவர் போல இனியொருவர் இருக்கப் போவதில்லை... நகைச்சுவையானாலும், சோகர சமானாலும், காதல் உணர்வை வெளிப்படுத்தும் பாடலானாலும் அனைத்து உணர்வுகளையும் முழுமையாக வெளிப்படுத்தி பாடக் கூடியவர். இவரைப் போன்று முழுத் திறமைப் படைத்த பாடகர் ஒருவர் இவருக்கு முன்னரும் இருந்ததில்லை இனியும் இருக்கப் போவதில்லை என்று கூறுமளவுக்கு ஈடு இணையற்ற திறமை படைத்த ஒரு பின்னணிப் பாடகர் என்று சொன்னால் அது மிகையல்ல. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவராகத் திறம்படப் பணியாற்றியவர். எனது ஆட்சிக் காலத்தில் இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்தது. கலைமாமணி விருது உட்பட பல்வேறு விருதுகளுக்கு இவர் சொந்தக்காரர். டி.எம்.சவுந்தரராஜன் அவர்களின் மறைவு தமிழ் திரைப்படத் துறைக்கும், இசை ரசிகர்களுக்கும் மிகப் பெரிய இழப்பாகும். என்று கூறப்பட்டுள்ளது.




அன்று யாழ் நகரில் ஓர் மொக்கன் கடை! இன்று அதே சுவையுடன் டோட்மூண்ட் நகரில் ஓர் நானா கடை அதுதான்

Sweet Chilli

www.sweetchilli-do.de

Original Srilankisches & Indisches Restaurant
50 Sitzplätze
100%Halal 100%Frisch 100%Naturgewürze 100%Naturkräuter

இலங்கை புரியாணி (ஒரிஜினால்) கொத்துரொட்டி, இடியப்பகொத்து, புட்டுக்கொத்து, தோசை,மட்டன்றோல். பற்றிஸ் மற்றும் ஊர் ஆட்டிறைச்சிக் கறி, ரோஸ்கறி, கோழிக்கறி.அத்துடன் இந்திய உணவுவகைகள்,அனைத்தும் ஒரே கூரையின் கீழ் .தினமும் காலை 11.30 இருந்து மாலை 23.30 வரை

Tel: 0231 315 46 84
Rheinische str.60
44137 Dortmund

Herzlich Willkommen!
Buffet & Party Service






# சென்னையில் பைரவன் இசை வெளியீட்டு விழா!

## திரை கடல் தாண்டியும் இசைக் கடல் அசையட்டும், இதயங்கள் இசையோடு இசையட்டும் !

வெற்றிமணியுடன் இணைந்து ரி.பி.பி இந்த ஆண்டு வெளியிடப்போகும் மாபெரும் இசை "பைரவன்". ஏற்கனவே மாயவன், கள்வன் மூலம் இசை நெஞ்சங்களை இனிமையாய் இம்சை செய்து கொண்டிருக்கும் சஞ்சேயின் இசை பைரவனில் இன்னொரு பரிமாணத்தை எட்டியிருக்கிறது.

காதலும் காதல் சார்ந்த நிகழ்வுகளுமே இதயங்களைக் கட்டிப் போடுகின்றன. அந்தக் காதலின் ஒவ்வோர் உணர்வுகளையும் பாடல்களில் அள்ளி வந்திருக்கிறார்கள்.

தமிழ்த் திரையுலகின் முன்னணிப் பாடகிகளான "சாய்ந்து சாய்ந்து" புகழ் ரம்யா, "எக்ஸ் மச்சி, ஒய் மச்சி" புகழ் மாதங்கி இருவரும் இந்த இசைப் பேழையில் இணைந்திருக்கிறார்கள். அவர்களுடன் இணைந்து இந்த ஆல்பத்தில் இசை ராஜாங்கம் நடத்தியிருப்பவர்கள் சென்னையிலுள்ள புதுப் பாடகர்கள். ஷாலினி, முருகேஸ்வரி, நான்சி எனும் மூன்று பெண் குரல்களுடன், சதீஷ் எனும் ஆண் குரலும் இந்த ஆல்பத்தில் புதிதாக இணைந்திருக்கிறது. ரி.பி.பியின் தொடர் பங்களிப்பாளர்களான பாடகர்கள் சஜீத், ரோகிணி இவர்களுடன் ரி.பி.பி குழுவின் ஆஸ்தானப் பாடகரான எம்.சி.ஜீவா உணர்வுகளைப் பாடல்களில் வழியவிட்டிருக்கிறார்.

பாடல்களை சேவியர் மற்றும் பலர் எழுதியிருக்கிறார்கள். காதலின் துயரம் முதல் உயரம் வரையிலான பல்வேறு உணர்வுகளை வரிகளால் வரிந்து கட்டியிருக்கிறார்கள் பாடல் எழுதியவர்கள். அத்துடன் இந்த ஆல்பத்தின் பாடல்கள் பல வீடியோ ஆல்பங்களாவும் விழிகளுக்கு வியப்பளிக்கப் போகிறது என்பது கூடுதல் இனிப்பான செய்தி !

இந்த ஆல்பத்தின் வெளியீட்டு விழா செப்டம்பர் மாதம் ஜெர்மனியில் நடைபெற இருக்கிறது. இந்தியாவில் இதன் வெளியீடு இந்த ஆண்டு நவம்பர் மாதம் சென்னையில் நடைபெற இருக்கிறது. வெற்றிமணி -ரிபிபி குழுவின் ஆல்பம் ஒன்று சென்னையில் வெளியாக இருப்பது இதுவே முதல் முறை.

பத்தோடு பதினொன்றாக இந்த ஆல்பத்தை வெளியிடாமல் இந்த ஆல்பத்தின் வெளியீட்டை சமூக நல்லுறவுக்கான, சமூக முன்னேற்றத்துக்கான ஒரு சுவடாகவும் அமைக்க குழுவினர் முடிவெடுத்திருக்கிறார்கள். அதன் முக்கிய பாகமாக, விழாவின் மூலம் பெறப்படும் லாபம் முழுவதையும் சென்னையிலேயே உள்ள ஒரு சின்ன அனாதை இல்லத்தின் தேவைகளுக்காக செலவிட முடிவு செய்திருக்கிறார்கள்.

விழாவை மிகவும் வசீகரமாக நடத்த சென்னையின் பிரபல நடனக் குழுவினருடன் இணைந்து ரி.பி.பி குழுவினரும் கலை நிகழ்ச்சிகள், பாடல்கள் நடத்த உள்ளனர். அதில் திரையுலகைச் சேர்ந்த பிரமுகர்கள் சிலரும் கலந்து கொள்ள இருக்கிறார்கள். !

இசைக்கு திசைகள், நாடுகள், பருவங்கள் எல்லாம் சொந்தம். இசையை நேசிப்பவர்களுக்கு பைரவன் சொந்தம்.

திரை கடல் தாண்டியும் இசைக் கடல் அசையட்டும், இதயங்கள் இசையோடு இசையட்டும் !

வாழ்த்துகள்

**இனியன்.**

### ரி.பி.பி சென்னை பாடகர்கள் ஒரு சின்ன அறிமுகம்.

**ஷாலினி தேவனாதன்**

பைரவன் இசை ஆல்பத்தின் மூலம் அறிமுகமாகும் இளம் பாடகி. கணினி மென்பொருள் துறையில் பணியாற்றினாலும் சமூக சேவையில் அதிக ஈடுபாடு கொண்டவர். அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் போன்றவற்றைச் சென்று சந்திப்பதில் தொடர்ந்து இயங்கி வருபவர். இசையிலும், நடிப்பிலும், நடனத்திலும் ஆர்வம் அதிகம். குறும்படங்களில் நடித்த அனுபவம் உண்டு. பைரவன் ஆல்பத்தில் சஞ்சே அவர்களுடன் இணைந்து பாடக் கிடைத்த வாய்ப்பே மிகப்பெரிய அங்கீகாரம் என புளகாங்கிதம் அடைகிறார்.

**முருகேஸ்வரி**

வசீகரிக்கும் கிராமியக் குரலுக்குச் சொந்தக்காரியான முருகேஷ்வரிக்கு கிராமத்து வெள்ளந்தி மனசு. நன்றாக கைவரும் நடனம் அவருடைய இனிமையான பொழுது போக்கு. கணினி மென்பொருள் துறையில் பணியாற்றுகிறார். விளையாட்டு, இசை இரண்டும் அவருடைய இனிமையான தேடல்கள். பைரவன் இசை ஆல்பத்தில் பட்டை தீட்டப்பட்டதை கலை வாழ்வின் முதல் அங்கீகாரமாகக் கருதுகிறார். இசையிலும், வாழ்விலும் உயர்ந்த இடத்தை அடைவதே தனது இலட்சியம் என்கிறார்.

தொடர்ச்சி 29ம் பக்கம்




# கற்றல் குறைபாடுகளும் உளவியல் கணிப்பீடுகளும்!



Dr.புஷ்பா.கனகரட்ணம்.

கெட்டித்தனம் இருக்கு ஆனால் படிக்க கள்ளம், பஞ்சி சிநேகிதம் சரியில்லை, அது தான் படிக்கிறான் இல்லை் பிள்ளைக்கு ஒரே தலையிடி, அதுதான் படிப்பிலை கவனம் செலுத்த முடியேல்லை எந்த நேரமும் புத்தகமும் கையும், ஆனால் ஒரு முன்னேற்றமும் இல்லை! இப்படி பலர் தம் பிள்ளைகள் பற்றியோ, வேறு பிள்ளைகள் பற்றியோ விசனப்படுவதை கேள்விப் பட்டிருக்கிறோம். அடிப்படை பிரச்சனை என்ன வென்று தெரியாது விட்டால், பிள்ளைகளை குழப்படிகாரர், முட்டாள்கள் அல்லது சோம்பேறிகள் என்றுதான் கடிந்துகொள்ள வேண்டி இருக்கிறது.

பிள்ளைகளும், தமக்கு விவேகம் (intelligence) இருக்கிறதே, ஆனால் படிப்பு கடினமாக இருக்கிறதே என்று காரணம் தெரியாமல், தன்னம்பிக்கை இழந்து, வெட்கம், மன அழுத்தம், பதட்டம் என பல சிக்கல்களால் பாதை மாறி சென்றுவிட வழிவகை இருக்கிறது.

வயதிற்கு ஏற்ப அறிவு வளர்ச்சி இல்லை எனில் (mental retardation) நிச்சயமாக எம் எதிர்பார்ப்புகளை மாற்றிக்கொள்ளத்தான் வேண்டும். பிள்ளைக்கு இருக்கும் அறிவுநிலைக்கு தகுந்த ஊக்கத்தை கொடுத்து முன்னேற்ற வேண்டும். ஆனால், தகைமை (intelligence) இருந்தும் அதற்கு ஏற்ப பெறுபேறுகள் அமையாவிட்டால், அதற்கு வேறு காரணங்கள் இருக்கின்றனவா என ஆராயவேண்டி இருக்கிறது. பெற்றோர்கள் கொடுக்கும் அழுத்தம், சரியான வழிநடத்தல் இல்லாமை, குடும்ப சிக்கல்கள், தவறான நண்பர்கள் சகவாசம், உளவியல் தாக்கங்கள், இப்படி காரணம் எதுவாகவும் இருக்கலாம். இந்த காரணங்களோடு அல்லது இந்த காரணங்கள் தவிர்த்து கற்றல் குறைபாடுகளும் (Learning Disabilities) ஒரு காரணமாக இருக்கலாம்.

தகைமை இருக்கிறது, அதனை வெளிப்படுத்த முடியாமல் இருக்கிறது எனில், அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆற்றல் இருந்தும், தங்கள் பிள்ளை பாடசாலையில் சரியாக படிக்கிறார் இல்லை, அல்லது ஆற்றல் இருந்தும், நன்கு படித்தும், நல்ல பெறுபேறுகள் இல்லை என்றால், காரணம் ஒரு கற்றல் குறைபாடாக இருக்கலாம். இந்த விடயங்களை பிரித்து பார்த்து கணிப்பீடு செய்வதில் உளவியல் நிபுணர்கள் மிக முக்கிய பங்கை வகிக்கிறார்கள்.

கற்றல் குறைபாடுகள் என்றால் என்ன? தரப்படுத்தப்பட்ட தேர்வுகளில் ஒரு மாணவரின் செயல்திறன் (achievement), தன் வயது, பாடசாலை பயிற்சி, தகைமை என்பவற்றுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது, குறைவாக இருப்பின், அது ஒரு கற்றல் குறைபாடு என அடையாளப் படுத்த படுகிறது. வாசிப்பு, கணிதம், மற்றும் எழுதும் திறன் சார்ந்த கற்றல் பிரச்சனைகள், பாடசாலை பெறுபேறுகளையும், நடைமுறை வாழ்க்கையையும் பாதிக்கின்றன. துறை சார்ந்த உளவியல் நிபுணர்கள் (Psychologists) பயன் படுத்தும் தேர்வுகளின் மூலம் இந்த குறைபாடுகளை பிரித்தறிய முடியும்.

கற்றல் குறைபாடுகள் இருக்கும்போது, பிள்ளைகளிடத்தில் தன்மதிப்பு குறைபாடுகளும் மற்றவர்களுடன் பழகும் விதத்தில் சிக்கல்களும் இருக்கலாம். கற்றல் குறைபாடுகள் உள்ளவர்களிடம் கிட்டத்தட்ட 40% அளவுக்கு பாடசாலை மட்டம் அடிக்கும் பழக்கம் உள்ளதாக அறியப் படுகிறது. வேறு நடத்தை மற்றும் பழக்கம் சார்ந்த குறைபாடுகள் , மன அழுத்தம் போன்ற நோய் நிலைகள், கற்றல் குறைபாடுகளுடன் இணைந்து காணப்படலாம். மரபணு நிலைகள், நரம்பியல் மற்றும் உடல்நோய் நிலைகள், பிறப்பு சார்ந்த பாதிப்புகள் போன்றன கற்றல் குறைபாடுகளுடன் இணைந்து காணப்பட்டாலும், பொதுவாகவே குடும்ப வழிமுறை காரணங்கள் இன்றியே கற்றல் குறைபாடுகள் ஏற்படலாம்.

ஒரு கற்றல் குறைபாடு அடையாளம் காணப்படும் முன், வேறு காரணங்கள் ஏதாவது இதனை விளக்கக்கூடுமா என ஆராயப்படவேண்டும்.

உதாரணமாக, கற்றலுக்குரிய சந்தர்ப்பங்கள் அமையாமை, நல்ல கல்வியூட்டல் இல்லாமை, மற்றும் கலாச்சார காரணங்கள் கூட, பாடசாலை கல்வியில் சிக்கல்களை ஏற்படுத்தலாம்.

உதாரணமாக, சொந்த நாட்டில் பழக்கப்பட்ட கல்வியூட்டல் புலம்பெயர்ந்த நாட்டில் வேறுபடுவதால், இசைவாக்கம் அடைவது கடினமாக இருக்கலாம். பார்வை மற்றும் கேட்டல் குறைபாடுகள் இருக்கின்றனவா என ஆராயப்பட வேண்டும். அறிவுநிலை விருத்தி வயதுக்கு ஏற்ப இருக்கிறதா என அறியப்படவேண்டும் (mental retardation). Autism போன்ற விருத்தி வலுவீனங்கள் இருக்கும் போது, சம்பந்தப்பட்ட அந்த பிள்ளையின் விவேகம், கல்வியூட்டல் போன்ற காரணங்களுடன் பார்க்கையில் அவர் பாடசாலை கல்வி பெறுபேறுகள் குறைந்திருப்பின், ஒரு கற்றல் குறைபாடும் அவரில் அடையாளப்படுத்தப்படலாம். உளவியல் நிபுணர் தன் மதிப்பீட்டில் இத்தகைய பல காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்பே ஒரு கற்றல் குறைபாடு உள்ளதா இல்லையா என முடிவெடுப்பார்.

Gifted Assessments என்று ஒரு வகை இருக்கிறது. இது பிள்ளைகளின் தகைமை விருத்தி அசாதாரணமாக (அதிகூடிய அல்லது குறைந்ததாக ) இருக்கும்போது செய்யவேண்டிய மதிப்பீடு ஆகும். அதாவது, இத்தகைய பிள்ளைகள், தங்கள் வயதொத்த பிள்ளைகளைவிட சில விடயங்களில் அதீத கெட்டித்தனமானவர் களாகவும் சில விடயங்களில் பின்தங்கியவர் களாகவும் இருப்பார்கள். இவர்களுக்கு ஒரு சாதாரண பாடத்திட்டத்தின்படி கற்பிப்பது ஆசிரியர் களுக்கு கடினமாக இருக்கும். ஆசிரியர் கேட்கும் சில விடயங்களை இவர்கள் முன்கூட்டியே முடித்து விடுவதால், கல்வியில் சுவாரசியத்தை இழக்கக் கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. அதே நேரம் வேறு சில விடயங்களுக்கு இவர்களுக்கு அதிக உதவி தேவைப்படும். தகைமை சார்ந்த தரப்படுத்தப்பட்ட தேர்வுகளை இவர்களுக்கு கொடுப்பதன் மூலம், ஒரு உளவியல் நிபுணரால், இவர்கள் தகைமையின் அசாதாரண ஏற்ற தாழ்வுகளை அடையாளம் காண முடியும்.

சரி. ஒரு உளவியல் மதிப்பீடு என்ன நன்மையை தருகிறது? எந்த குறைப்பாடுமே, அடையாளப் படுத்தப்பட்டு, ஆவணப்படுத்தப்படும் போது தான் அதற்கு ஒரு பெறுமானம் இருக்கிறது. ஒரு மதிப்பீட்டின் முடிவில், வழங்கும் ஆலோசனைகள், பிள்ளையின் வருங்கால கல்வியில், பாடசாலைகளுக்கு தனிப்பட்ட கல்வியூட்டல் திட்டத்தை அமைக்க உதவுவதில் தனித்துவமான பங்கை வகிக்கிறது. உதாரணமாக, ஒரு பிள்ளைக்கு கேள்விஞானம் கடினமாக இருக்கலாம், அதுவே, படங்கள் அல்லது பார்வையால் பார்த்து கற்றல் என்பது இலகுவாக இருக்கலாம். அப்படியான பிள்ளைக்குலு தேர்வுகளை வித்தியாசமான முறையில் கொடுக்கும்படி உளவியல் நிபுணர் பரிந்துரைக்கலாம்.

தொடர்ச்சி 30ம் பக்கம்






# வெற்றிமணி ஆசிரியருடன் ஒரு சந்திப்பு!




வெற்றிமணி ஆசிரியர் சிவகுமரன் அவர்களுடன் ஒரு இனிமையான சந்திப்பு மேய் மாதம் 20ம் திகதி நடந்தது. சென்னை ரி.பி.பி குழுவினரைச் சந்திப்பதற்காக டாக்டர். சிவகுமரன் தனது துணைவியாருடன் எரிக்கும் சென்னை வெயிலையும் பொருட்படுத்தாது வந்திருந்தனர். சென்னை ரி.பி.பி குழுவினர் அவரை ஹோட்டலில் சென்று சந்தித்து சில மணி நேரங்கள் உரையாடினார்கள்.

முதல் பார்வையில் காதல் வரும் என்பது உண்மையா பொய்யா எனும் விவாதங்கள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் முதல் சந்திப்பிலேயே நெகிழும் அன்பைப் பரிமாறிக் கொள்ள முடியும் எனும் உண்மை அன்று நிரூபிக்கப்பட்டது. பதின் வயதுப் பையனுக்கே உரிய உற்சாகத்துடனும், தாகத்துடனும் டாக்டர். சிவகுமரன் அவர்களும், துணைவியாரும் குழுவினரோடு வயது வித்தியாசம் பாராமல் பழகியது குழுவினரை உற்சாகத்தின் எல்லைக்கே கொண்டு சென்றது.

ஓவியத்திலும், கவிதையிலும், பத்திரிகைத் துறையிலும் மிக உயர்ந்த இடத்தில் இருக்கும் டாக்டர் சிவகுமரன் அவர்களின் எளிமையும், இனிமையும் நண்பர்களின் இதயத்தையும், விழிகளையும் ஒரு சேர நனைத்தன. தனித்தனியே ஒவ்வொருவருக்கும் அவர் பகிர்ந்தளித்த பரிசுப் பொருட்கள், புத்தகங்கள், நட்பின் நெருக்கத்துக்கு இன்னும் வலுவூட்டியது. ஒரு தந்தையைப் போல உறுப்பினர்களிடம் அவர் காட்டிய நேசம் ஜென்மங்கள் தாண்டியும் கூட நினைவில் வாழும் வலிமை படைத்தது.

மீண்டும் இந்த ஆனந்த சந்திப்பு எப்போது நிகழும் எனும் ஏக்கத்துடன் அவருடன் பாதம் பணிந்து ஆசிவாங்கி, புகைப்படங்கள் எடுத்துக் கொண்டு அலுவலகம் கிளம்பினர் ரி.பி.பி குழுவினர். ∴

27ம் பக்கத் தொடர்ச்சி...

## சென்னையில் பைரவன்..

**சதீஷ்குமார் இளங்கோவன்**

கணினி மென்பொருள் துறைக்குச் சற்றும் பொருத்தமில்லாத தேடல்கள் சதீஷ்க்கு. திரைப்பட இயக்கம், புகைப்படக் கலை, திரைக்கதை வடிவமைப்பு போன்றவற்றில் அதீத ஆர்வம் உண்டு. சில குறும்படங்களை இயக்கி நடித்தது, மாரத்தானில் கலந்து கொண்டு ஓடுவது, ரோபோட்டிக் கைகளை வடிவமைப்பது என இவருடைய திறமைகளும், விருப்பங்களும் பரந்து பட்டவை. ஒரு திரைப்படத்தையாவது இயக்க வேண்டும் என்பது இவருடைய இலட்சியங்களில் இரண்டாவது. பைரவனில் பாடிய அசத்தல் உணர்வுகளுடன், ஏ.ஆர்.ரஹ்மான் இசையிலும் ஒரு பாடல் பாடிவிட வேண்டு மென்பது இவருடைய இலட்சியங்களில் முதலாவது.

**நான்சி ஆன்டனி**

தெளிவான தமிழ்க் குரலுக்கும், தமிழ் அறிவுக்கும் சொந்தக்காரியான நான்சியின் பூர்வீகம் கேரளா என்பது ஆச்சரியம். டெய்லரிங், டாட்டூ, ஆடை வடிவமைப்பு போன்றவற்றில் ஆசைகளை வைத்துக் கொண்டு அவர் பணிபுரிவது கணினி மென்பொருள் துறையில். பைரவன் தான் இவருக்கும் மகிழ்வான புது அனுபவம். வாழ்க்கையில் ஒரு porsche 911 கார் வாங்க வேண்டும் எனும் வித்தியாசமான ஆசையை மனதில் கொண்டிருக்கிறார்.





மாதம் மாதம் மாதரைக் கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்!

யேர்மனியில் பிராங்பேட் நகரில்...

Jaffna Basar

ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்க குறைந்த விலையில்
விமான பயணச்சீட்டுக்கள் மற்றும் இல்லத்திற்கு வேண்டிய
மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும்

Jaffna Basar Jewellery
Kaiserstr.64 (Laden Nr.22)
60329 Frankfurt am Main
உரிமையாளர் நடராஜா சுதன்

Tel: 069 25 62 63 53

யேர்மனியில் முல்கைம் நகரில்...

Jaffna Basar

இல்லத்திற்கு வேண்டிய மளிகைப் பொருட்கள்
கடல் உணவு வகைகள்
பசுமையான மரக்கறிகள்.

தொலைபேசி அட்டைகள்
சிம் காட்டுக்கள்

அனைத்திற்கும் நாடுங்கள்

Jaffna Basar
Kaiserstr.39
45468 Mülheim
Germany

Tel:02086 96 64 85
Tel:01787633084

# கொட்டும் மழையிலும் அம்பாள் அருள்வேண்டி திரண்டு நின்ற அடியார்கள்!







ஹம் காமாட்சி அம்பாள் வருடாந்த உற்சவ தேர் திருவிழா 26.5.2013 அன்று பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் தேவர்கள் பூமாரி பொழிய, கொட்டும் மழையிலும் பக்தர்களின் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓட அன்னை காமாட்சி அம்பாள் தேரிலே ஆரோகணித் எழுந்து வீதிவலம் வந்த காட்சி காணக் கோடி கண்கள் போதவில்லை .செய்தி: ஆன்மீகத்தென்றல்.த.புவனேந்திரன்.

28ம் பக்கத் தொடர்ச்சி

## கற்றல் குறைபாடுகளும் உளவியல் கணிப்பீடுகளும்!

எழுதுவது கடினமான பிள்ளைகளுக்கு, எழுத்து தேர்வுகளை தவிர்த்து, வாய்மொழி தேர்வுகள் கொடுக்கும்படி பரிந்துரைக்கலாம். சிலருக்கு கிரகிக்கும் தன்மை அல்லது வாசிப்பு கடினம் எனில், அந்த குறையை ஆவணப்படுத்தும் ஒரு மதிப்பீடு இருக்கும்போது, அந்த குறிப்பிட்ட பிள்ளைக்கு தேர்வுக்காக மேலதிக நேரம் வழங்கப்பட வேண்டும் என்று ஒரு பரிந்துரைப்பு இருக்கும் ஆயின், அதற்கமைய உதவிகளை செய்துகொடுப்பது சம்பந்தப்பட்ட பாடசாலையின் அல்லது பல்கலைக்கழகத்தின் கடமையாகிறது. அதனை அவர்கள் மறுக்கமுடியாது.

ஆற்றல்மிக்க பல குழந்தைகள், பிள்ளைகள், பாடசாலையில் தம் முழுத்திறமையை வெளிப் படுத்தமுடியாது இருக்கிறார்கள். மொத்தத்தில், ஒரு மாணவரின் முழு தகைமைகளையும் இயலுமான வரை வெளிக்கொணர்ந்து, அந்த மாணவரின் கல்விமேம்பாடுக்கும் வெற்றிக்கும் வழிசமைப்பதே கல்விசார்ந்த ஒரு உளவியல் மதிப்பீட்டின் நோக்கமாகும். இதனை நிறைவேற்றக்கூடிய துறைசார் நிபுணர்கள் உளவியல் நிபுணர்கள் மட்டுமே. இவர்களுக்கு தான் இந்த பயிற்சியும் இத்தகைய தேர்வுகளை கொண்டு நடத்தும் அனுமதியும் இருக்கிறது.

நம்மவர்கள் உளவியல் என்றதுமே தேவையற்ற அச்சம் கொள்வார்கள். "என்டை பிள்ளைக்கு "mental' எண்டு நினைச்சிடுவினம்" என்று பயப்படும் பெற்றோர்களை நாம் கண்டிருக்கிறோம். தம் பிள்ளைகளில் குறை இருக்கிறது என்று சொல்லிவிடுவார்களோ, தன் பிள்ளை முட்டாள் என்று சொல்லிவிடுவார்களோ என்ற பயமும் பெற்றோருக்கு இருக்கிறது. இது எல்லாம் காரணமற்ற பயமே. கற்றல் குறை உள்ளவர்கள் முட்டாள்கள் அல்ல. நம் மூளை மற்றும் மன தொழில்பாடுகளுக்கும் நடைமுறை வாழ்க்கைக் கும் உள்ள தொடர்பை பற்றிய கல்வியே உளவியல். அதனால், மனநோய் (mental illness) என்பது உளவியல் துறையின் ஒரு பகுதி மாத்திரமே. உளவியல் சாதாரண வாழ்க்கை முறையில் ஒரு முக்கிய பகுதியை வகிக்கிறது. கற்றல் குறை ஒரு மன நோய் அல்ல. இந்த பிள்ளைகள் முட்டாள்களும் அல்ல.


Milin Impex

Asiatische Lebensmittel Groß und Einzelhandel

யேர்மனியில் தலைமுறை, தலைமுறையாக தரமான ஆசிய, ஆபிரிக்க உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்களும், மொத்த, சில்லறை விநியோகஸ்தர்களும்.

யேர்மனியில் உங்களுக்குத் தேவையான எல்லா விதமான தரமான
இலங்கை,இந்திய,மற்றும் ஆபிரிக்கா உணவுப் பொருட்களைச் சிரமமின்றி
ஒரே இடத்தில் மலிவாகவும்,
மொத்தமாகவும்,சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே ஒரு 22 வருட அனுபவமிக்க நிறுவனம்.

Tel:0231 45 96 17 / 28



ஒவ்வொரு திங்களும் உடன் மீன்கள் எம்மிடம் கிடைக்கும்

FRISCH FISCH



சில்லறை வாடிக்கையாளர்களுக்கு ஓர் இனிய செய்தி!

எமது நிறுவனத்தின் 22 வது ஆண்டு நிறைவான 01.01.2013 இல் இருந்து சில்லறை வாடிக்கையாளர்களும், மொத்தவிற்பனை விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்து கொள்ளலாம். (100 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டும்)
மலிவு விற்பனை விபரங்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். Web :www.milinimpex.de

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen

Dortmund நகரில்
Westendorf Str.41
44287 Dortmund
Tel: 0231 45 96 17 /28
Fax: 0231 18 15 288

Wuppertal நகரில்
Aue-96
42103 Wuppertal
Tel: 0202 2999 58 69

Lüdenscheid நகரில்
Höch Str.8a
58511 Lüdenscheid
Tel:02351 9742131

Milin Impex

Mail:info@milinimpex.de

## திரை உலகம்

சென்னை: அதிக ரசிகர்களைப் பெற்றிருப்பதில் எம்.ஜி.ஆர்.-க்கு அடுத்து அஜித் தான் என நடிகரும், விமர்சகரும், மூத்த பத்திரிக்கையாளருமான சோ ராமசாமி தெரிவித்துள்ளார். பத்திரிக்கையாளரும் நடிகருமாகிய சோ ராமசாமி பொதுவாக பாராட்டுவதில் மிகவும் கறார் பேர்வழி.



# எம்.ஜி.ஆருக்கு அடுத்து அஜித்துக்குத் தான் அதிக ரசிகர் பட்டாளம் உள்ளது: சோ புகழாரம்!

விமர்சனமின்றி, குறைகளை சுட்டிக்காட்டாமல் அவர் யாரையும் இதுவரை பாராட்டியது இல்லை என்று கூறலாம். அப்படிப்பட்ட சோ தான் இன்று அஜீத் ரசிகர்கள் பற்றி இப்படி திருவாய் மலர்ந்துள்ளார்.
எம்.ஜி.ஆர் தான் பர்ஸ்ட் தல... எம்ஜிஆர் தான் பலராலும் இன்றும் போற்றப்படும் ரசிக்கப்படும் மிகப்பெரிய தலைவர் அவரால் மிகப்பெரிய அளவுக்கு ரசிகர் பட்டாளத்தை ஈர்க்க முடிந்தது. அவரை வழிபடவே செய்யத் தொடங்கிவிட்டனர் அவரது ரசிகர்கள்.
எம்.ஜி.ஆர்-க்கு அடுத்து அஜீத் தான்... அப்பேர்பட்ட எம்.ஜி.ஆர். போன்று இன்று அஜித் உள்ளார். மிகப்பெரிய ரசிகர்களை தன் பக்கம் ஈர்ப்பதில் எம்.ஜி.ஆர்.க்கு அடுத்தது அஜித் தான் ஆனாலும் எம்.ஜி.ஆர்.க்கு ஈடு இணை இல்லை" என கூறியுள்ளார் சோ.
அசத்திட்டீங்க தல... சோவிடம் இருந்து இப்படி ஒரு பாராட்டு பெறுவது வஷிடர் கையால் பிரம்மரிஷி பட்டம் பெறுவது போல் தான். அஜித் அரசியலில் எவருக்கும் இடஞ்சல் கொடுக்காதவர்! அதனால்தான் இந்தப்பாராட்டு!



## தனக்கு தனுஷ் மாதிரி கணவர் வேண்டும்!

தனுஷ் உடன் முதன் முதலாக ஒரு படத்தில் நடித்துள்ள சோனம் கபூர், தனக்கு தனுஷ் மாதிரி கணவர் வேண்டும் என்று கூறியுள்ளார். தனுஷ் ஒரு அப்பாவி எனவே தமிழ்நாட்டிற்கு வந்து தனுஷ் மாதிரியான மாப்பிள்ளை ஒருவரை தேடிப்பிடித்து திருமணம் செய்து கொள்வேன் என்றும் பேட்டி கொடுத்துள்ளார். இந்தியில் தனுஷ் முதன்முதலாக நடித்துள்ள படம் ராஞ்சனா. இப்படத்தில் தனுசுக்கு ஜோடியாக நடித்திருப்பவர் சோனம் கபூர். இருவரும் பள்ளி மாணவர்கள் கெட் அப்பில் நடித்துள்ளனர். ராஞ்சனா படம் பற்றியும், அதில் தனுசுடன் நடித்த இனியமையான அனுபவங்களை மும்பை மீடியாக்களில் பகிர்ந்து கொண்டு வருகிறார். அப்போதுதான் தனக்கு கணவராக வருகிறவர் தனுஷ் மாதிரியே இருக்க வேண்டும் என்று பரபரப்பு பேட்டி அளித்துள்ளார்.
அப்பாவி தனுஷ் இந்த படத்தில் ராஞ்சனா என்றால் அது தனுஷ்தான். அவரைப்போன்று யாருமே கிடையாது. அப்பாவித்தனமான அவர் பழகுவதற்கு ரொம்ப இனிமையானவர். அவருடன் பழகின பிறகுதான், தனக்கு எதிர்காலத்தில் இவரை மாதிரியான ஒருவர்தான் மாப்பிள்ளையாக வரவேண்டும் என்ற முடிவுக்கே வந்து விட்டேன் என்று கூறியுள்ளார்.
தமிழ்நாட்டு மாப்பிள்ளை அதோடு நிற்காமல் தமிழ்நாட்டுக்கு சென்று தனுஷ் மாதிரியான ஒருவரைத்தான் தேர்வு செய்வேன் என்று நினைக்கிறேன் என்றும் அந்த பேட்டியில் கூறியுள்ளார் அனில் கபூரின் மகள் சோனம் கபூர். ராஞ்சனா திரைப்படம் தமிழில் அம்பிகாபதி என்ற பெயரில் வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டு தனுஷ்கள் ஆயத்தமாக இருங்கப்பா! இதே போல முன்னர் பாலும் பழத்தில் சரோஜாதேவி சிவாஜியுடன் நடித்துவிட்டு தனக்கு பாலும் பழமும் படத்தில் வரும் டாக்டர் சிவாஜிபோல் ஒரு அன்பான கணவன் வேண்டும் என்றார். அதன்படி ஒரு அன்பான டாக்டரையே மணந்தார்.

## தனுஷ் நெகிழ்ந்து போயுள்ளாராம்.

சென்னை: ஜூனியர் என்.டி.ஆர். நடித்து சூப்பர் ஹிட்டான தெலுங்கு படமான பாத்ஷா தமிழ் ரீமேக்கில் தனுஷை நடிக்க வைக்க ரஜினிகாந்த் முயற்சி செய்து வருகிறாராம். ஜூனியர் என்.டி.ஆர்., காஜல் அகர்வால் நடித்த தெலுங்கு படமான பாத்ஷா சூப்பர் டூப்பர் ஹிட்டானது. இந்த படத்தைப் பார்த்த ரஜினி ரொம்பவே இம்பிரஸ் ஆகிவிட்டாராம். ரஜினி பாத்ஷாவை புகழ்ந்ததைப் பார்த்து அவர் தான் அதன் தமிழ் ரீமேக்கில் நடிப்பார் என்ற பேச்சு அடிபட்டது. இந்நிலையில் இந்த படத்தை தமிழில் ரீமேக் செய்து அதில் தனது மருமகன் தனுஷை நடிக்க வைத்தால் அவருக்கு ஒரு பெரிய ஹிட் கிடைக்குமே என்று நினைத்து அதன் உரிமையை வாங்க முயற்சி செய்து வருகிறாராம்.



பாத்ஷாவை தமிழ் மற்றும் இந்தியில் வெளியிடவும் ரஜினி திட்டமிட்டுள்ளாராம். தனது மாமனாருக்கு தன் மீது தான் எவ்வளவு அக்கறை. தனக்கு ஒரு சூப்பர் ஹிட் படம் கொடுக்க இவ்வளவு கவனம் எடுக்கிறார் என்று தனுஷ் நெகிழ்ந்து போயுள்ளாராம்.



19 வருட சேவையில் தங்கமாய் ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்

LITTLE INDIA

Textile & Jewellery

அழகான ஆடைகளுக்கும் பஞ்சாபி வகைகளுக்கும் தங்க நகைகளுக்கும் பெயர் பெற்ற ஸ்தாபனம்

LITTLE INDIA

02131 273692



Little India வின் மற்றுமொரு சேவை

EurAsian - Tours

அனைத்து விமானச் சீட்டுக்களையும், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள். India Visa பெறவும் உதவி செய்வோம். அத்துடன் தங்குமிட வசதி, Tour Bus ஒழுங்குகள் செய்து தரப்படும். முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு ஆசனங்களைப் பதிவு செய்யலாம்.

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84

Rishi 0174 96 44 965

info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy



Eurasian Tours
Adolf - flecken -Str.11
41460 Neuss



ASIA BAZAR

Ria Money Transfer

MoneyGram International Money Transfer

உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்ப வேண்டுமா! இதோ!!!
துரித பண மாற்றுச் சேவை!

ஆசிய, ஆபிரிக்க உணவுவகைகள் வியாழன்சனிக்கிழமை தோறும் இலங்கை, இந்திய உடன் மரக்கறிவகைகள் கடல் உணவுப் பொருட்கள். இன்னும் பல...

தீபம்

உரிமையாளர்: பா.கனேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

தீபம் தொலைக்காட்சி அட்டைகள் எம்மிடம் கிடைக்கும்

யேர்மனியில் டோட்மூட் நகரில் சுவையான உணவிற்கு



தரமும் சுவையும் தரும்...

Tel:0231- 7252859

CEYLON IMBISS
இலங்கை உணவகம்

இலங்கை, இந்திய, உணவுகள், தரம் குன்றாத சுவையுடன் கிடைக்கும்!

திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை

Annen Str.1
44137 Dortmund

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen



T.Mohanadas

Jasmine Silk House

2013 ம் ஆண்டுக்கான புத்தம் புது வரவுகள்

அலை அலையாகச் சேலைகள் வந்து குவிந்துள்ளன!

இந்தியாவுக்குச் சென்று எதனை வாங்க நினைக்கின்றீர்களோ அதனை எம்மிடமே தெரிவு செய்யலாம்!



ஜஸ்மின் சில்க் ஹவுஸ்

Tel:02102 844744

StaR - Impex

StaR-Impex

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!

StaR Impex Gutschein

எம்மிடம் 100 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தடவை ஒரு முத்திரை பதிக்கப்படும். இவ்வாறு 10 முத்திரை நீங்கள் பெற்றபின் எம்மிடம் இருந்து 50 யூரோவிற்கான Gutschein ஒன்று வழங்கப்படும். (இச்சலுகை நேரடியாக உடன் பணம் செலுத்துபவர்களுக்கு மட்டுமே)

கடல் உணவு வகைகள் மற்றும் பசுமையான மரக்கறிகள் வாரவாரம் உடனுக்குடன் இறக்குமதி செய்கின்றோம்!



Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00

தரமான முத்திரை பதித்த தயாரிப்புக்களான
Niru,Kings,NGR, Rabeena, Suriya,Vaani,Leela,TRS
பொருட்கள் எம்மிடம் நியாயவிலையில் கிடைக்கும்!

Kipper str.Tor.3
44147 Dortmund
Germany

Tel.: 0231/8602696

StaR Impex : Inh :K.Sivasubramaniam

Mobil: 0172/2183703- Fax: 0231/8602698
E-Mail: star-impex@live.de - Web.Star-impex.net


Dortmund நகரில் வெற்றிமணி விழா 14.09.2013